# கல்கி




KALKI பிப்ரவரி 7, 1954

4 அணா



# மூன்று மணி நேரத்தில் நான் ஒரு அதிசயத்தைச் செய்யவேண்டியிருந்தது!

மத்தியான வேளையில் வெப்பம் தாங்காமல் சற்று கண் அயர்ந்தேன். அப்பொழுதுதான் ஆபீஸ்பையன் கதவைத்தட்டி ஒரு சீட்டைக் கொடுத்துவிட்டுப் போனான். அடபாவமே! என் கணவர் அவரது மேலதிகாரியை சாப்பாட்டிற்கு அழைத்துவருகிறாராம்! அவர்கள் சாப்பிடவர சரியாக மூன்று மணி நேரம் தானிருந்தது. நான் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தேன்.

அச்சமயம் தபால்காரன் ஒரு பெரிய கவரை என்னிடம் கொடுத்துவிட்டுப்போனான். அதனுள் புத்தம்புதிய டால்டா சமையல் புத்தகம் காட்சி அளித்தது. சமய சஞ்சீவிபோல் அப்புத்தகத்தில் சீக்கிரமே தயாரிக்கமுடிகிற பிரத்தியேக தின்பண்டங்களின் செய்முறைக் குறிப்புகள் பல இருந்தன. உடனே சமையலறைக்குச் சென்று டால்டா வனஸ்பதி உபயோகித்து அவசர அவசரமாக தின்பண்டங்களைத் தயாரித்தேன்.

நான் பட்ட சிரமத்திற்கு சீரிய பலன் கிடைத்தது. சாப்பிடும்போது என் கணவரின் முகம் பெருமையால் பூரித்தது. அந்த மேலதிகாரி என் சமையலை புகழ்ந்து பேசினதை நீங்கள் கேட்டிருக்கவேண்டும்.

டால்டா வனஸ்பதி தின்பண்டங்களின் இயற்கைருசியை வெளிக்கொண்டுவருகிறது. பொரித்தல், தாளித்தல், தித்திப்புப் பண்டம் தயாரித்தல் இவைபோன்ற எல்லா சமையல் வேலைகளுக்கும் டால்டா வனஸ்பதி பயன்படுகிறது. மேலும் டால்டா வனஸ்பதியில் இப்பொழுது விடமின் 'ஏ' 'டி' இருக்கிறது.

கடையில் சில்லறையாக விற்கப்படும் தாவரக் கொழுப்பை வாங்குவது அபாயகரமானது. ஏனென்றால் மிகவும் விலையுயர்ந்த கொழுப்பும் கலப்படம் செய்யப்பட்டதாக இருக்கலாம். மேலும் எப்பொழுதுமே திறந்து வைத்திருப்பதால் தூசிபடிந்ததாகவும், ஈமொய்த்ததாகவும் இருக்கலாம். இதை சாப்பிட்டால் வியாதிவர கேட்கவாவேண்டும்?

ஆரோக்கியமாயிருக்க ஒவ்வொருவருடைய உணவிலும் தேவையான சுத்தமான கொழுப்பை டால்டா வனஸ்பதி அளிக்கிறது. காற்றுப் புகாத சீல் செய்த டின்களில் கிடைக்கும் டால்டா வனஸ்பதியையே கேட்டு வாங்குங்கள். இது 10 பவுண்டு, 5 பவுண்டு, 3 பவுண்டு, 1 பவுண்டு டின்களில் தேவைக்குத் தகுந்தபடி கிடைக்கிறது. இன்றே ஒரு டின் வாங்குங்கள்.

படங்கள் கொண்ட டால்டா சமையல் புத்தகம் தமிழ், ஹிந்தி, வங்காளி, ஆங்கிலம் என்ற பாஷைகளில் கிடைக்கிறது. 300 செய்முறைக் குறிப்புகள், சமையலறை பராமரிப்பு, ஊட்டம் முதலானவைகளைப்பற்றிய விவரங்களடங்கிய இப்புத்தகத்தின் விலை ரூ. 2/- தான். தபால் செலவு அணா 12 தனி. உங்கள் பிரதிக்கு இன்றே எழுதுங்கள்:

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1.



மர அடையாளமுள்ள டின்னைப் பார்த்து வாங்குங்கள்.

# டால்டா வனஸ்பதி

சிறந்த சமையல் — குறைந்த செலவு

HVM. 210-50 TM

# கல்கி பொருளடக்கம்


இதழ் 28 மலர் 13 | 1954 பிப்ரவரி 7 | விஜய வருஷ தை 25



| | | |
|---|---|---|
| வார்த்தையும் வியாக்யானமும் | (தலையங்கம்) | ... 3 |
| பிரச்னை தீரப் புதிய வழி! | (கார்ட்டூன்) | ... 4 |
| கொரியாவில் கறையான்கள் தொல்லை | ... | ... 4 |
| நவ பாரதத்தில் யுவர்கள் சேவை | ... | ... 6 |
| ஒரு காரமான கடிதம் | ... | ... 6 |
| அட்டைப்பட விளக்கம் | ... | ... 7 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | ... 9 |
| சோதிட அநுபவங்கள் | ... | ... 19 |
| அகில இந்திய எழுத்தாளர் மகாநாடு | ... | ... 24 |
| சைக்கிள் தொழிற்சாலை | ... | ... 26 |
| புத்தி வந்தது! (பாப்பா மலர்) | குண்டுமணி | ... 28 |
| நள்ளிரவிலே | கமலம் | ... 33 |
| படித்துப் பாருங்கள்! | ... | ... 36 |
| புறு கண்ட புதுமை | விதுரன் | ... 39 |
| மனோரமா | ரமண்லால் வசந்தலால் தேசாய்-ரா.வீ. | ... 43 |
| யாருக்குக் கல்யாணம்? | கோமதி சுப்பிரமண்யம் | ... 53 |
| தேன் மொழியாள் | பகீரதன் | ... 58 |
| கண்ணுசாமியின் அதிர்ஷ்டம் | எஸ். டி. சீனிவாசன் | ... 69 |


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


காணத்தவறாதீர்கள்

சென்னை ஒற்றைவாடையில்

14-2-54-ந் தேதி

ஞாயிற்றுக்கிழமை வரையில்தான்

★

"தி ஸ்டேஜ்" அளிக்கும்

நவாப் ராஜமாணிக்கத்தின்

மதுரை தேவி பால விநோத சங்கீத சபையாரின்

ஸ்ரீமத் சம்பூர்ண

ராமாயணம்

நவாப் ராஜமாணிக்கமே

ஆஞ்சநேயராகத் தோன்றுவார்

(தினசரி மாலை 6-30க்கு)

★

★ பணத்திற்காக எழுதப்பட்ட காவியம் அல்ல

★ பல பெரியோர்கள் பார்த்துப் பிரமிப்படைந்த நாடகம்

★ 75 சீன்கள் கொண்டதோர் அற்புத நாடகம்

★ 166 தினங்கள் வெற்றிகரமாய் ஓடிய நாடகம்




சென்னை, திருவல்லிக்கேணி ஜெனரல் ஸ்டோர்ஸ் ஸ்ரீ வி. கணேசன் அவர்களின் குமாரி சௌபாக்கியவதி லக்ஷ்மிக்கும், ஸ்ரீ ஆர். ராமச்சந்திர ஐயர் (போஸ்டல் ஆடிட்) அவர்களின் குமாரன் சிரஞ்சீவி ஆர். விசுவநாதன் B.Sc.க்கும், ஜனவரி 24ல் மயிலாப்பூர் எட்வர்ட் எலியட்ஸ் ரோடில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. முகூர்த்தத்துக்கும் மாலை வரவேற்புக்கும், நண்பர்களும், உறவினர்களும், பிரமுகர்களும் விஜயம் செய்தனர். கோவை, சிந்தாமணி பிரதர்ஸ் நாதஸ்வரக் கச்சேரியும், ஜி. என். பி. கச்சேரியும் நடைபெற்றன.

# அரவிந்த்

## உயர் ரகத்துணிகள்

இப்பொழுது

•SANFORIZED• REGD.

(ஸான்பொரைஸ்ட்) ஏற்கனவே சுருக்கப்பட்ட

ஷர்டிங்குகள் - பாப்லின்கள் - கோட்டுத்துணிகள்

மற்றுமுள்ள

சிறப்புவாய்ந்த பல-வர்ணங்

களிலுள்ள ப்ரின்டுத்துணிகள்

வாயல்கள் - கேம்ப்ரிக்குகள் - பாப்லின்களும்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

Arvind

QUALITY FABRICS

அரவிந்த் மில்ஸ் லிமிட்டெட்,

அஹமதாபாத் - 2.

---

ஏஜண்டுகள் :

அஜித் பாய் ஜயந்திலால் & கம்பெனி

5, டெங்கு தெரு, சென்னை-76, கீழ மாசி வீதி, மதுரை & விஜயவாடா

யு. என். ஷர்மா

சிக்பெட், பெங்களூர் சிட்டி

கணேஷ்மல் பிரதாப்மல் & கம்பெனி

கார் தெரு, பெல்லாரி

நாக்ஜி புருஷோத்தம் & கம்பெனி லிமிடெட்

பெரிய கடைத் தெரு, த. பெ. 36, கோழிக்கோடு

கல்கி

மலர் 13 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 28

# வார்த்தையும் வியாக்யானமும்

மனிதர் செய்யும் சட்டத்தில் உள்ள வாக்கியம் முக்கியமா? அல்லது சட்டத்தின் நோக்கம் முக்கியமா?

இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க மகா கவி ஷேக்ஸ்பியர் உணர்ச்சி ததும்பும் ஒரு நாடகமே எழுதி விட்டார்.

அதாவது சட்டத்தில் உள்ள வாசகங்களை விபரீதமாக வியாக்யானம் செய்யாமல் தாராள மனப்பான்மையுடன், இரக்க உணர்ச்சியுடன் அமுல் நடத்த முற்பட வேண்டும் என்பதே அவர் எழுதிய நாடகத்தின் கருத்து.

அதுபோலவே, இரு சாரார் பரஸ்பரம் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் உள்ள ஷரத்துக்களும் சட்ட விதிகள் போன்றவையே.

ஒப்பந்தத்தின் வாசகத்தைக் காட்டிலும், ஒப்பந்தத்தின் நோக்கம்தான் முக்கியம்; ஒப்பந்தத்தைத் தாராள மனத்துடன் அமுல் நடத்துவதுதான் முக்கியம் ஆகும்.

சில தினங்களுக்கு முன் புது டில்லியிலே ஏற்பட்ட இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தின் வாசகங்களைக் காட்டிலும், அதன் நோக்கமே பிரதானமானது.

*இலங்கையில் உள்ள பத்து லட்சம் இந்தியர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்; அதன் பலனாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நீடித்த நட்பு நிலைபெற வேண்டும்.*

இந்த முக்கியமான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இலங்கைப் பிரதமர் சர் ஜான் கொத்தலாவலையும் மற்ற இலங்கை மந்திரிகளும் புது டில்லிக்கு விஜயம் செய்வதாகக் கூறப்பட்டது.

எனவே, புது டில்லியில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் வாசகம் தெளிவாக இல்லாவிட்டாலும், அதை அமுல் நடத்தும் விஷயத்தில் இலங்கை சர்க்கார் நல்ல எண்ணத்துடன், இலங்கை இந்தியர்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கைக்கு இடமிருந்தது.

ஏற்கெனவே, ஜவாஹர்லால்ஜிக்கும் இலங்கை முன்னாள் பிரதமர் ஸ்ரீ டட்லி சேனநாயகாவுக்கும் நடந்த பேச்சு வார்த்தைகளின் பலனாக நாலரை லட்சம் இந்தியர்களுக்கு யாதொரு ஆட்சேபணையுமின்றிப் பிரஜா உரிமை அளிக்கப்படலாம் என்று பத்திரிகைச் செய்திகள் கூறின.

எனவே, புது டில்லியில் இப்போது ஏற்பட்ட ஒப்பந்தம் இன்னும் அதிக தாராள நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே ஏற்பட்டிருக்க வேண்டுமென்று பலரும் நம்பினர்; இன்னும் நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

புது டில்லி ஒப்பந்தத்தில் இலங்கை இந்தியர்களில் எத்தனை பேருக்குப் பிரஜா உரிமை அளிக்கப்படும் என்பதைத் திட்டமாகக் குறிப்பிடவில்லை.

எனவே, இலங்கை இந்தியர்களில் பெரும்பாலோருக்கும் பிரஜா உரிமை கிடைக்க வழி பிறந்து விட்டது என்றே நம்ப வேண்டி யிருந்தது.

ஆனால் இப்போது இலங்கைப் பிரதமர் சர் கொத்தலாவலை பேசுவதைப் பார்த்தால் அந்த நம்பிக்கை குன்றி வருகிறது.

குறிப்பிட்ட காலத்துக்குள் இந்தியப் பிரஜையாக விரும்பும் இலங்கை இந்தியர்களுக்கு, இந்தியா செல்லுவதற்குப் பிரயாணச் செலவும் ஈடுத் தொகையும் கொடுக்கப்படும் என்று இலங்கைப் பிரதமர் கூறுகிறார்.

அவ்விதம் இந்தியப் பிரஜையாக விரும்பாதவர்களுக்கு, இந்தியாவுக்குப் பணம் அனுப்பும் வசதி அறவே மறுக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியப் பிரஜை யாகும்படி எவரையும் வற்புறுத்தக் கூடாது என்று புது டில்லி ஒப்பந்த ஷரத்துகளில் ஒன்று கூறுகிறது.

அப்படியிருக்க, பணம் அனுப்பும் வசதி மறுப்பது, ஒப்பந்தத்துக்கு முரணாக இந்தியப் பிரஜையாகும்படி வற்புறுத்துவதே யாகும் அல்லவா?

பிரச்னை தீரப்.....




இலங்கையின் நலனை உத்தேசித்து, அவ்வப்போது பொருளாதாரத் துறையில் இலங்கை சர்க்கார் தங்கள் இஷ்டப்படி நடவடிக்கை எடுப்பதை ஒப்பந்தம் தடுக்கவில்லை என்றும் இலங்கைப் பிரதமர் கூறியிருக்கிறார்.

இந் நிலையில் இலங்கை இந்தியர் காங்கிரஸ் தலைவர்கள் புது டில்லி ஒப்பந்தத்தை உற்சாகத்துடன் வரவேற்காததைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

அதற்கு மாறாக, மேற்படி ஒப்பந்தமும் இலங்கைப் பிரதமரின் வியாக்யானங்களும் அவர்களுக்கு மிகுந்த கவலையையும் கலக்கத்தையும் கொடுத்திருக்கின்றன.

ஒப்பந்தத்தின் பலனாக நம்பிக்கை அளிக்கக் கூடிய புதிய நிலைமை எதுவும் ஏற்படவில்லை என்று இலங்கை இந்தியத் தலைவர்கள் கருதுவதை யாரும் தவறென்று கூற முடியாது.

புது டில்லி ஒப்பந்தத்தை இலங்கை மந்திரி சபை அங்கீகரித்துள்ளது. இலங்கைப் பார்லிமெண்டும் அதை அங்கீகரிக்கலாம்.

# கொரியாவில் கறை

கறையான்களால் உலகத்துக்கு ஏற்படும் நஷ்டம் மிகவும் அதிகம் என்று ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகின்றனர். ஒருவகைக் கறையான்கள் உலக அமைதிக்கே குந்தகம் விளைவிப்பதை இப்போது பிரத்தியட்சமாகப் பார்த்து வருகிறோம்.

அந்தக் கறையான்கள், கொரியா சம்பந்தமாக ஏற்பட்ட சமாதான ஒப்பந்தத்தை அரித்துத் தின்னத் தொடங்கி யிருக்கின்றன.

கொரியா யுத்தம் நின்று சமாதானம் ஏற்படுவதற்கு, போர்க் கைதிகள் பிரச்னையே பெரும் முட்டுக் கட்டையாக இருந்து வந்தது. அப் பிரச்னை தீருவதற்காக ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேறிய தீர்மானத்துக்கு இணங்க, இந்தியாவின் தலைமையில் நடுநிலைமைக் கமிஷன் நியமிக்கப்பட்டது. இருதரப்பிலும் உள்ள யுத்தக் கைதிகளுக்கு விளக்கம் கூறி, அவர்கள் எங்கு செல்ல விரும்புகிறார்களோ அவ்விடத்துக்கு அவர்களை அனுப்பி வைப்பதே நடுநிலைமைக் கமிஷனின் கடமை. கமிஷனுக்கு உதவியாக ஐயாயிரம் இந்தியத் துருப்புகள் கொரியாவுக்கு அனுப்பப்பட்டன.

கைதிகளை அவரவர் கோரும் இடத்துக்கு அனுப்பிய பின், சம்பந்தப்பட்ட தேசங்களின் பிரதிநிதிகள் அடங்கிய அரசியல் மகாநாட்டைக் கூட்டி, கொரியா சம்பந்தமான மற்றெல்லாப் பிரச்னைகளையும் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டிருந்தது.

கொரியாவில் மேற்கொண்டு ஏற்படக் கூடிய நரபலியைத் தடுத்து, உலக அமைதிக்கு வழிகோல வேண்டும் என்ற உன்னத லட்சியத்தை மனதிற் கொண்டே இந்தியா அந்தப் பெரும் பொறுப்பை ஏற்றது. கோர யுத்தக்களமாக இருந்த கொரியாவில் சாந்தி நகரை நிறுவியது.

லெப்டினன்ட் ஜெனரல் திம்மய்யாவின் தலைமையில் நடுநிலைமைக் கமிஷனின் அலுவல்கள் ஆரம்பத்தில் சில தினங்கள் வரையில் ஒழுங்காக நடைபெற்றன. ஆனால், பிறகு கைதிகள் முகாமில் கறையான்கள் புகுந்து கொண்டன. சிங்மென் ரீயின் ஆட்களும், சியாங்கை ஷேக்கின் ஆட்களும் கைதிகளிடையே கள்ளத்தனமாகப்

மேற்படி ஒப்பந்தத்தை இந்திய சர்க்கார் அங்கீகரிக்குமுன், தங்களுடைய கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்று இலங்கை இந்தியத் தலைவர்கள் நேருஜியைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நேருஜியும் தாம் பிப்ரவரி மாதம் 7-ந் தேதி திருவனந்தபுரத்தில் அவர்களுக்குப் பேட்டி அளிப்பதாக வாக்கு அளித்துள்ளார்.

அவர்களுடைய பேட்டியின் பலனாக, மூடு மந்திரமாக இருக்கும் ஒப்பந்த விவரங்கள் தெளிவடையும் என்று நம்புகிறோம்.

புது டில்லியில் ஏற்பட்ட ஒப்பந்தம் வெறும் கண் துடைப்பு ஒப்பந்தமாகிவிடக் கூடாது; மறுபடியும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்ட கதையாகிவிடக் கூடாது.

அந்த ஒப்பந்தம், இலங்கையின் நில வளத்துக்காகத் தலைமுறை தலைமுறையாய் உழைத்து வந்துள்ள இலங்கை இந்தியர்களுக்கு நீதி வழங்கும் உண்மைச் சாசனமாகத் திகழும்படி இலங்கை சர்க்கார் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம்.

# யான்கள் தொல்லை

பிரவேசித்து, கமிஷனின் அலுவல்கள் நடைபெற முடியாமல் முட்டுக் கட்டை போடத் தொடங்கி விட்டார்கள். அதன் விளைவாக, குறிப்பிட்ட தேதிக்குள் கைதிகளுக்கு விளக்கம் கூறும் படலம் முடிவது அசாத்தியமாகி விட்டது.

அதற்கு மேல் இரு தரப்பாருடைய சம்மதமின்றிக் கமிஷன் எதுவும் செய்வதற்கில்லை. எனவே, இந்தியத் துருப்புகள் மீதியுள்ள பதினுயிரக் கணக்கான கைதிகளை அவரவர்கள் ஏற்கெனவே இருந்த இடத்துக்கே திருப்பி அனுப்பி விட்டுத் திரும்புவதைத் தவிர வேறு வழியில்லை.

கொரியாப் பிரச்னையில் மறுபடியும் மோசமான நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்காக ஐ. நா. சபையைக் கூட்ட வேண்டும் என்று மேற்படி சபைத்தலைவர் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி செய்த நன் முயற்சி வெற்றி பெறாதது வருந்தத்தக்கது.

வல்லரசுகளின் தயவை நாடும் இரண்டொரு நாடுகளைத் தவிர மற்ற எல்லா ஆசியா நாடுகளும் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மியின் கோரிக்கையை ஆதரித்தன. அதற்குச் சாதகமாக ருஷ்யா உள்பட இருபத்திரண்டு நாடுகளும், பாதகமாக இருபத்தெட்டு நாடுகளும் வாக்குக் கொடுத்தன.

இதன் விளைவாக, கொரியாப் பிரச்னை பழைய நிலைக்கு வந்து விட்டது.

எனினும் தர்மசங்கடமான நிலைமையில் அந்த நாட்டுக்குச் சென்ற ஜெனரல் திம்மய்யாவும் இந்தியத் துருப்புகளும் அங்கு நடந்து கொண்ட முறையைப் பாராட்டாதவர் இல்லை.

ஏற்கெனவே, கைதிகள் முகாம் அமெரிக்கக் காவல் துருப்புகளின் மேற்பார்வையில் இருந்த போது அங்கு அடிக்கடி பெரும் கலகங்கள் ஏற்பட்டு நூற்றுக் கணக்கானவர்கள் பலியாக நேர்ந்ததை யாரும் மறந்திருக்க முடியாது.

ஆனால் சந்தேகமும், துவேஷமும், வெறியும் கொண்ட கைதிகளை இந்தியத் துருப்புகள் யாதொரு அசம்பாவிதமும் ஏற்படாமல் சாத்விக முறையைக் கைக்கொண்டே சமாளித்து வந்தார்கள். அதன் காரணமாக, உலகப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குக் காந்திஜியின் வழியே சிறந்தது என்பது மேலும் உறுதியாகியிருக்கிறது.



# நவ பாரதத்தில் யுவர்கள் சேவை

இன்றைய இந்திய யுவர்கள் தாங்கள் வருங் காலத்துப் பிரஜைகள், தலைவர்கள், சுதந்திர பாரதத்தின் காவலர்கள், நாட்டின் மகத்தான நிர்வாகப் பொறுப்பை ஏற்க வேண்டியவர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

அவர்களுடைய கடமையை, பிரதம மந்திரி நேருஜி புது டில்லியிலே நடந்த தேசிய யுவர் படையின் வருடாந்தரக் கூட்டத்தில் வற்புறுத்தினார். அந்தப் படையின் அணிவகுப்பின் விமரிசையை, இந்திய சர்க்கார் மந்திரிகள், முப்படைத் தலைவர்கள், எகிப்திய ராணுவ கோஷ்டியினர் முதலியவர்கள் கண்டு களித்தார்கள்.

யுவர் படையினர் இளைஞர்களிடையே ஒழுங்கும் ஒற்றுமையும் ஏற்படுவதற்குற்ற உதாரண புருஷர்களாகத் திகழவேண்டும்; அவர்கள் தேசத்தின் தற்காப்பிலும் புனருத்தாரண வேலைகளிலும் அக்கறை கொண்டு, நாட்டின் பலத்துக்கும் வளத்துக்கும் வழிகோல வேண்டும் என்று நேருஜி குறிப்பிட்டார்.

ஏற்கெனவே மேற்படி படையினர் ஆக்க வேலைகளில், சமுதாய அபிவிருத்தி அலுவல்களில் தங்களுடைய திறனைக் காட்டிப் புகழ் பெற்றுள்ளனர்.

சென்ற ஆண்டிலே அப்படையினர் டில்லியிலே பல மைல் தூரத்துக்குக் கால்வாய் வெட்டினர்.

பம்பாயிலே பிரம்மாண்டமான கட்டிடங்களை நிர்மாணித்ததுடன், ஒரு மைல் தூரத்துக்கு ரஸ்தாவும் அமைத்தனர்.

சென்னையிலும் ஏழைகளுக்கு உதவியாக ஏராளமான மண் வீடுகள் கட்டிக் கொடுத்தனர்.

சில இளைஞர்கள் சேர்ந்தே இத்தகைய காரியங்களைச் சாதித்திருக்கும்போது, பாரத நாட்டில் உள்ள இளைஞர்களில் பெரும்பாலோர் ஒருமித்து ஆக்க வேலைகளில் ஈடுபடுவார்களாயின், எவ்வளவு மகத்தான காரியங்களைச் செய்து முடிக்கலாம்!

இவ்வாறு ஆக்க வேலைகளை நிறைவேற்றி வரும் யுவர் படையினர் தேசத்தின் பாதுகாப்புக்காக ராணுவப் பயிற்சியும் பெற்று வருகிறார்கள்.

எனவே அவர்கள் சென்ற வாரம் நேருஜியின் பாராட்டுதலுக்குப் பாத்திரரானதைக் குறித்து ஆச்சரியப் படுவதற்கில்லை.

இந்தியாவின் இன்றைய இன்னல்களுக் கெல்லாம் காரணம் அதிக ஜனத்தொகைதான் என்று கூறுவோர் இருக்கிறார்கள். ஆனால் மற்ற சக்திகளைக் காட்டிலும் மனித சக்தியே மகத்தானது; அதன்மூலம் எத்தகைய சாதனைகளை நிறைவேற்றலாம் என்பதை, இன்று குடியரசு சீனா நிரூபித்து வருகிறது. பத்து வருஷங்களுக்கு மேலாக நடந்த யுத்தத்தினால் பாழாகக் கிடந்த சீனா மகத்தான மனித சக்தி காரணமாக இரண்டொரு ஆண்டுகளுக்குள் பல துறைகளிலும் இணையற்ற முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது; உலகத்தையே பிரமிக்கச் செய்திருக்கிறது.

அதுபோலவே இந்தியாவில் உள்ள சகல இளைஞர்களும் யுவர் படையில் சேர்ந்து, ஆக்க வேலைகளில் ஊக்கம் கொள்வார்களாயின், யுவர்கள் யாவரும் நவ பாரதத்தின் நிர்மாண நிபுணர்களாகத் திகழ்வார்களாயின், இந்தியாவின் முன்னேற்றம் இமயம் போல் வானோங்கி நிற்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

# ஒரு காரமான கடிதம்

"சென்னையிலே திடீரென்று பாய்களுக்கு ரொம்ப கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. டில்லிக்கு இரண்டொரு பாய்கள் வாங்கிப் போகலாம் என்று எண்ணி நான் வாங்க யத்தனித்தபோது எனக்கு இந்த விவரம் தெரிய வந்தது.

தீர விசாரித்ததில் படே குலாம் அலிகான் கச்சேரியைக் கேட்ட அநேகம் ரஸிகசிகாமணிகள் அவர் சங்கீதத்தில் லயித்துப் போய்ப் பாய்களைப் பிய்த்துப் போடும் அளவுக்குப் பைத்தியமாய் அடிக்கப் பட்டிருக்கிறார்கள் என்றும் இதனால் பாய்களுக்கு...

பண்பின் உயர்வுக்கு அறிகுறி. வடநாட்டு ரஸிகர்கள் எவ்வளவு குறுகிய மனப்பான்மையோடு இருந்தாலும், நாம் அவர்களைப் பின்பற்றாமல் உயர்ந்த வடநாட்டுச் சங்கீதத்தைப் பொன்னாடை போர்த்திப் புகழ்வோம். திரள் திரளாகச் சென்று கேட்டு மகிழ்வோம்.

ஆனால் அதற்காக நம்முடைய இணையற்ற பொக்கிஷமான கர்நாடக சங்கீதத்தையும் அதைப் போற்றி வரும் கர்நாடக சங்கீத வித்வான்களையும் குறைவு படுத்துவது அனாவசியம்.

கற்பனை அம்சமே பூஜ்யமா! தாள வின்யாசங்களுக்கு நாம் தாளம் போடுகின்றோமா!

நமது பல்லவி முறை உலகுக்கே ஓர் அற்புதமாயிற்றே! இத்தனை தாள வகைகள் வட இந்திய வித்வான்களின் மூப்பாட்டனார்கள் கூடக் கேட்டிருக்க மாட்டார்களே! அவர்களுக்குப் பல்லவி அனுபல்லவி சரண அமைப்பு முறையே கிடையாதே! நமது பாடகர்கள் ஹிந்துஸ்தானி பாட்டுக்களை அரை மணி நேரத்தில் கற்று அரங்கேற்றி விடுவார்களே!

அப்துல் கரீம் கான் தோடி பாடுவாரா! கான் சாகேப் காம்போதி பாடுவாரா! பிஸ்மில்லா பிலஹரி ஊதுவாரா! கர்நாடக சங்கீதம் அவர்கள் கற்பனைக்கே எட்டாதே! நமது சாதாரண மிருதங்க வித்வானின் கால் இடத்து மூத்தாய்ப்பு அவர்களைப் பிரமிக்க வைப்பதைப் பார்த்திருக்கிறேன். அதைக் கண்டு ஆச்சரியப்படுவார்களே ஒழிய விவரம் புரிந்து அனுபவிக்க மாட்டார்கள். நமது தவில்காரர்களின் சொற் கட்டுகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். பேரில்லாப் பிள்ளையார் கோவில் தவில்காரர் பொரித்துத் தள்ளும் தவில் வியவகாரங்கள் அவர்களால் மனத்தினாலும் ஸ்மரிக்க முடியாதே!

வட இந்திய சங்கீதத்தை இவ்வளவு ரஸிக்க நமது சக்தி எங்கிருந்து வந்ததென்று ஒரு கணம் நிதானித்துப் பார்த்தோமானால் விஷயம் புரிந்துவிடும். பலமான அஸ்திவாரத்துடன் நம்முள் ஊறியிருக்கும் கர்நாடக சங்கீதம்தான்.

நமது சங்கீத வித்வான்கள் சாதகம் செய்யாமல் சீட்டாடினாலும் பரவாயில்லை போலிருக்கிறது. கான் சாகிப்பைப் பின்பற்றிச் சபை நடுவே பெரிய கானடா தேசத்து ரயில்வே இன்ஜினைப் போல் சிகரெட் குடித்துப் புகை விடாமலிருந்தார்களானால் அதுவே மகத்தான கைங்கரியமாகும்!

இவ்வாறு நான் எழுதியதெல்லாம் யாரையும் தூஷணை செய்யும் நோக்கத்துடனில்லை. நான் பல சங்கீதம் கேட்டவன்; ரஸித்தவன். மேலும் கேட்பேன்; ரஸிப்பேன். ஆனால், "நமது சங்கீதத்தில் ஒன்றுமே இல்லை; கான் சாகிப்பின் காலைப் பிடித்தால் தான் நமக்குச் சங்கீத ஞானம் வரும்" என்று பறைசாற்ற மாட்டேன்.

இணையற்ற, ஒப்புயர்வற்ற நமது பொக்கிஷமான கர்நாடக சங்கீதத்தைக் குறைவுபடுத்தும் முறையில் எதுவும் செய்ய மாட்டேன்!

கடிதம் ரொம்பவும் காரமாகப் போய் விட்டது.

காரணம் யோசித்ததில், நான் பம்பாய் எக்ஸ்பிரஸில் ஆந்திர நாட்டின் வழியாகப் போய்க் கொண்டிருப்பதுதான் என்று புலனாகிறது!

நமது சங்கீதத்தைப் பேணிப் போற்றி வரும் அரியக்குடி, செம்மங்குடி, மஹாராஜபுரம், காரைக்குடியார், இன்னும் எண்ணற்ற கர்நாடக சங்கீத வித்வான்களுக்கு நன்றி கூறி இந்தக் கடிதத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கிறேன்.

சுப்புடு

28—1—54 புது டில்லி."

[வெளிநாடுகளுக்குச் செல்லும் தமிழர்கள் தான் தமிழ்நாட்டுக் கலைச் செல்வங்களை அருமை அறிந்து நன்கு அநுபவிக்கிறார்கள் என்பதற்கு ரஸிகர் ஸ்ரீ சுப்புடுவின் மேற்கண்ட கடிதம் சிறந்த அத்தாட்சியாகும். ஆனால் படே குலாம் அலிகானின் சங்கீதத்தைப் பொறுத்தவரையில் ஸ்ரீ சுப்புடுவின் கருத்துக்களை இங்குள்ள மிகப் பெரும்பாலான சங்கீத ரஸிகர்கள் ஆமோதிக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். — ஆசிரியர்]

# உள்ளத்தின் உயர்வு

அதோ இருக்கும் அந்தச் சித்திரக்காரருக்குச் சித்திரக் கலையில் அபார மோகம்! அதைவிட அவருக்கு அதிக ஈடுபாடு இயற்கைக் காட்சிகளிலும் நாட்டுப்புற வனப்பிலும்தான்.

ஆனால் அவருடைய காதலியோ, நவ நாகரிக நங்கை; நகர்ப் புறத்தில் வளர்ந்தவள்; கல்லூரிப் படிப்பும் பெற்றவள். அவள் சதா அவரை நச்சரித்துக் கொண்டு வந்தாள், "யாரை யெல்லாமோ வரைகின்றீர்களே, என்னை வரையக் கூடாதா!" என்று.

ஒரு நாள், "ஓ! வரைகிறேனே! எங்கே சித்திரம் வரையத் தகுந்தபடி நில், பார்ப்போம்!" என்றார், நம்முடைய சித்திரக்காரர்.

அவளும் ஒரு கையைத் தலைக்கு மேல் நிமிர்த்தி வைத்துக் கொண்டும், மற்றொரு கையைத் தனக்கு முன் நீட்டி வைத்து கொண்டும் நின்றாள்.

சித்திரக்காரரும் வர்ணங்களைக் குழைத்து வைத்துக் கொண்டார்; சித்திரக் கோலைக் கையில் ஏந்திக் கொண்டார்; சித்திரம் வரையலானார். ஆம், தம் நவ நாகரிகக் காதலியைப் பார்த்துப் பார்த்துத்தான் திரையில் வரைந்தார்.

ஆனால், நிஜ உருவத்துக்கும், திரையில் காணும் சித்திர உருவத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்!

இதை அறியும் போது அந்த நவ நாகரிக நங்கைக்கு எவ்வளவு ஏமாற்றமாக இருக்கும்! இதனால் அந்தச் சதிபதிகளுக்குள் எத்தகைய பூசல் விளையுமோ! அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை.

ஆனால் இந்தச் சித்திரம் ஓர் உண்மையை நன்கு புலப்படுத்துகிறது! அதாவது நவநாகரிக நங்கையினுள் நாட்டுப்புற நங்கையைக் காணலாம்; நாட்டுப்புற நங்கையினுள் நாகரிக வனிதையைக் காணலாம். புறத் தோற்றத்தைப் பெரிது பண்ண வேண்டிய அவசியமில்லை. உள்ளம் நல்ல உள்ளமாக இருக்க வேண்டும். உள்ளம் எவ்வளவு உயர்ந்து விளங்குகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு உயர்ந்து விளங்குகின்றான் மனிதன்! இதையே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், நம் தமிழ் நாட்டில் தோன்றிய தெய்வப் புலமைத் திருவள்ளுவர்,

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு

என்று வெகு அருமையாகக் கூறியிருப்பது நமக்கு நினைவு வருகிறது.

சித்திரக் கலைஞர் நவநாகரிக நங்கையைப் பார்த்து நாட்டுப்புற நங்கையாக வரையும் காட்சியை நம் சித்திரக்காரர் சந்திரா இவ்வாறு அட்டைச் சித்திரமாகத் தீட்டி யிருக்கிறார்.

# நேருஜி அழைப்பு

**ரஜனி**

கொழும்பு, ஜனவரி 30உ

டில்லியில் இலங்கை இந்தியப் பிரதமர்கள் கையொப்பமிட்ட உடன்படிக்கையை ஊர்ஜிதம் செய்வதென்று இலங்கை மந்திரிசபை இவ்வாரம் தீர்மானித்து விட்டது. இதற்கிடையில் கரும்பு தின்னக் கூலி கேட்பதைப் போல இலங்கை விரும்பியபடியெல்லாம் செய்ய ஏகபோக உரிமையளிக்கும் இந்த ஒப்பந்தத்துக்கும் கண்டியச் சிங்களவர்களிடையே எதிர்ப்பிருப்பதைப் போலக் காட்டுவதற்குச் சில நாடகங்கள் நடந்தன. 'ஆஹா, இலங்கையைத் தென்னிந்தியர்களுக்கு அடிமைப் படுத்தி விடவா பார்க்கிறீர்கள்! ஊஹூம், ஒரு போதும் இதற்கு நாங்கள் சம்மதியோம்' என்று சில கண்டியத் தளபதிகள் ஒரு குரல் ஒப்பாரி வைத்தார்கள். இதோடு மட்டுமல்ல, மந்திரி சபையில் கூடக் கொஞ்சம் சீனவெடிகள் வெடித்தன. எப்பொழுதுமில்லாதபடி மந்திரி சபை ஆறு மணி நேரம் கூட்டம் நடத்திக் கடைசியில் உடன்படிக்கையை ஊர்ஜிதம் செய்தது. அடுத்த திங்கட்கிழமை உடன்படிக்கையை அரசாங்கம் பார்லிமெண்டரிக் கட்சியில் சமர்ப்பித்து விவாதித்துச் செவ்வாய்க்கிழமையன்று இருதேச அரசாங்கங்களும் உடன் படிக்கையை ஏக காலத்தில் ஊர்ஜிதம் செய்வதென்று இலங்கை சம்பந்தப்பட்ட மட்டில் ஏற்பாடு.

ஆனால் கடைசியாக நேற்றிரவு கிடைத்த ஒரு செய்தியின் பிரகாரம் உடன்படிக்கையில் நேருஜி "அவசரப்பட்டு" ஒப்பமிட்ட பொழுதிலும் இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவர்களுடன் கலந்து பேசுவதற்கு முன்னால் ஒப்பந்தத்தை ஊர்ஜிதம் செய்வாரென்று தோன்றவில்லை. இவ்வார ஆரம்பத்தில் காங்கிரஸ் தலைவர்கள் நேருஜிக்கு ஒரு அவசரத் தந்தியனுப்பியிருந்தார்கள். அதில் உடன்படிக்கையின் பிற்போக்கான பல அம்சங்களையும் எடுத்துக் காட்டித் தங்களைச் சந்தித்துப் பேசும் வரையில் ஒப்பந்தத்தை ஊர்ஜிதம் செய்யப்படாதென்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதை அனுசரித்துப் பிப்ரவரி 7ந் தேதி நள்ளிரவு திருவனந்த புரத்தில் தம்மைச் சந்திக்குமாறு இ. இ. கா. தலைவர் ஸ்ரீ தொண்டமானுக்கு நேருஜி பதில் அனுப்பியிருக்கிறார். ஸ்ரீ தொண்டமான் தலைமையில் ஒரு காங்கிரஸ் தூதுகோஷ்டி நேருஜியைச் சந்தித்து அவர் கைச்சாத்திட்ட உடன்படிக்கை எவ்விதம் "தற்கொலை" ஒப்பந்தமாக முடியக் கூடுமென்பதை விளக்கி உரைக்குமென்று ஒரு காங்கிரஸ் தலைவர் கூறினார்.

இங்குள்ள இந்திய ஹை கமிஷனும் இப்பொழுது கொஞ்சம் மூளைத் தெளிவுபெற ஆரம்பித்திருப்பதற்கான அறிகுறிகள் காணுகின்றன. டில்லி ஒப்பந்தம் ஒரு தலைப்பட்சமான சலுகைகள் அளிப்பதென்பதை ஹை கமிஷன் வட்டாரங்கள் உணரத் தலைப்பட்டிருப்பதோடு "வேண்டியதையெல்லாம் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி "வங்கி செக் புத்தகத்தை" இலங்கையின் கையில் கொடுத்து விட்டது உண்மைதானென்றும் இந்தியா இவ்வளவு பெருந்தன்மையுடனிருப்பது இலங்கையிடம் மனமாறுதலை உண்டு பண்ணுமென்று நம்பியே இவ்விதம் செய்ததாயும் அவர்கள் சப்பைக்கட்டு கட்டுகிறார்கள். ஆனால் கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதையைப் போல நம்பிச் செய்த காரியத்துக்கு இலங்கைப் பிரதம மந்திரி அளித்து வரும் வியாக்கியானங்கள் இப்பொழுது இந்திய ஹை கமிஷனுக்கே அதிர்ச்சியை அளித்து வருகிறதாம்!

நேற்று மந்திரி சபையில் பிரதம மந்திரி ஸர் ஜான் கொத்தலாவல உடன்படிக்கையை விளக்கிச் சொல்லிய பொழுது திருவாய் மலர்ந்தருளிய சில மணிமொழிகள் பின்வருமாறு:

"எவ்வளவு இந்தியர்களுக்குத்தான் பிரஜாவுரிமை யளிப்பதென்பதைப் பற்றி நாம் உத்தரவாதம் ஏதும் தரவில்லை. பிரஜாவுரிமைச் சட்டத்தின்படி யோக்கியதாம்சமுடையவர்களை இலங்கைப் பிரஜைகளாக நாம் பதிவு செய்து கொள்வோம். அதே சமயம் இந்தியப் பிரஜைகளாயிருக்க விரும்புவோர்களை அவ்விதம் பதிவு செய்யத் தீவிர நடவடிக்கை எடுப்பதற்கு இந்திய அரசாங்கமும் ஒப்புக் கொண்டிருக்கிறது. ஒரு தேசப் பிரஜைகளாகவுமில்லாத நிலைமையிலிருப்பவர்களுக்கு பாஸ்போர்ட் கொடுக்காமலும், பணம் அனுப்ப அனுமதியாமலும் செய்வதின் மூலம் ஏராளமான இந்திய வம்சா வழியினரை இந்தியப் பிரஜைகளாகி விடுமாறு மறைமுகமாக நிர்ப்பந்திக்க உத்தேசிக்கப் பட்டிருக்கிறது."

இலங்கையிலுள்ள இந்திய வம்சா வழியினர் என்றைக்காவது ஒரு நாள் ஏதாவது காரணத்துக்காக வெளிநாடு போக நேரிடலாம். அப்படிப் போக நேரிடும்போது இந்தியப் பிரஜை யென்று பட்டம் கட்டிக் கொண்டு போகச் செய்வதே இலங்கை அரசாங்கத்தின் இலட்சியம். இது மறைமுகமான கட்டாய நாடு கடத்தலென்று காங்கிரஸ் கூறுகிறது. எந்தவிதமாகப் பார்த்தாலும் திருப்தியற்ற ஒரு உடன்படிக்கையைச் செய்வதைவிட இலங்கை இந்தியர்களின் விவகாரங்களில் இந்திய அரசாங்கம் தலையிடாமல் இருந்து விடுவதே நல்லதென்று கூட காங்கிரஸ் தலைவர்கள் நினைக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். இலங்கையுடன் ஏதாவது ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென்ற ஆவலுடன் இந்த விபரீத உடன்படிக்கையை இந்தியா செய்து கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

பல விதத்திலும் தமிழ் மொழியை ஒதுக்கி வரும் இலங்கை அரசாங்கம் இலங்கை—இந்தியா ஒப்பந்தத்தில் தமிழ் மொழியை ஒரு இந்திய மொழியென்று வர்ணித்திருப்பது இலங்கைத் தமிழர்களுக்குப் பெரும் கவலையை உண்டு பண்ணி வருகிறது. இப்படியெல்லாம் பயப்படத் தேவையில்லையென்றும் சிங்களத்தைப் போலவே தமிழும் இந் நாட்டின் தேசிய மொழிகளில் ஒன்றாக இருந்து வருமென்றும் பிரதம மந்திரி ஸர் ஜான், தபால் மந்திரி ஸ்ரீ எஸ். நடேசனுக்கு உறுதி கூறியிருக்கிறார். அப்படியிருந்தும் தமிழ் பேசும் காரணத்துக்காக யாழ்ப்பாணத் தமிழர்களையும் சட்டவிரோதமாகக் குடியேறிய வாசிகளெனக் கூறிப் போலீசார் துன்புறுத்துவார்களோ என்ற கவலை பலருக்கும் இருக்கத்தான் செய்கிறது.

அடுத்த வாரம் இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவர்கள் நேருஜியைச் சந்தித்துப் பேசிய பிறகு சில முக்கிய விளைவுகள் நிகழலாம்.



# பொன்னியின் செல்வன்

கல்கி

அத்தியாயம் 72

## தியாகப் போட்டி

மழவர் குலத்தில் உதித்தவரும் சிவ ஞான கண்டராதித்த சோழரின் வாழ்க்கைத் துணைவியுமான செம்பியன்மா தேவியை, 'ஸ்ரீ மதுராந்தகத் தேவரான உத்தம சோழ தேவரைத் **திரு வயிறு வாய்த்த** உடைய பிராட்டியார்' என்று அவர் காலத்திய கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. சாதாரணமாகத் தாய்மார்கள் தம் குழந்தைகளைப் பத்து மாதம் வயிற்றில் வைத்துச் சுமந்தே பெறுவார்கள். சில தாய்மார்கள் வேறு பெண்மணிகளின் வயிற்றில் பிறந்த குழந்தைகளைத் தங்கள் குழந்தைகளைப் போலவே வளர்ப்பதும் உண்டு.

செம்பியன்மா தேவி வேறொரு பிள்ளையை வெகு காலமாகத் தம் பிள்ளையென வளர்த்து வந்த காரணத்தினால், அந்த உண்மையை அறிந்திருந்த ஒருவர் மேற்கண்டவாறு 'உத்தம சோழரைத் திரு வயிறு வாய்த்தவர்' என்று கல்வெட்டிலே குறிப்பிட்டார் போலும்!

* * *

உத்தம சோழர் ஐந்து பிராயத்துச் சிறுவனா யிருந்தபோதே செம்பியன்மா தேவி அவனையும் வாணி அம்மையையும் பார்க்கும்படி நேர்ந்தது. பல ஆண்டுகள் கழித்து வாணி அம்மையைச் சந்தித்ததும் அவளுடைய க்ஷேம லாபங்களைப் பற்றிச் செம்பியன் மாதேவி அன்புடன் விசாரித்தார். வாணியின் குழந்தை என்று எண்ணிய சேந்தன் அமுதனிடம் இயற்கையாகவே அம் மூதாட்டிக்கு அன்பு சுரந்தது. குழந்தையைப் பற்றி விசாரித்தபோது வாணி அம்மையின் முகத்தில் திகைப்பும் அச்சமும் உண்டானதைக் கண்டார். முதலில், அதற்கு வேறு காரணங்கள் இருக்கக் கூடும் என்று எண்ணினார். வாணி பேசத் தெரியாதவளாய் இருந்தபடியால் திட்டமாக அவளிடமிருந்து ஒன்றும் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் வாணி அம்மை ஒரு காலத்தில் தமக்குச் செய்த உதவியைக் கருதியும், அவளுடைய குழந்தையிடம் ஏற்பட்ட பாசங் காரணமாகவும், தாயும்பிள்ளையும் கவலையின்றி வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். தஞ்சை நகருக்கு அருகில் குடியிருந்து தளிக் குளத்தார் கோயிலுக்குப் புஷ்ப கைங்கரியம் செய்து வருவதற்காக மானியங்களும் அளித்தார்.

சேந்தன் அமுதன் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிவ பக்தியிலும் சிறந்து வளர்ந்து வந்தான். அன்னைக்கு உதவியாகப் புஷ்பத் திருப்பணி செய்வதிலும் மிக்க ஊக்கம் காட்டி வந்தான். இதைக் காணக் காணச் செம்பியன்மா தேவிக்கு அவனிடம் இயற்கையாகச் சுரந்த அன்பு வளர்ந்து வந்தது. ஒரு நாள் அவருடைய மனத்தில் விசித்திரமான ஐயம் ஒன்று தோன்றியது. அது அவருக்கு ஒரே சமயத்தில் இன்பத்தையும் வேதனையையும் இனந் தெரியாத பீதியையும் உண்டாக்கியது. எத்தனையோ விதமாக அந்த ஐயத்தைப் போக்கிக் கொள்ள முயன்றும் இயலவில்லை. பிறந்து சில தினங்களில் இறந்து போன தம் குழந்தையைப் பற்றிய நினைவு அடிக்கடி எழுந்த வண்ணமிருந்தபடியால் அவர் உள்ளம் அமைதி கொள்ளவில்லை.

கடைசியாக ஒரு நாள் வாணி அம்மையிடம் தெளிவாகக் கேட்டுத் தெரிந்து கொள்வது என்று தீர்மானித்தார். வாணியைத் தனியாக அழைத்து வரும்படி செய்தார். இறந்து போன தம் குழந்தையை வாணியிடம் கொடுத்து ஒருவரும் அறியாமல் புதைத்து விட்டு வரச் சொன்னார் அல்லவா? அவ்வாறு புதைத்த இடத்தில் அதன் ஞாபகார்த்தமாகப் பள்ளிப் படைக் கோயில் ஒன்று எழுப்ப வேண்டும் என்று சொல்லி, புதைத்த இடத்தைச் சொல்லும்படி கேட்டார். இந்தப் பழைய நிகழ்ச்சியைப் பற்றிய ஞாபகமே அவருக்குத் துன்பம் அளித்தது. செவிடும் ஊமையுமான வாணியிடம் இதையெல்லாம் சமிக்ஞை பாஷையினால் கேட்க வேண்டியதாக இருந்தது. அது அவருக்கு மேலும் சொல்ல முடியாத வேதனையை அளித்தது.

அவருடைய கேள்விகளுக்கு விடை கூற வாணி மிகவும் தயங்கினாள். கடைசியாக, பேரரசியின் கட்டளையை மீற முடியாமல் உண்மையைச் சொல்லி விட்டாள். புதைப்பதற்காகத் தன்னிடம் கொடுக்கப் பட்ட குழந்தை உண்மையில் இறக்க வில்லை என்பதையும், அதைத் தனக்குக் கருத்திருமன் என்பவன் எடுத்துக் காட்டியதையும், பின்னர் அரசியிடம் திரும்பி வந்தால் என்ன நேரிடுமோ என்று அஞ்சிக் கருத்திருமனுடன் திருமறைக் காடு சென்றதையும், சில காலத்துக்கெல்லாம் கருத்திருமன் தன்னை விட்டு விட்டுப் போய் விட்ட படியால் தான் திரும்பப் பழையாறைக்கு வந்ததையும் விவரமாகக் கூறினாள்.

சேந்தன் அமுதன் உண்மையிலேயே தன் வயிற்றில் பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளைதான் என்பதை அறிந்ததும் செம்பியன் மாதேவி ஒரு புறத்தில் எல்லையற்ற ஆனந்தம் அடைந்தார். அவர் உடம்பெல்லாம் சிலிர்த்துப் பூரித்தது. கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பொழிந்தது. "மகனே!" என்று கூவிச் சேந்தன் அமுதனைக் கட்டித் தழுவிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது. ஆயினும், அந்த ஆர்வத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டார். அந்த உண்மை வெளியானால், அதிலிருந்து ஏற்படக் கூடிய குழப்பங்களை எண்ணி ஒரு புறம் பீதி கொண்டார். "உலகில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் இறைவனுடைய குழந்தைகளே" என்று கருதக் கூடிய உயர் ஞான பரிபக்குவத்தை அவருடைய உள்ளம் அடைந்திருந்த படியால், பெற்ற பிள்ளையிடம் தாய்க்கு ஏற்படக் கூடிய பாசத்தைக் கட்டுப் படுத்திக் கொள்ள அவரால் முடிந்தது. "அரண்மனையில் வளர்ந்தால் என்ன? குடிசையில் வளர்ந்தால் என்ன? இந்த நிலையில்லா மனித வாழ்வின் சுக போகங்கள் எல்லாம் வெறும் மாயை அல்லவா? உலக வாழ்வை நீத்த பிறகு அடைய வேண்டிய கதி அல்லவோ முக்கியமானது? என் பதி அரச போகங்களை வெறுத்துச் சிவ பெருமானுடைய இணையடி நிழலில் நினைத்து வாழ்க்கை நடத்திய படியால் அவருக்குப் பிறந்த பிள்ளை இவ்விதம் குடிசையில் வாழ்ந்து இறைவனுக்குத் தொண்டு செய்யும் பேறு பெற்றான் போலும்!" என்றெல்லாம் அடிக்கடி எண்ணி மனத்தை உறுதி படுத்திக் கொண்டார்.

ஆயினும் சேந்தன் அமுதன் தமது வயிற்றில் பிறந்த மகன் என்று அறிந்ததினால், தாம் வளர்த்த குமாரனாகிய மதுராந்தகனைச் சோழ சிங்காதனத்தில் ஏற்றி வைக்கக் கூடாது என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் வலுப் பட்டது. முன்னமேயே கண்டராதித்தரிடம் தாம் செய்த குற்றத்தை அவர் ஒப்புக் கொண்டு மன்னிப்பும் பெற்றிருந்தார். "உன் வயிற்றில் பிறந்த குழந்தையானால் என்ன? அநாதைப் பெண்மணிக்குப் பிறந்த குழந்தையா யிருந்தால் என்ன? இறைவனுடைய திருக் கண்ணோட்டத்தில் இருவரும் சமமானவர்கள் தான். ஆகையால் மதுராந்தகனை உன் மகனைப் போலவே வளர்த்து வா! ஆனால் சோழ சிங்காதனத்தில் அவன் ஏற வேண்டும் என்று ஆசைப் படாதே! அதற்கு இணங்கவும் இணங்காதே! அது நான் பிறந்த சோழ குலத்துக்குத் துரோகம் செய்ததாகும். அப்படிப் பட்ட நிலைமை ஏற்படுவதா யிருந்தால் நீ உண்மையை ஒப்புக் கொள்வதற்கும் தயங்காதே!" என்று கண்டராதித்தர் தேவியிடம் சொல்லி அவ்வாறு வாக்குறுதியும் பெற்றிருந்தார். அந்த வாக்குறுதியை எப்படியும் நிறைவேற்றி வைக்கப் பெரிய பிராட்டி செம்பியன்மாதேவி நிச்சயித்திருந்தார்.

ஆனால் தங்களுடைய சொந்தக் குமாரன் வாணி அம்மையின் மகனாகக் குடிசையில் வளர்ந்து வருவதை அறியாமலேயே அந்த மகான் சிவபதம் அடைந்து விட்டார். இது தெரிந்திருந்தால், அவர் என்ன செய்திருப்பார்? சேந்தன் அமு

தன் விஷயத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று கட்டளை யிட் டிருப்பார்! — இதைக் குறித்துச் செம்பியன் மாதேவி எவ்வளவோ முறை சிந்தனை செய்தார். "இறைவனுடைய சித்தத்தினால் இவ்விதம் நேர்ந்துவிட்டது. ஊமையின் மகன் அரண்மனையில் வளர வேண்டும் என்பதும் பேரரசரின் மகன் குடிசையில் வளர வேண்டும் என்பதும் இறைவனுடைய திருவுள்ளம். அதில் நாம் குறுக்கிடக் கூடாது. அதை மாற்ற முயல்வதால் பல குழப்பங்கள் விளையும். தம் வளர்ப்புக் குமாரனின் மனம் அதனால் பெரிதும் புண்படும். அத்தகைய பாவத்தைச் செய்யக் கூடாது!" என்று முடிவாகத் தீர்மானித்துக் கொண்டார்.

இறைவனுடைய திருவருளில் அவர் கொண்டிருந்த இணையில்லாத நம்பிக்கையின் துணையினாலேதான் மேற்கூறிய தீர்மானத்தை அவர் காரியத்தில் நிறைவேற்றுவதும் சாத்தியமாயிற்று.

ஆயினும் அடிக்கடி சேந்தன் அமுதனைப்பற்றி அவரால் நினைக்க முடியாமலிருப்பதில்லை. அவனுடைய நினைவு வரும்போதெல்லாம் இயற்கையான தாய்ப் பாசம் அவருடைய உள்ளத்தில் பொங்கிப் பெருகாமலும் இருப்பதில்லை. இந்தப் போராட்டமானது அவருடைய இதய ஆழத்திலே பல ஆண்டு காலமாக நிகழ்ந்து கொண்டிருந்தது.

நெடுங் காலமாக அணை போட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த வெள்ளம் திடீரென்று ஒருநாள் அணையை உடைத்துக்கொண்டு கிளம்புவது உண்டு அல்லவா? அப்போது வெள்ளம் எவ்வளவு சக்தியுடனும் வேகத்துடனும் பாய்ந்து செல்லும் என்பதைப் பலர் பார்த்து அநுபவித்திருப்பார்கள்.

செம்பியன் மாதேவியின் உள்ளத்தில் அணை போட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தாய்ப் பாசமாகிய உணர்ச்சி வெள்ளமும் இப்பொழுது கரையை உடைத்துக் கொண்டு பாய்ந்தது.

முதன் மந்திரி அநிருத்தர் "**தேவியின் திரு வயிற்றில் உதித்த தேவர்**" என்று குறிப்பிட்டதுதான் அவ்வாறு செம்பியன்மாதேவி உள்ளத்தின் அணை உடைவதற்குக் காரணமாயிற்று.

அந்த வார்த்தைகளை அநிருத்தர் கூறியவுடன், செம்பியன்மாதேவி பத்து மாத காலம் குழந்தையைத் தன் வயிற்றில் வைத்து வளர்த்த அநுபவம் அவ்வளவையும் ஒரு விநாடிப் பொழுதில் மறுபடியும் அநுபவித்தார். தம்மை மறந்து, தாம் செய்துகொண்டிருந்த சங்கல்பத்தை மறந்து, சேந்தன் அமுதனை "என் மகனே!" என்று அழைக்கவும், அவனைத் தழுவிக் கொண்டு கண்ணீர் வெள்ளம் பெருக்கவும் நேர்ந்தது.

இவ்விதம் செம்பியன் மாதேவி உணர்ச்சிப் பெருக்கினால் மெய்ம் மறந்த நிலையில் இருந்த போதிலும், அமுதன் கூறிய வார்த்தைகள் அவருடைய மனத்தில் நன்கு பதிந்திருந்தன. "தாயே! என்னை 'மகனே!' என்று அழைக்க இப்போதேனும் தங்களுக்கு உள்ளம் உவந்ததோ?" என்று கூறினான் அல்லவா? அவ்வார்த்தைகளின் கருத்து என்ன? அமுதனுக்கு அவனைப் பெற்ற அன்னை யார் என்பது முன்னமேயே தெரியுமா? தெரிந்தும் இத்தனை காலம் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் இருந்தானா?

சற்று நேரம் வார்த்தை சொல்ல முடியாத பரவச நிலையில் இருந்த பிறகு, செம்பியன்மாதேவி தம் மனத்தைத் திடப் படுத்திக் கொண்டு, "மகனே! உனக்கு முன்னமே தெரியுமா, நான் உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற பாவி என்று? தெரிந்து என் பேரில் கோபம் கொண்டிருந்தாயா? அதனால் என்னிடம் அதைப் பற்றிக் கேளாமல் இருந்தாயா?" என்று தழுதழுத்த குரலில் கூறினார்.

அப்போது சேந்தன் அமுதன் கடல் மடை திறந்தது போல் பின்வருமாறு உணர்ச்சி நிறைந்த வார்த்தைகளைப் பொழிந்து தள்ளினான் :—

"தாயே! நான் தங்கள் வயிற்றில் பிறந்த பாக்கியசாலி என்பதைச் சில காலமாக அறிந்திருந்தேன். உலகம் போற்றும் புண்ணியவதியாகிய தாங்கள் ஒரு நாள் என்னை 'மகனே!' என்று அழைக்க வேண்டும் என்று தவம் செய்து கொண்டிருந்தேன். தங்களுடைய மகன் என்ற சொல்லுக்குத் தகுதி யாவதற்குப் பிரயத்தனம் செய்து வந்தேன். அல்லும் பகலும் சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்துக் கொண்டிருந்தேன். தாங்களே என்னை அழைக்காவிட்டாலும் நானே தங்களிடம் வருவதாகத்தா னிருந்தேன். ஆனால் இந்த இராஜ்யத்தின் உரிமை விஷயம் தீரட்டும் என்று காத்திருந்தேன். தங்களை 'அன்னை' என்று அழைக்கும் உரிமையைத்தான்

நான் வேண்டினேன். இராஜ்யத்துக்கு உரியவர் யார் என்று நிச்சயமான பிறகு தங்களிடம் வந்து 'தாய்' உரிமை கோர விரும்பினேன். அம்மணி! தங்களுடைய மனங் கோணாமல் நடப்பதற்காக என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட பூங்குழலியைத் தியாகம் செய்யவும் சித்தமாயிருந்தேன். நல்ல வேளையாக அவளும் தன்னுடைய மனத்தை மாற்றிக் கொண்டாள். தாயே! மூன்று நாளைக்கு முன்பு என் உயிருக்குப் பெரும் அபாயம் வந்தது. தங்களிடம் நானும் பூங்குழலியும் வணங்கி ஆசி பெற்றுக் கொண்ட சிறிது நேரத்துக் கெல்லாம் அந்த அபாயம் வந்தது. அந்த அபாயத்திலிருந்து உத்தம நண்பன் ஒருவன் என்னைக் காப்பாற்றினான். அதைப் பற்றி நான் அப்போது அவ்வளவு மகிழ்ச்சி அடையவில்லை. அவனிடம் அவ்வளவாக நன்றி செலுத்தவும் இல்லை. இப்போது அவனுக்கு நான் எவ்வளவு நன்றிக்கடன் பட்டவன் என்பதை உணர்கிறேன். தாங்கள் என்னை 'மகனே'



என்று தங்கள் திருவாயினால் அழைத்தீர்கள் அல்லவா? இந்த நாளைக் காண நான் உயிரோடு இருந்தேன் அல்லவா? இதுவே போதும்! நான் பாக்கியசாலி ஆகி விட்டேன். இனி ஒன்றும் எனக்கு வேண்டாம். இங்கு இப்போது நடந்தது இங்கு உள்ளவர்களுக்கு மட்டும் தெரிந்திருக்கட்டும். வேறு யாருக்கும் தெரிய வேண்டாம். இராஜ்யத்தில் மேலும் குழப்பம் விளைய வேண்டாம்! கோடிக்கரைக்கு உடனே புறப்பட்டுப் போவதற்கு எனக்கும் பூங்குழலிக்கும் விடை கொடுத்து அனுப்புங்கள்!"




இந்த வார்த்தைகள் பெரிய பிராட்டி செம்பியன்மா தேவியின் உள்ளத்தில் உண்டாக்கிய உணர்ச்சிப் புயலைச் சொற்களினால் விவரிக்க முடியாது.

விம்மலுடனும் கண்ணீருடனும் கலந்த மெல்லிய குரலில், "குழந்தாய்! நீயே என் உத்தமப் புதல்வன்! நீயே தெய்வாம்சம் பொருந்திய என் கணவரின் உத்தமக் குமாரன்!" என்று கூறினார்.

இவ்வளவு நேரமும் சுந்தர சோழர், சின்னப் பழுவேட்டரையர், இளைய பிராட்டி குந்தவைதேவி ஆகியவர்கள் பிரமித்துப் போயிருந்தார்கள். அங்கே வெளியான இரகசியமும், அதனால் விளையக் கூடிய பலாபலன்களும் அவர்களுடைய உள்ளங்களில் பெருங் கொந்தளிப்பை உண்டாக்கியது.

அவர்களில் குந்தவைதான் முதலில் பேசும் சக்தி பெற்றாள். "தந்தையே! பெரிய பிராட்டியார் மதுராந்தகருக்குப் பட்டம் கட்டக் கூடாது என்று பிடிவாதம் பிடித்ததின் காரணம் இப்போது தான் தெரிகிறது!" என்றாள்.

சுந்தர சோழரும் அப்போது பிரமிப்பும் திகைப்பும் நீங்கி, "ஆமாம், குமாரி! ஆனால் அந்தக் காரணம் இப்போது நீங்கி விட்டது. என் பெரிய அன்னையின் திருவயிற்றில் உதித்த உத்தமப் புதல்வனுக்கு முடிசூட்டுவதில் இனிமேல் அவருக்கு ஆட்சேபம் இருக்க முடியாது அல்லவா?" என்றார்.

செம்பியன்மா தேவி சிறிது பரபரப்புடன் சுந்தர சோழரைப் பார்த்து, "சக்கரவர்த்தி! என் குமாரன் சற்று முன் கூறிய வார்த்தைகளைக் கேட்கவில்லையா? இந்தச் செய்தி இங்கே உள்ளவர்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியவே வேண்டாம்! என் மகன் இராஜ்ய உரிமை கோரவில்லை. அதைத் தங்கள் முன்னால் அவன் வாயினாலேயே தெரிவித்து விட்டானே!" என்றார்.

"ஆம், பிரபு! இந்தச் சோழ இராஜ்யத்தில் ஏற்கெனவே உள்ள சிக்கல்கள் போதும்! என்னால் வேறு புதிய சிக்கல் உண்டாக வேண்டாம். எனக்கு விடை கொடுங்கள்! என்னையும் என்னை மணந்து கொள்ள உவந்த பூங்குழலியையும் ஆசீர்வதித்து அனுப்புங்கள்!......பூங்குழலி! இங்கே வா!" என்றான் அமுதன்.

வாசற்படியின் அருகில் நின்று கொண்டிருந்த பூங்குழலி உள்ளே வந்தாள். சேந்தன் அமுதனும் பூங்குழலியும் முதலில் செம்பியன்மா தேவிக்கு நமஸ்காரம் செய்தார்கள். பின்னர், சக்கரவர்த்தியை வணங்கினார்கள்.

எழுந்து நின்றதும் சேந்தன் அமுதன் "பிரபு! நாங்கள் உடனே கோடிக்கரை போக விடை கொடுங்கள்! தாயே! விடை கொடுங்கள்!" என்றான்.

செம்பியன்மா தேவி சக்கரவர்த்தியைப் பார்த்து, "ஆம், ஐயா! இவர்களுக்கு விடைகொடுத்து அனுப்புவோம். எனக்கு விருப்பமானபோது நான் கோடிக்கரை சென்று இவர்களைப் பார்த்துக் கொள்கிறேன்!" என்றார்.

சுந்தர சோழர் "அது ஒருநாளும் இயலாத காரியம். நான் விடை கொடுக்க மாட்டேன்!" என்றார்.

முதன் மந்திரி குறுக்கிட்டு, "சக்கரவர்த்தி! எதுவும் இப்போது தீர்மானம் செய்ய வேண்டாம். இன்னும் சில தினங்கள் இவர்கள் என் இல்லத்திலேயே இருக்கட்டும். பெரிய பிராட்டியின் மகன் கிடைத்து விட்டார். ஆனால் சின்னப் பழுவேட்டரையரின் மருமகர் கிடைக்க வில்லை. அவரைப் பற்றிய செய்தி வரும் வரையில் இவர்கள் இங்கு இருக்கட்டும். அதுவரை இங்குள்ளவர்களைத் தவிர வேறு யாருக்கும் இந்த இரகசியம் தெரிய வேண்டாம்!" என்றார்.

"அருள்மொழியிடமாவது அவசியம் சொல்லித்தான் ஆகவேண்டும்!" என்றாள் இளைய பிராட்டி குந்தவை தேவி.

"வேண்டாம், வேண்டாம்! அதுமட்டும் செய்ய வேண்டாம்." என்று கேட்டுக் கொண்டான் சேந்தன் அமுதன்.

கடைசியாகச் சக்கரவர்த்தி, "தேவி! எது எப்படியானாலும் ஆகட்டும். இத்தனை தினங்கள் கழித்து இன்றைக்குத் தங்கள் திருவயிற்றில் உதித்த மகன் உங்களிடம் வந்திருக்கிறான். உங்களை உடனே பிரிப்பதற்கு நான் சம்மதிக்க மாட்டேன். சில தினங்களாவது இங்கே நீங்கள் சேர்ந்திருங்கள். என் அரண்மனையிலோ, முதன் மந்திரியின் மாளிகையிலோ தங்கியிருங்கள். இராஜ்ய உரிமையைப் பற்றி முடிவான தீர்மானம் ஆன பிறகு இவர்களைக் கோடிக்கரை அனுப்புவதுபற்றி யோசிக்கலாம். அதுவரையில் இங்குள்ளவர்களைத் தவிர வேறு யாருக்கும் இச்செய்தி தெரிய வேண்டாம்!" என்றார்.

## அத்தியாயம் 73

# வானதியின் திருட்டுத்தனம்

அருள்மொழி வர்மரின் மனம் பெரிதும் கலக்கம் அடைந்திருந்தது. இராஜ்ய உரிமை சம்பந்தமாகச் சோழ நாட்டில் எழுந்த கொந்தளிப்பின் வேகம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருந்ததே அதற்கு முக்கிய காரணமாகும். அவர் மக்களை அமைதிப் படுத்துவதற்காகப் போன இடங்களிலெல்லாம் மக்களின் ஆவேசந்தான் அதிகமாயிற்று. "பொன்னியின் செல்வரே எங்கள் மன்னர்!" "அருள்மொழி வர்மரே திருமுடி சூட வேண்டும்!" என்பவை போன்ற கோஷங்கள் எங்கெங்கும் எழுந்து நாலாபுறமும் முழங்கி எதிரொலி செய்தன.

இவற்றுடன் போட்டியிட்டுக் கொண்டு "பழங்குடி மக்களான பழுவேட்டரையர்கள் வாழ்க!" "கொடுங்கோலரான கொடும்பாளூர் வேளார் வீழ்க!" என்பவை போன்ற கோஷங்களும் சிற்சில இடங்களில் கேட்கும். அத்தகைய இடங்களில் அதிக பலம் தேடலாம் என்று இளவரசர் நெருங்கிச் சென்றால், உடனே அங்குள்ளவர்களும் "பொன்னியின் செல்வர் வாழ்க!" என்று முழங்கத் தொடங்கினார்கள்.

ஏன்? கோட்டைக் காவலுக்காக மாற்றி நியமிக்கப் பட்டிருந்த பழுவூர் வீரர்கள் கூடப் பொன்னியின் செல்வரைக் கண்டதும் தங்கள் பழைய கோஷங்களைக் கைவிட்டு, "அருள்மொழி வர்மரே திருமுடி புனைய வேண்டும்!" "ஈழங் கொண்ட வீராதி வீரர், பொன்னியின் செல்வர் நீடூழி வாழ வேண்டும்!" என்று முழங்கலானார்கள்.

இவ்வாறு தம்முடைய முயற்சி பொது மக்களிடையிலும் போர் வீரர்களிடத்திலும் வெற்றி பெறாமல் போனது மட்டுமின்றி, தம் கருத்துக்கு மாறான சூழ்நிலை பலப்பட்டு வருவதைக் கண்டு பொன்னியின் செல்வர் சங்கடம் அடைந்தார். சில தினங்களாக மதுராந்தகத் தேவர் காணப்படாமல் இருந்தது வேறு அவ

ருடைய கவலையை அதிகமாக்கிற்று. இதன் பொருட்டுச் சின்னப் பழுவேட்டரையர் கொடும்பாளூர் வேளார் மீது குற்றம் கூறிக் கொண்டிருந்தது அவருக்குத் தெரிந்திருந்தது. அதற்குக் காரணம் இல்லை யென்று சொல்ல முடியாது. அருள்மொழி வர்மருக்கே அதைப்பற்றிச் சிறிது சந்தேகம் இல்லாமற் போகவில்லை. தமக்குப் பட்டம் சூட்டிவிட வேண்டும் என்று கொடும்பாளூர் வேளார், திருக்கோவலூர் மலையமான் ஆகியவர்கள் உறுதி கொண்டிருந்தார்கள். அவர்களுடன் முதன் மந்திரி அநிருத்தரும் கலந்து சதி செய்வது போலத் தோன்றியது. இவர்கள் எல்லாரும் சேர்ந்துதான் மதுராந்தகத் தேவரை எங்கேனும் மறைத்து வைத்து விட்டார்களோ, என்னமோ? அல்லது ஒருவேளை மதுராந்தகத் தேவரின் உயிருக்கே அபாயம் விளைவித்து விட்டார்களோ?

அவருடைய அருமைத் தமையனாரான ஆதித்த கரிகாலரின் மரணத்துக்குப் பழுவேட்டரையர்களும் சம்புவரையர்களுமே பொறுப்பாளிகள் என்று வேளாரும் மலையமானும் கருதினார்கள். அதற்குப் பழிக்குப் பழி வாங்குவதாக எண்ணிக் கொண்டு மதுராந்தகருக்கு ஏதேனும் தீங்கு செய்து விட்டார்களோ?

ஆகா! இவர்களுக்கு என்ன? யோசனையின்றி ஏதோ செய்து விடுகிறார்கள். கடைசியாகப் பழி எல்லாம் தம் தலையில் அல்லவோ சார்ந்து விடும்?

இன்றைக்குச் சோழ நாட்டு மக்கள் இவர் பெயரைக் கூறி வாழ்த்துகிறார்கள். இவரைச் சிங்காதனம் ஏற வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். பொது ஜனங்களின் மனம் இப்படியே என்றுமிருக்குமா? மக்களின் உள்ளம் அடிக்கடி சலிக்கும் இயல்பு உடையதல்லவா? இதே ஜனங்கள் நாளைக்கு இவர் பேரிலேயே பழி கூறினாலும் கூறுவார்கள். சிங்காதனம் ஏறுவதற்காகச் சித்தப்பன் மதுராந்தகனைக் கொலை செய்வித்த பாதகன் என்று சொன்னாலும் சொல்வார்கள். ஏன்? கடம்பூர் மாளிகையில் ஆதித்த கரிகாலர் இறந்ததற்குக் கூடத் தம் பேரில் பழி சுமத்தினாலும் சுமத்துவார்கள்?—தெய்வமே! அத்தகைய பயங்கரமான பழிகளைச் சுமப்பதற்காகவா என்னைக் காவேரியில் முழுகிச் சாகாமல் மந்தாகினி தேவி காப்பாற்றினாள்? இன்று தெய்வமாகி யிருக்கும் அந்தப் பெண்ணரசிதான் இந்த இக்கட்டான நிலையிலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும். வாழ்க்கையில் ஒருவன் அடையக் கூடிய அபகீர்த்திகளில் மிகக் கொடிய அபகீர்த்தி என்னைச் சாராமல் தடுத்து அருள் புரிய வேண்டும்.

ஈழநாட்டு இராஜ வம்சத்தில் நெருங்கிய உறவினர் ஒருவரை யொருவர் கொன்று விட்டுச் சிங்காதனம் ஏறிய வரலாறுகள் அருள்மொழி வர்மரின் உள்ளத்தில் பதிந்திருந்தன. ஆகையால் அம்மாதிரியான இழிவைத் தரும் அபகீர்த்தி தன்னையும் அடையலாம் என்ற எண்ணமே அவருக்குச் சகிக்க முடியாத வேதனையை உண்டாக்கிற்று.

யாரிடமாவது தன் அந்தரங்கத்தைச் சொல்லி யோசனை கேட்கலாம் என்றால், அதற்கும் தகுதி யுள்ளவராக யாரும் தென்படவில்லை. அவரைச் சுற்றியுள்ளவர்கள் அனைவருமே அவருக்கு விரோதமாகச் சதிசெய்கிறார்கள் என்று தோன்றியது. அவர்களில் சிலர் உண்மையாகவே அவரிடம் விரோத பாவம் கொண்டிருந்தார்கள். மற்றும் சிலர் அவருக்கு நன்மை செய்வதாக எண்ணிக் கொண்டு பயங்கரமான பழியை அவர் தலையில் சுமத்தி விடுவதற்குப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தார்கள்.

இந்த நிலைமையில் யாரை நம்புவது. தன் அந்தரங்கத்தை யாரிடம் வெளியிட்டு ஆலோசனை கேட்பது என்று அவரால் நிர்ணயம் செய்ய முடியவில்லை.

ஏன்? அவரிடம் இணையில்லா அன்பு கொண்டவரும் அவருடைய பக்திக்கு உரியவருமான தமக்கை குந்தவைப் பிராட்டியிடங்கூட அவருக்கு நம்பிக்கை குன்றி விட்டது. அவரும் தனக்குத் தெரியாமல் ஏதோ காரியம் செய்து கொண் டிருப்பதாகத் தோன்றியது. ஏன்! அவருடைய உயிருக்கு உயிரான வானதிகூட அல்லவா அவருக்குத் தெரியாமல் எதையோ மறைத்து வைக்கப் பார்க்கிறாள்? திருட்டுத் தனமாக எங்கேயோ போய் விட்டு மர்மமான முக பாவத்துடன் திரும்பி வருகிறாள்?......

வேறு எதைப் பொறுத்தாலும் பொறுக்கலாம், வானதியின் மர்மமான நடத்தையை இனிப் பொறுக்க முடியாது;—என்று அருள்மொழி வர்மர் தீர்மானித்தார். வானதி சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு எங்கேயோ தனியாகப் புறப்பட்டுப் போவதை அவர் கவ

னித்தார். உடனே அவனை அறியாமல் பின் தொடர்ந்து செல்லலானார்.

அரண்மனையின் மேல்மாடங்களின் தாழ்வாரங்களின் வழியாகச் சென்று, பின்னர் கீழ் மாடங்களில் இறங்கிச் சென்று, இருபுறமும் நெடிய சுவர்கள் அமைந்த இரகசியப் பாதை வழியாக வானதி மேலும் மேலும் சென்றாள். மதுராந்தகரை இரகசியமாகச் சிறைப் படுத்தி வைத்திருக்கும் இடத்துக்குத் தான் அவள் போகிறாள் என்று கருதி அருள்மொழி வர்மர் மிக்க ஆர்வத்துடனும் ஆத்திரத்துடனும் அவளைப் பின் தொடர்ந்து சென்றார்.

கடைசியாக, வானதி மற்றொரு பெரிய அரண்மனைப் பகுதியை அடைந்து அங்கு ஓர் அறைக்குள் பிரவேசித்துக் கதவைச் சாத்த முயன்றாள். அப்போது அருள் மொழி வர்மர் பாய்ந்து சென்று வானதியால் கதவைச் சாத்த முடியாமல் ஒரு காலை அறைக்குள்ளே வைத்தார்.

கதவைச் சாத்த முயன்ற அவளுடைய கரத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு, "வானதி! உன் திருட்டுத்தனம் என்னிடம் பலிக்காது! இந்த அறையில் நீங்கள் ஒளித்து வைத்திருப்பது யார்?" என்று கோபமாக வினவினார்.

வானதியோ புன்னகை மலர்ந்த முகத்துடன் "ஐயா! உண்மையில் என் திருட்டுத்தனம் பலித்து விட்டது! நான் அழைத்திருந்தால் தாங்கள் வந்திருக்க மாட்டீர்கள். உள்ளே வந்து இங்கு இருப்பது யார் என்று நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்!" என்றாள்.

மதுராந்தகத் தேவரை எதிர்பார்த்துச் சென்ற அருள்மொழி வர்மர், அங்கே வல்லவரையன் வந்தியத் தேவன் கட்டிலில் படுத்திருப்பது கண்டு வியப்பும் உவப்பும் அடைந்தார்.

அவரைப் பார்த்த வந்தியத் தேவன் படுக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்து, "ஐயா! வாருங்கள்! இரண்டு நாளாகத் தங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்தப் பெண்களின் சிறையிலிருந்து என்னை எப்படியாவது விடுதலை செய்யுங்கள்!" என்றான்.

பொன்னியின் செல்வர் விரைந்து சென்று வந்தியத் தேவன் அருகில் அமர்ந்து, "நண்பா! இது என்ன? இங்கு எப்படி வந்தாய்? பாதாளச் சிறையிலிருந்து தப்பியவன் இந்தப் பெண்களின் சிறையில் எப்படி அகப்பட்டுக் கொண்டாய்? இத்தனை நேரம் நீ ஈழத்தில் இருப்பாய் என்று அல்லவோ நினைத்தேன்? இன்னும் சில நாளைக்கெல்லாம் நானும் அங்கு வந்து உன்னுடனே சேர்ந்து கொள்ளலாம் என்று எண்ணியிருந்தேனே?" என்றார்.

"ஆம், இளவரசே! இவ்வளவு நேரம் நான் ஈழநாட்டில் இருக்க வேண்டியவன் தான்! அங்கே பாண்டிய வம்சத்தாரின் மணிமுடியையும் அவர்களுக்கு இந்திரன் தந்த இரத்தின ஹாரத்தையும் தேடிக் கொண்டிருக்க வேண்டியவன். சைவப் பைத்தியமான சேந்தன் அமுதனை வைத்தியர் மகன் கொல்லாமல் தடுக்க முயன்று இந்தத் துர்க்கதிக்கு உள்ளானேன். பினாகபாணியின் ஈட்டி என்மேல் பாய்ந்ததும் நினைவிழந்து விழுந்தேன். கண் விழித்துப் பார்த்ததும் இங்கே இருக்கக் கண்டேன். இந்தப் பெண்மணிகளின் சிறைக்கு எப்படி வந்து சேர்ந்தேன் என்பது தெரியாது. கருணை கூர்ந்து நான் இங்கிருந்து தப்பிச் செல்வதற்கு உதவ வேண்டும். இல்லாவிட்டால், தங்கள் அருமைச் சகோதரரும் என் அருமைத் தலைவருமான ஆதித்த கரிகாலரைக் கொன்றதாக என்பேரில் வீண் பழியைச் சுமத்தி விடுவார்கள்!" என்றான் வந்தியத்தேவன்.


வானதி குறுக்கிட்டு, "ஐயா! இவர் கூறுவது தவறு. இவர் தப்பி ஓடிப் போனால்தான் அத்தகைய பழி இவர்மீது ஏற்படும். உண்மை வெளியாகும் வரையில் இவர் இங்கேயே இரகசியமாக இருக்க வேண்டும் என்பது தங்கள் திருத்தமக்கையின் விருப்பம்!" என்றாள்.

"இவள் கூறுவதிலும் உண்மை இருக்கிறது. நீ தப்பி ஓட முயன்றால்தான் அந்தப் பழி உனக்கு ஏற்படும். என்னையும் அது பீடிக்கலாம். அதைக் காட்டிலும் உண்மையில் நடந்ததை உலகம் அறிய நிரூபிப்பதுதான் நல்லது. முதலில், என்னிடம் சொல்லு! கடம்பூரில் நடந்ததையெல்லாம் விவரமாகச் சொல்லு!" என்றார் பொன்னியின் செல்வன்.

வந்தியத்தேவனும் தான் அறிந்தபடி நடந்ததையெல்லாம் கூறினான்.

எல்லாவற்றையும் கேட்ட பின்னரும், ஆதித்த கரிகாலரின் மரணம் நேர்ந்தது எப்படி என்பதை இளவரசரால் நிர்ணயிக்க முடியவில்லை. (தொடரும்)


KAMINIA
OIL
KAMINIA
PERFUMERY Co
BOMBAY
காமினியா
ரிஜிஸ்டர்ட் ஆயில் ரிஜிஸ்டர்ட்
காமினியா ஆயிலின் (ரிஜிஸ்டர்ட்) ஜீவசக்தியுள்ள சரக்குகள், இந்த பிரசித்தி பெற்ற ஹேர் ஆயிலை மற்றெல்லா ஹேர் ஆயில்களினின்றும் மாறுபட்டு விளங்கச் செய்கிறது. கேசத்தை வளப்படுத்துவதற்கு அவசியமானவற்றைத் தவிர வேறொன்றுமே இல்லை. இந்த பாட்டிலில் பூராவும் காமினியா ஆயில்தான். வேறொன்றும் இத்துடன் கலக்கப்படுவதில்லை. இதில் அடங்கியுள்ள தைலம் பூராவும் உபயோககரமாக செலவழிக்கப் படுகிறது. எனவே, நீங்கள் காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) வாங்குவதானால் உங்கள் பணத்திற்கான முழு மதிப்பையும் பெறுகிறீர்கள்.
சாம்பிள் பெற தபால் செலவிற்கு அணா 4 ஸ்டாம்பு அனுப்பவும்.
ஆங்கிலோ இந்தியன் டிரக் & கெமிகல் கோ.
பம்பாய்-2


உங்கள் வீட்டை அழகு படுத்துங்கள்...
—புராதனமானதும், நவீனமானதும்
ஸ்பார்ட்டன் அளிக்கும் அழகிய தோற்றத்திற்கு ஈடு வேறு இல்லை. நீங்களே உபயோகித்து உணரலாம்.
Spartan
CLEAR
Addisons Paints & Chemicals Ltd.
Madras-11.
இந்தியா முழுவதும் ஸ்டாக்கிஸ்ட்களும் விநியோகஸ்தர்களும் உள்ளனர்

# சோதிட அநுபவங்கள்

சுமார் மூன்று வருஷங்களுக்கு முன் எனக்கு ஒரு சோதிடர் ''உம்முடைய தந்தை சரியாக இன்னும் பதினொரு மாதங்களில் இறந்து விடுவார். உமக்குக் கருமம் செய்து தர்ப்பை பிடிக்க வேண்டிய கட்டம் வந்து விட்டது!'' என்று கூறி ''அப்படி நடக்கா விட்டால் நான் சோதிடம் பார்ப்பதையே விட்டு விடுகிறேன்!'' என்றார். நான் மிகவும் துக்கப்பட்டுப் போய் விட்டேன்!

அதிலிருந்து என் தந்தையைப் பார்க்கும் போதெல்லாம் அழுகையே வந்து விடும். என் அறிவே சரியான நிலையில் இல்லாமல் பைத்தியம் பிடித்தவனைப்போல் இருந்தேன். அவர் சிரித்து மகிழும் போதெல்லாம் எத்தனை நாளைக்கு இந்தச் சிரிப்பையும் மகிழ்ச்சியையும் பார்க்கப் போகிறோம் என்று என் மனம் பச்சாதாபப்படும்.

என் தந்தை இருக்கும்போதே எல்லாம் செய்து விட வேண்டும் என்று நானும் என் தமையனும் பாகம் பிரித்துக் கொண்டோம். இது விஷயத்தில் என் தகப்பனாருக்குக் கொஞ்சம் மன வருத்தமாக இருந்தது. நான் அதைப் பொருட்படுத்தவில்லை. அவருக்குத்தான் உள் விஷயம் ஒன்றும் புரியாதே! என் தகப்பனாரை நல்ல முறையில் புகைப்படம் ஒன்று எடுத்து அதைப் பெரிய அளவில் தயார் செய்து வைத்துக் கொண்டேன். சோதிடர் சொன்ன மாதம் நெருங்க நெருங்க, என் உள்ளத்திலே கொந்தளிப்பும் திகிலும் அதிகமாகிக் கொண்டே வந்தது. ஈமச் சடங்குகள் செய்வதற்கும் பொருள் சேகரித்துக் கொண்டேன். நெருங்கிய உறவினர்களுக்கெல்லாம் சாக்குப் போக்குச் சொல்லி வரவழைத்தேன்! சோதிடர் சொன்ன நாளும் வந்தது. அன்று முழுவதும் நான் என் அப்பாவை விட்டுப் போகவே இல்லை. சோதிடர் கூறியபடி என் அப்பாவுக்கு ஒன்றும் நிகழ்ந்து விடவில்லை. மிகவும் சந்தோஷத்துடன்தான் இருந்தார்! கொஞ்சம் கொஞ்சமாய் அந்த மாதமே கடந்து விட்டது. எனக்கும் அந்தத் திகில் கொஞ்சம் விட்டது. இருந்தாலும் சிறிது மனத்தில் இருந்தது. பிறகு அந்த வருஷமே முடிந்துவிட்டதால் என் சந்தேகம் அறவே ஒழிந்து விட்டது. என் தந்தை உயிருடனிருப்பதில் எனக்கு அளவற்ற சந்தோஷம்தான். ஆனால் நான் சோதிடத்தைப் பற்றி என்ன முடிவுக்கு வருவது!

ஒன்பத்துவேலி
20-1-54

ஜி. சாமிநாதன்

●

ஒரு பத்திரிகையில் 15-8-53 முதற் கொண்டு 15-9-53 வரை வெளியான மாதப் பலனை என் நட்சத்திரத்துக்குப் பார்த்தேன். அதில், ''பந்துக்கள் வருகை, அவர்களுடன் பழகுவதில் அபிவிருத்தி'' என்று கூறப்பட்டிருந்தது. நடந்தது என்ன தெரியுமா! என் சமீப பந்து ஒருவர் காலமானதுதான். ஆகையால் சோதிடர் ஒருவரை அணுகி இது விஷயமாகக் கேட்டேன். எனது ஜாதகத்தை ஆராய்ச்சி செய்து கடந்த பதினைந்து நாட்களின் பலனும், எனது பந்துவின் மரணம் குறித்தும் வரும் பதினைந்து நாட்களின் பலன்களையும் விவரித்தார். பிற்பாடு அவர் உரைத்த வாறே பலன்கள் நடந்தேறியதையும் கண்டேன். அந்தச் சோதிடர்: ''ஜாதக தசா புக்திகளைக் கொண்டு ஒவ்வொருவருக்கும் பலனை அவரவர்களுக்குத் தக்கபடி சொல்லுவதுதான் சரியான முறை'' என்றார். தின, வாரப் பத்திரிகைகளில் எழுதப்படும் பலன்களுக்கும், சோதிட சாஸ்திரத்திலே பண்டிதர் ஒருவர் சொல்லும் பலன்களுக்கும் வித்தியாச மிருக்கிறது. இன்று நான் அறிந்தது யாதெனில், சோதிடம் அரியதொரு சாஸ்திரம், அதை எடுத்துச் சொல்லத்தான் சரியான சோதிடர் வேண்டு மென்பது.

தியாகராயநகரம்
20-1-54

ஜி. ஜயச்சந்திரன்

●

என் தம்பி, பூனாவில் உள்ள ஒரு வேலைக்கு நேரில் வரும்படி வந்த கடிதத்தின்படி கிளம்புகையில் செவ்வாய், புதனில் வடக்கு நோக்கிப் பிரயாணம் செய்ய வாரசூலை யானதால் போக வேண்டாம் என்றும் அடுத்த நாள் இரவு வண்டிக்குப் போகும்படி எவ்வளவு கூறியும் கேளாமல் செவ்வாய் இரவு 7-30 மணி வண்டியில் கும்பகோணம் சென்று ரயில் ஏறி விட்டான்.

புதன் காலையில் பம்பாய் எக்ஸ்பிரஸ் வண்டியில் மேற்கொண்டு பிரயாணம் துவக்கப் பட்டது. அன்றிரவு சுமார் 9-30 மணிக்கு ரெய்ச்சூர் ஸ்டேஷனில் என் தம்பியும், ஒரு நண்பரும் காப்பி சாப்பிட நினைத்துப் பெட்டி படுக்கைகளைப் பக்கத்தில் இருந்த ஒரு பையனைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிச் சென்றனர். இவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த வேறொரு நபர் என் தம்பியின் பெட்டியை எடுத்துக் கொண்டு இறங்க முயலுகையில் பையன் தடுத்துப் பேச, அந்த மனிதன், என் தம்பியின் பெட்டியென்று வேறொன்றைக் காட்டிவிட்டுச் சென்று விட்டான். திரும்ப வந்த என் தம்பி பெட்டியைக் காணாமல் விசாரிக்கத் தகவல் தெரிந்தது. பின்னர் படுக்கையை நண்பரிடம் ஒப்புவித்து விட்டு, போலீஸ் புகார் செய்து, உதவிக்கு அளிக்கப்பட்ட ஒரு ஜவானுடன் ரெய்ச்சூரில் தேடியலைந்தும் ஒன்றும் புலப்படாதது கண்டு 12-30 மணிக்கு மெயில் வண்டியில் ஏறி விட்டான்.

கடவுள் சித்தத்தால் ஷோலாப்பூர் ஸ்டேஷனில் ஏதும் துப்பு கிடைக்குமா என்று அலைந்து கொண்டிருந்த என் தம்பியிடம் பெட்டியுடன் வந்து நின்றான் திருடன். அவனைக் கண்டவுடன் போலீஸில் ஒப்புவிக்க, சோதனை செய்து சாமான்கள் சரி பார்க்கப்பட்டன. ஆனால் ரொக்கமாய் வைத்திருந்த பணம் ரூபாய் முப்பதும், எஸ். எஸ். எல். ஸி. சர்டிபிகேட்டும் தவிர பாக்கி துணிமணிகள் யாவும் சரியாய் இருந்தன.

'நான் செய்வது நல்லவர்கள் செய்யமாட்டார்கள்' என்று பெரியார்கள் கூறுவது எவ்வளவு உண்மை யென்று இப்பொழுது தான் உணர்ந்ததாயும், சோதிடம் பொய் போகாது என்றும் தான் அறிந்ததாயும், வருந்தி மன்னிப்புக் கோரிக் கடிதம் எழுதி யிருக்கிறான்.

மணப்பாறை
19—1—54

எஸ். நாகராஜன்

●

வாழ்க்கையில் நான் மிகவும் அதிசயப் பிறவி. கஷ்டப் படுவதற்கென்றே ஜன்மமெடுத்திருக்கிறேன். அவற்றை எழுதினால் ஒரு பெரிய புத்தகமாகிவிடும். ஆகையால் இரண்டொரு சம்பவங்களை மட்டும் இங்கே சுருக்கமாகக் கூறுகிறேன்.



★ ✱ ✱ டில்லித் தமிழ்ச் சங்கம் ஜனவரி 19-ட யன்று இலங்கை மந்திரி ஸ்ரீ கந்தையா வைத்தியநாதனுக்கு வரவேற்பு ஒன்று அளித்து கௌரவித்தனர். பிரபல விஞ்ஞானியும் சங்கத் தலைவருமான டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் மேற்படி வரவேற்பு விழாவுக்குத் தலைமை வகித்தார். இலங்கை ஹைகமிஷனர் ஸ்ரீ குமாரஸ்வாமி வரவேற்பில் கலந்து கொண்டார். அம்மூவரையும் மேலேயுள்ள படத்தில் காணலாம். ✱ ✱ ✱

எனக்கு விவாகம் ஆனதிலிருந்து சதா நோய் வாய்ப்பட்டு இருந்தேன். என் தகப்பனர் அதற்காகப் பார்க்காத ஜோஸியம், மாந்திரீகம், வைத்தியம் பாக்கியில்லை. அதில் ஒரு ஜோஸியர் "இவன் இருபத்து மூன்ருவது வயதில் இறந்து விடுவான்" என்று சொன்னர். என் தகப்பனர் மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டே இருப்பார். ஆனல் இருபத்து மூன்று வயது போய் முப்பத்து மூன்று வயதும் வந்து விட்டது. நான் உயிரோடு தானிருக்கிறேன். என் தகப்பனர், சோதிடம் சொன்ன சோதிடர் எல்லாரும் போய் விட்டார்கள்.

என் கணவருக்குச் சோதிடத்தில் அபார நம்பிக்கை. அவர் ஜோஸியம் பார்த்துக் கொண்டு, வரும் சம்பளத்தை எல்லாம் குதிரை வாலில் கட்டிப் பணத்தைத் தொலைத்து வருகிருர். இப்படியே ஆறு ஏழு ஆண்டுகளாக நான் படும் கஷ்டம் எழுதி முடியாது. நானும் ஜோஸியத்தில் நம்பிக்கை இழக்காமல் கலியாணத்துக்கு நிற்கும் பெண்ணின் ஜாதகத்தைச் சோதிடர்களிடம் காட்டி வருகிறேன். அவள் ஜாதகத்தைப் பார்க்கும் சோதிடர்களும் பெரிய பணக்கார வீட்டுப் பையன் ஒருவன் தானே வந்து இந்தப் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டு போய் விடுவான் என்று கூறுகிருர்கள். இது வரை அந்தப் பணக்கார மாப்பிள்ளை வரவில்லை!

பம்பாய்
22—1—54

ராதா

●

கடவுள் எல்லாம் வல்லவன் என்றும், அவன் தான் படைத்துக் காத்து அழித்து அருளுகிருன் என்றும் ஒப்புக் கொண்டால், நவக்கிரகங்கள் நினைத்தபடி மனித வர்க்கத்தை ஆட்டி வைக்கின்றன என்பதை நம்ப முடியுமா! நவக் கிரகங்கள் உப கடவுள்களா! அப்படி எத்தனை கடவுள்கள் இருக்க முடியும்! சோதிட சாஸ்திரத்தில் அந்தக் கடவுள்களுக்குக்கூடப் பூரண சுதந்திரம் கிடையாது. குரு ஒன்பதா மிடத்துக்கு வந்தால், நிச்சயமாக அவன் நல்ல பலனைத் தந்தேதீர வேண்டும் என்கிருர்கள்.

கடவுள் தத்துவமும், சோதிட சாஸ்திரமும் முரண்பட்டவை. கடவுள்கூட நவக்கிரகங்களின் சக்திக்குக் கட்டுப்பட்டவர்தான் என்று கற்பனை செய்துள்ளனர் சோதிடர்கள். நம் எதிர்காலத்தை அமைத்துக் கொள்வது உண்மையில் நம்முடைய மதியிடம் தான் இருக்கிறது.

நம் தேசத்தில் சாஸ்திரங்களுக்குக் குறைவில்லை. சகுன சாஸ்திரம், பக்ஷி சாஸ்திரம் முதல் பகலின் சுழி சாஸ்திரம் வரை எதற் கெடுத்தாலும் சாஸ்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. போதாததற்கு ராகு காலம், எமகண்டம் வேறு. தினம் நமக்குக் கிடைக்கும் பகல் 30 நாழிகை நேரத்தில் இவையிரண்டும் 7-30 நாழிகை நேரத்தைச் சாப்பிட்டு விடுகின்றன. எந்த நல்ல காரியமும் இந்த ராகு காலம் எமகண்டத்தில் செய்யக் கூடாதாம். பாவம்! அந்த நேரங்கள் மட்டும் என்ன பாவத்தைச் செய்தனவோ!

கோடானு கோடி ஜனங்களின் வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் ஒன்பது ராசிகளில் பிரித்துப் பலன் சொன்னல் அது எவ்வளவு தூரம் சரியாக இருக்கும் என்பது தெளிவு. ஏழைக்கும் பணக்காரனுக்கும், ஆணுக்கும் பெண்ணுக்கும் அவர்கள் ஒரே ராசியில் பிறந்து இருந்தால் ஒரே பலன்தான்! இது அறிவுக்குப் பொருத்தமுள்ளதா! சிந்தித்துப் பாருங்கள்.

அம்பத்தூர்
21—1—54

பி. ஜயராமன்

●

என் இருபதாவது வயதில் என் ஜாதகங்களை வைத்து அணு அணுவாய் ஆராய்ந்து என் திருமணத்தை நடத்தி வைத்தார்கள். முப்பத்திரண்டாம் வயதில் விவாகரத்து செய்ய நேர்ந்தது. பின்னும் ஐந்து பெண்களின் ஜாதகத்தை அலசி ஆராய்ந்து ஒரு நங்கையைத் தேர்ந்தெடுத்து மணம் புரிந்து கொண்டேன். அவளும் சரியாகப் பத்து மாதம் முடியுமுன் பரகதி யடைந்து விட்டாள். மீண்டும் ஜாதகம், ரேகை சாஸ்திரம், நிமித்தங்கள் யாவும் பார்த்து மனத் திருப்தியுடன் 20—10—53-ல் ஒரு மாதைக் கைப் பிடித்தேன். மூன்று மாதங்களில் அவள் நிலையும் என் நிலையும் திசை மாறி இயங்குவதால் ஜோசியங்கள் அனைத்தும் பொய் யெனக் கூறுகிறேன். காளிக்கும், கருப்பனுக்கும் ஆடு கோழி பலியிடவேணும் என்று ஒரு சாரார் வகுத்திருந்த திட்டத்தைப் போல் சோதிட சாஸ்திரத்தையும் மனக் கலக்கம் கொடுத்துப் பணம் பறிக்கும் திட்டமாக மற்றொருசாரார் வகுத்திருக்கிருர்க ளென்பதே என்னுடைய அனுபவ பூர்வமான முடிவு.

கொழும்பு
23—1—54

ஆர். எம். முத்தையா

**ஆ**யில்ய நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணை விவாகம் செய்து கொண்டால் பெண்ணின் மாமியார் இறந்து விடுவார் என்று சோதிடர் கூறினர். ஆனால் மூறைப் பெண் என்று விவாகம் நடத்தினர். அந்தப் பெண்ணுக்கு நாலு ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையு மிருக்கின்றன. பெண்ணின் மாமனர் மாமியார் இருவரும் சௌக்கியமாக இருக்கின்றனர்.

என் தாய்க்கு ஆண் குழந்தைதான் பிறக்கும் என்று சோதிடர் கூறினர். ஆனால் ஒரு ஆண் குழந்தைகூடப் பிறக்க வில்லை. நாங்கள் நாலு பேர் பெண்களாகத்தான் பிறந்திருக்கிறோம்.

என் உறவினர் ஒருவர், தம் பெண்ணுக்கும் மகனுக்கும் விவாகம் செய்து விட்டுத் தம் பேரன் பேத்திகளைப் பார்த்து விட்டுத்தான் இறப்பார் என்று சோதிடர் கூறினர். ஆனால் அவர் தம் பெண்ணுக்கும் மகனுக்கும் விவாகம் நடக்கும் முன்பே இறந்து விட்டார்.

எமகண்டத்தில் குழந்தை பிறந்தால் இறந்து விடும் என்று கூறுகின்றனர். ஆனால் எமகண்டத்தில் பிறந்த குழந்தை பல வருடங்களாகியும் இன்னும் உயிருடன் இருக்கிறது.

சோதிடத்தை நம்பிக் கொண்டிருப்பதில் ஒரு பயனுமில்லை. இப்போது சோதிடம் நாள் நட்சத்திரம் ஜாதகம் பாரராமல் விவாகம் செய்து கொள்கின்றவர்கள் குழந்தைகளைப் பெற்று ஒற்றுமையுடன் இன்பமாக வாழ்ந்து வருகின்றனர்.

நெஞ்சில் தைரியத்துடனும், செயலில் ஊக்கத்துடனும், வெற்றி தோல்விகளைச் சமமாகக் கருதிப் பணியாற்றினல் இறுதியில் நம் காரியங்களைச் சுபமாக முடித்துக் கொள்ளலாம்.

கிண்டி.
21-1-54 ஏ. ஜி. நிவேதிதா ராணி

●

**எ**ன் பாட்டனுருக்கு வயது எண்பதுக்குமேலாகிறது. ஏழு வருஷங்களுக்கு முன் என் பாட்டனுருக்குச் சுரம் கண்டது. அவருக்குச் சோதிடத்தில் நம்பிக்கை அதிகம். அவர் ஜாதகத்தை ஒரு சோதிடர் ஆராய்ந்து கொண்டிருந்தார். சோதிடர் பாட்டனுரின் சோதிடத்தைப் பார்த்து விட்டு, "நீங்கள் நாளை இரவு 10 மணி 12 நிமிஷத்துக்கு இறந்து விடுவீர்கள்!" என்று கூறினர்.

சோதிடர் போனவுடன் என் பாட்டனுர் தாம் இறக்கும் போது உடைப்பதற்காகத் தேங்காயும் கொளுத்துவதற்குக் கற்பூரமும் கொண்டு வரச் சொன்னுர். மறு நாள் மாலை ஆறு மணி முதல் தம் பேரக் குழந்தைகளை ஆண்டவன் துதிப் பாடல்களைப் பாடச் சொன்னுர்.

எனக்கு அப்போது ஒன்பது வயதிருக்கும். சாவித்திரி சத்யவான் சினிமா பார்த்திருந்த நான் எமதர்மராஜன் நேரிலேயே வந்து என் பாட்டனுரை அழைத்துக் கொண்டு செல்வார் என்று எண்ணி யிருந்தேன். அன்றிரவு மணி ஒன்பது ஆகியும் நான் படுக்கவில்லை. எமதர்மராஜனை நேரில் பார்க்க வேண்டும் என்ற ஆசையால், எட்டு மணிக்கே தூங்கிவிடும் நான் விழித்துக் கொண்டிருந்தேன். மணி பத்தாயிற்று. பன்னிரண்டு கூட அடித்து விட்டது. ஆனல் எமதர்மராஜனைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை. கடைசியில் ஏமாற்றத்துடன் தூங்கி விட்டேன்.

மறு நாள் எழுந்து பார்த்தால் பாட்டனுர் இறக்க வில்லை. அப்போது அவருடைய பேரன்களில் ஒருவன் ஓடிவந்து "தாத்தா, நீ செத்துப் போகும் போது உடைப்பதற்காக வைத்திருந்த


பிரதம மந்திரியின்

**தேசீய நிவாரண நிதி உதவிக்காக**

**அரிய கலை விருந்து**

○

**கதகளி, பரதநாட்டியம், நாட்டு நடனம்**

**(ஸ்ரீமதி ருக்மிணி தேவி கோஷ்டியார்)**

14-2-54 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு

**கலாக்ஷேத்திரத்தில்**

(அடையாறு, சென்னை)

ஸோவியத் கலை கோஷ்டியினரின்
முன்னிலையில் நடைபெறும்

கட்டணம்: ரூ. 5, 2, 1.

★

**ருஷிய நடனங்கள் — சங்கீதம்**

ஸோவியத் கலை கோஷ்டியைச் சேர்ந்த
ருஷிய கலைவாணர்கள் நிகழ்த்துவார்கள்

15-2-54 திங்கள் மாலை 6-30 மணிக்கு

திருவல்லிக்கேணி தேசிய உயர்தரப் பெண்கள் பாடசாலை

**கலா மண்டபத்தில்**

○

17-2-54 புதன் & 18-2-54 வியாழன்
மாலை 6-30 மணிக்கு

**அண்ணுமலை மன்றத்தில்**

(எஸ்பிளனேட், சென்னை)

பிரதி தினமும் கட்டணம்:
ரிசர்வ்டு ரூ. 15, 10 - மற்ற வகுப்புகள் ரூ. 5, 3.

✶

**தென்னிந்திய இசை விருந்து**

(பிரபல கர்நாடக சங்கீத வித்வான்கள்
நிகழ்த்துவார்கள்)

19-2-54 வெள்ளி மாலை 6-30 மணிக்கு

**அண்ணுமலை மன்றத்தில்**

(எஸ்பிளனேட், சென்னை)

ஸோவியத் கலை கோஷ்டியினரின் முன்னிலையில்
நடைபெறும்

கட்டணம்: ரூ. 2, 1.

எல்லா நிகழ்ச்சிகளுக்கும் நன்கொடையாளர்
கட்டணம்: ரூ. 50

ஸ்ரீமதி பி. வி. செரியன்
காரியதரிசி, பிராந்தியக் கமிட்டி.

டிக்கெட்டுகள் கிடைக்குமிடம்:

**ஸென்ட்ரல் இண்டஸ்ட்ரியல் மியூஸியம்**
மவுண்ட் ரோடு, சென்னை - போன்: 85998

**ஹிக்கின்பாதம்ஸ் லிமிடெட்**
மவுண்ட் ரோடு, சென்னை - போன்: 86860

## சங்கர்ஸ் வீக்லி (Children's Number, 1953)

பிள்ளைக் கனியமுது என்றும், பேசும் பொற் சித்திரம் என்றும் மகாகவியால் போற்றிக் கொண்டாடப்படும் குழந்தைக் குலத்துக்கு, புது டில்லியிலிருந்து ஆங்கிலத்தில் வெளியாகும் பிரசித்தி பெற்ற வாரப் பத்திரிகையான "சங்கர்ஸ் வீக்லி" ஓர் அரிய பரிசை இந்த வருஷத்திலும் அளித்திருக்கிறது. அதுதான் குழந்தைகளுக்காகக் குழந்தைகள் எழுதிய குழந்தைக் கட்டுரைகள், குழந்தைச் சித்திரங்களுடன் வெளியிடப்பட்டிருக்கும் விசேஷ மலர். இருநூறு பக்கங்களுடன் பெரிய அளவில் நல்ல தாளில் வெளியாகி யிருக்கிறது.

மேற்படி பத்திரிகையாளர் நடத்தும் சர்வதேசக் குழந்தைகள் கட்டுரைப் போட்டியில், ஆப்கானிஸ்தானம், அர்ஜண்டைனா, ஆஸ்திரேலியா, பெல்ஜியம், பிரேஸில், பர்மா, கானடா, ஸிலோன், சீனா,



டென்மார்க், எகிப்து, பியூஜீத் தீவு, பின்லாந்து, ஜப்பான் முதலிய நாற்பத்து நான்கு தேசங்களைச் சேர்ந்த குழந்தைகள் கலந்து கொண்டிருக்கின்றன என்பது பெருமைப்பட வேண்டிய விஷயம். சர்வதேசக் குழந்தைகள் தீட்டிய வண்ண ஓவியங்கள் ஏராளமாக இம்மலரில் இடம் பெற்றிருக்கின்றன. இந்த விசேஷ மலருக்குப் பாரத தேசத்தின் உதவி ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் தந்துள்ள முன்னுரையில், "சர்வதேசக் குழந்தைகளும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு பிறநாட்டுப் பழக்க வழக்கங்களையும் பண்புகளையும் அறிந்து, சமாதானமாக நல்லுறவோடு வாழ இம்முயற்சி பெரிதும் பயன்படும்!" என்று கூறியிருக்கிறார்.

Shankar's Weekly. Odeon Buildings, Connaught Place, New Delhi, Price Rs. 5/-

தேங்காயை அம்மா உடைத்துச்சட்டினி அரைத்து விட்டாள்!" என்று கூறினான். அவ்வளவுதான், பாட்டனார் சண்டைக்கு வந்து விட்டார். உடனே ஒரு பெரிய தேங்காயை வாங்கி வரச் சொல்லித் தன் தலைமாட்டிலேயே தேங்காயை வைத்துக் கொண்டார். விஷயத்தை வளர்த்துவானேன்! என் பாட்டனார் இன்னும் உயிருடனிருக்கிறார். தை பிறந்துவிட்டால் அவருக்கு வெகு சந்தோஷம். இப்போது உத்தராயணம் ஆரம்பமாகி யிருப்பதால் இந்த மாதத்தில் இறந்தால் மறு பிறப்பே இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்.

நான் பிறந்த பின் என் தாயாருக்குக் குழந்தையே பிறக்காது என்று பல ஜோதிடர்கள் கூறினார்கள். பத்து வருடங்களுக்குப் பின் என் தாய்க்கு இரண்டு குழந்தைகள் பிறந்திருக்கின்றன. என் வாழ்க்கையில் நான் கண்ட வரையில் சோதிடம் கூறியபடி ஒரு காரியமும் நடைபெறவில்லை. 'செவ்வாய் வெறும் வாயாகிவிடும்' என்று கூறியதை நான் நம்புவதில்லை. அந்த நாளில் எத்தனையோ காரியங்களைச் செவ்வாய்க் கிழமையில் செய்து வெற்றி பெற்றிருக்கிறேன்.

ஆனந்தூர்
21—1—54

ஜெ. கிரிஜா தேவி

●

"இஉன்பது மனிதன் செயல்; ஜீரணமாவது தெய்வ சங்கல்பம்" என்ற பழமொழிப்படி சென்ற காலத்தைத்தான் எந்த முனிவர்களும் ஓரளவு கணித்துச் சொல்லலாமே யொழிய எதிர்காலத்தைப் பற்றிக் கூறுவது அசாத்தியம். ஜோதிடத்தை நம்பி வாழ்க்கைத் திட்டங்களை அமைத்துக் கொள்வது கூடாது என்பது என் அனுபவம்.

ஒரு முரடன் கையில் ஒரு சிட்டுக் குருவியை வைத்துக்கொண்டு இதற்கு ஆயுள் எப்படி என்று கேட்டானாம், சோதிட நிபுணர் ஒருவரை நோக்கி. "சிட்டுக் குருவிக்கு இன்னும் ஓராண்டு ஆயுள்" என்று சோதிடர் கூறவே, அந்த க்ஷணமே முரடன் அதன் தலையைத் திருகிக் கொன்றானாம். மறுநாள் அதே முரடன் மேற்படி சோதிடரை அணுகி வேறொரு சிட்டுக் குருவியைக் காட்டி ஆயுள் கேட்கவே சோதிடர் "உன் கையில் அகப்பட்ட குருவியின் ஆயுள் உன் கையில்தான் இருக்கிறது" என்றாராம். முரடன் உடனே சிட்டுக் குருவியைப் பறக்க விட்டு விட்டு "அதன் ஆயுள் என் கையில் இல்லையே! இந்தத் தடவையும் உம் சோதிடம் பொய்யாகி விட்டதே" என்றானாம்.

உலக ஜனசமூகம் பெரிய மாற்றத்தை அடையும்போது, அரசாங்க அமைப்பே மாறுதலடையும். அரசாங்க அமைப்பு மாறுத லடையும் போது, ஜனசமூகமே பெரிய மாறுதலடையும். இதற்கு மாறாக எந்தச் சோதிட சாஸ்திரமும் குறுக்கே நிற்க முடியாது. இந்தக் கொள்கையின் கருத்தை அமைத்துத்தான் திருத்தக்க தேவரும்,

"கோளிலே நிர்த்திடில் கோன்நிலை திரியும்
கோன்நிலை திர்த்திடில் கோளிலை திரியும்"

என்று கூறி இருக்கிறார்.

உடன்கட்டை ஏறுவது சட்ட விரோதமாகு முன்னர், வாலிபக் கணவனுடைய விதியோடு மனைவியின் விதியும் பிணைக்கப் பட்டபடியே கிரகங்கள் அமைந்திருக்க வேண்டும். உடன் கட்டை ஏறுவது சட்ட விரோதமான பின்னர் மேற்படி கிரகங்கள் தம் அமைப்பிலும் மாறுதல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. சாரதா சட்டம் வந்த பின்னர் பெண்கள் பூப்பெய்துமுன் திருமணம் செய்யச் சித்தமாக இருந்த கிரக அமைப்புகள் மாறி விட்டன. பல தார மணத் தடைச் சட்டம் தோன்றியபின் மனைவி இருக்கவே ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை மணக்கும் நிலையில் அமைந்து காரியம் நிகழ்த்தி வந்த கிரகங்கள் தற்போது செயலற்றுப் போய் அந்த அமைப்பை மாற்றிக் கொண்டு விட்டன! அரசன் மகன் அரசன் என்றிருந்த கிரக அமைப்புகள் எல்லாம் மாறி, உழவன் மகனும் அமைச்சராகலாம் என்ற

முறையில் தற்போது கிரகங்கள் அமைய வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

இவ்வாறு எவ்வளவோ கூறலாம். ஆகையால் சோதிடத்தை ஒரு பொழுது போக்குக் கலையாக எண்ணாமலே யொழிய, அதை நம்பி வாழ்க்கைக்கு வேண்டிய திட்டங்களை அமைக்க ஆரம்பிப்பது மதியீனம்.

> ஊழிற்பெருவலியாவுள மற்றொன்று
> சூழினுந்தான் முந்துறும்.
>
> தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன்
> மெய்வருத்தக் கூலிதரும்.
>
> ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
> தாழாது உஞற்றுபவர்.

என்ற திருக்குறளைக் கடைப்பிடித்து வாழ்க்கையை அமைத்துக் கொள்வதே மதியுடைமை யாகும்.

கவரைப்பாளையம்
22—1—54

ஏ. டி. என். இராமசாமி

●

அப்போது நான் ஒரு ஆரம்பப்பள்ளி ஆசிரியராக வேலை செய்து கொண்டிருந்தேன். என் நண்பர் சிலர் ஒரு பெரிய வீட்டின் ஒரு பகுதியில் குடியிருந்தனர். அங்கு மற்றொரு பக்கத்தில் ஒரு பெரியவரும் அவரது மகனும் மருமகளும் குடியிருந்து வந்தனர். தம்பதிகள் புதிதாய்க் கலியாணம் செய்து கொண்டவர்கள். பெரியவருக்குப் பேரக் குழந்தை பிறந்தால் மரணம் நேரிடும் என்று யாரோ ஒரு பிரபல சோதிடர் கூறியிருக்கிறார். அவ்வளவுதான்; வந்தது அனர்த்தம். இரவு நேரங்களில் தம்பதிகளை வெவ்வேறாக்கித் தடை விதித்துக் கிழவர் அவர்கள் மனதில் புயலைக் கிளப்பிவிட்டுவிட்டார். கிழவரின் கூக்குரல் நண்பர்களுக்கும் அடிக்கடி இடையூறு செய்தது. அவர்கள் ஒரு நாள் இதை என்னிடம் கூறி ஆலோசனை கேட்டனர். நண்பர்கள் உதவியுடன் பெரியவர் மகனையும் சரி செய்து கொண்டு நான் பெரியவரை ஏமாற்றத் திட்ட மிட்டேன்.

அன்றிரவு நண்பர்கள் இல்லத்தில் நான் அவர்களுக்குப் பழக்கமான சோதிடர்போலக் காட்சியளித்தேன். நண்பர்கள் நடித்த நாடகம் கிழவரையும் இழுத்தது. நான் முன்னரே தெரிந்து வைத்திருக்கிற கிழவரின் பூர்வோத்திரங்களைச் சோதித்துக் கூறினேன். அவர் முகம் நம்பிக்கைக் குரிய தென்பை அளித்தது. பேரக் குழந்தைகளின் கலியாணத்தைக் கண்ணால் கண்ட பிறகே கிழவர் இறப்பார் எனவும் கூறினேன். கிழவர் நான் கூறிய சோதிடத்தில் நம்பி விட்டார். அவருடைய நம்பிக்கையும் வீண் போகவில்லை.

இது நடந்து பத்தாண்டுகளுக்கு மேலாகிறது. இன்னும் கிழவர் உயிரோடிருக்கிறார். பேரக் குழந்தைகளையும் கொஞ்சிக் கொண்டிருக்கிறார்.

அருப்புக்கோட்டை
19-1-54

கரு. சுப்பையா

●

நாம் நினைத்த ஒரு மணமகனுக்கும், தமது பெண்ணுக்கும் பொருத்த மிருக்கிறதா என ஆராயும் பொருட்டு ஒருவர் சோதிடம் பார்த்தார். சோதிடர் இரு ஜாதகங்களையும் நன்றாகப் பரிசோதித்துப் பார்த்து அப் பெண்ணுக்கும், மணமகனுக்கும் கல்யாணம் நடத்தலா மென்று கூறி விட்டார். திருமணமும் நடந்து விட்டது.

ஆனால், மணம் முடிந்த மறுநாளே மணமகன் ஒரு விபத்துக்கு ஆளாகி மாண்டு போனான்.



உங்கள் பற்களுக்கும்
ஈறுகளுக்கும் ஏற்றது




நீம் டூத் பேஸ்ட்

இயற்கையான க்ளோரபிலுடன் கெடுதலை எதிர்க்கும் சக்தி, பூச்சியை அழிக்கும் வன்மை மற்றும் அழிவுச் சக்திகளை ஒழிக்கும் தன்மையைப் பெற்றிருப்பதுடன் பல் வைத்தியம் சம்பந்தப்பட்ட நூதன முறை ஆரோக்கிய விதிகளையும்கொண்டது.

பெரிய சைஸ்களிலும் கிடைக்கும்.




Margofrice
Neem Dental Powder

மார்கோப்ரைஸ் பற்பொடியை விரும்புகிறவர்களுக்கு இது ஏற்றது. நீம் பற்பசையின் இருப்பவை இதிலும் உள்ளன.

CALCHEMICO PRODUCTS

மதராஸ் ஆபீஸ்:
5/149, பிராட்வே, மதராஸ்-1



மாயூரம் நகராண்மைக் கழகத் துவக்கப் பள்ளியில் 'குடியரசு' தின விழாவானது, முன்னாள் நகரசபைத் தலைவர் ஸ்ரீ எம். எஸ். பொன்னுசாமி அய்யரின் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

ஜாதகத்தை ஆராய்ந்து பார்த்து வந்தவரிடம் "என்னய்யா! என்னிடம் விளையாடுகிறீர்களா! இந்த ஜாதகன் இறந்து இன்றோடு பதினைந்து நாட்கள் ஆகியிருக்க வேண்டுமே" என்று கூறினர்.

வந்தவர், சோதிடரிடம் "ஐயா, தாங்கள்தானே இந்த ஜாதகத்தைப் பார்த்து முன் ஒரு தடவை இந்த ஜாதகனுக்கு மணம் முடிக்கலாம் என்று சொன்னீர்! இப்போது மட்டும் எப்படி இவ்வளவு சரியாகச் சொல்லுகிறீர்! வேண்டுமென்றே ஒரு பெண்ணின் வாழ்வை அநியாயமாகக் கெடுத்துவிட்டீர்களே" என்று ஆத்திரத்துடன் சண்டை போட ஆரம்பித்து விட்டார்.

ஜோதிடருக்கு அப்போது தான் அவர் செய்த "கணிதத் தவறு" அவருக்குப் புரிந்தது.

என்ன பரிதாபம்! அனைவரும் துயரக் கடலில் மூழ்க வேண்டியதாயிற்று. சோதிட சாஸ்திரத்தைப்பற்றி, அவர்களைச் சார்ந்தவர்களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டது. அவர்களில் ஒருவர், சோதிடத்தைப் பரிசோதித்துப் பார்க்க மீண்டுமொரு முறை மாண்ட மகனின் சாதகத்தைப் பழைய சோதிடரிடம் கொண்டு போய்க் காட்டி, "இந்தப் பையனுக்கு எப்போது கல்யாணம் நடக்கும்!" என்று கேட்டு வைத்தார்.

இது என் பாட்டனார் நான் சிறு பையனாக இருந்தபோது என்னிடம் கூறிய சம்பவம்.

ஆகையால் சோதிடத்தை நம்புவதா, சோதிடர்களை நம்புவதா என்று தீர்மானிப்பதை விட நம்மை நாமே நம்பித் தைரியமாகக் காரியத்தில் இறங்குவது நல்லது என்பது என் அனுபவம்.

நகரம்
19-1-54 ரு. சு. சங்கரநாராயணன்

# அகில இந்திய எழுத்தாளர் மகாநாடு

மூன்றாவது அகில இந்திய எழுத்தாளர் மகாநாடு இந்தியப் பேனா ஸங்கத்தின் ஆதரவில் வரும் ஏப்ரல் மாதத்தில் சிதம்பரம் அண்ணாமலை நகரில் நடைபெற இருக்கிறது.

இச் சங்கம் சர்வதேச எழுத்தாளர்கள் சங்கமான பி. இ. என். சபையின் இந்தியக் கிளை.

பி. இ. என். எனப்படும் மூன்று ஆங்கில எழுத்துக்களைச் சேர்த்தால் பேனா எனப் பொருள்படும் 'பென்' என்னும் வார்த்தையாகும்.

உலகத்தில் ருஷ்யா ஒன்று நீங்கலாக சுமார் ஐம்பது தேசங்களில் இதன் கிளைகள் இருக்கின்றன.

இந்தியக் கிளையை ஸ்ரீமதி ஸோபியா வாடியா அவர்கள் நிலைப்படுத்தினர். டாக்டர் ரவீந்திரர் இதன் முதல் தலைவரா யிருந்தார். அவருக்குப் பின் ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடு தலைவரானர்.

இவருடைய தலைமையில் ஜயப்பூரிலும் காசியிலும் இரண்டு மகா நாடுகள் நடைபெற்றன. அம் மகா நாடுகளில் ஸ்ரீ பண்டித ஜவாஹர்லால் நேருவும் டாக்டர் ராதாகிருஷ்ணனும் இந்தியாவிலும் இங்கிலாந்திலுமுள்ள பிரபல எழுத்தாளர்களும் பல பல்கலைக் கழகங்களும் இலக்கிய சங்கங்களும் கலந்து கொண்டன. அம் மகாநாடுகளில் தென்னாட்டிலிருந்து நீதிபதி ஏ. எஸ். பி. ஐயர் அவர்களும் காலம் சென்ற ஆசிரியர் ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணி அவர்களும் மற்றவர்களும் ஒன்றாகக் கலந்து கொண்டார்கள்.

மூன்றாவது மகாநாடு, அண்ணாமலை பல்கலைக் கழகத்தாரின் ஆதரவில் ஏப்ரல் 16, 17, 18 தேதிகளில் நடைபெறுகிறது. டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் தலைமை வகிப்பார்.


அந்த மகாநாட்டில் கீழ்க்கண்ட நான்கு விஷயங்களைக் குறித்து விவாதித்து ஒரு முடிவுக்கு வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது.

நமது பழைய மகா காவியமான இராமாயணம், இப்பொழுது நாட்டில் வளர்ந்து வரும் சிறுகதைகள் முதலிய வற்றைக் குறித்தும், தேசத்தின் பல இலக்கியங்கள் கடந்த ஆறு வருஷங்களில் எவ்வளவு முன்னேற்ற மடைந்திருக்கின்றன; சுதந்தர இந்தியாவில் ஆங்கிலத்தின் எதிர்கால நிலை, முதலியவற்றைப் பற்றியும் அனுபவ பூர்வமான ஆராய்ச்சி நிறைந்த அற்புதமான பிரசங்கங்கள் நடைபெறும்.

எல்லாப் 'பென்' அங்கத்தினர்களும் இலக்கிய சங்கங்களின் பிரதிநிதிகளும் இரு 'பென்' அங்கத்தினர்கள் ஆதரவு பெற்ற எந்த எழுத்தாளர்களும் மகா நாட்டில் கலந்து கொள்ளலாம்.

சிலோன், பர்மா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலுள்ள தமிழ் எழுத்தாளர்கள் மகா நாட்டில் கலந்து கொள்வதற்குப் பிரத்தியேக சலுகைகள் தரப்படும். வெளி நாட்டிலிருந்து மகாநாட்டுக்கு வர விரும்புபவர்கள் தயவு செய்து பின்வரும் விலாசத்துக்கு எழுதிக் கேட்டுக் கொள்ளலாம்.

*[M. R. Jambunathan, Joint Secretary, The P.E.N. Khar, Bombay 21. India.]*


ECONOMISE
with
Perkins
தங்கு தடங்கலின்றி இயங்குவது, பராமரிப்புச் செலவுகள் குறைவு, நின்றதென்பதே இல்லை, அத்துடன் எண்ணெய்ச் செலவில் மகத்தான சேமிப்பளிப்பதின் மூலம் உங்கள் லாபத்தைப் பெருக்குகிறது.
சிக்கனமானதே உண்மையில் உயர்தரமானது!
Simpson & Co Ltd
MADRAS-2
Branches:
OOTACAMUND — BANGALORE
TIRUCHIRAPALLI — SECUNDERABAD (Dn.)



# சைக்கிள் தொழிற்சாலை

பாரத நாடு உலக நாடுகளுடன் சரி நிகர்ச் சமானமாக நிற்க வேண்டுமானால் நம் நாட்டில் தொழில்கள் வளர்ச்சி அடைய வேண்டும். அதிலும் இயந்திர உற்பத்தித் தொழில்கள் வளர்ந்தால்தான் நாடு முன்னேறும். அதற்காக நம் தமிழ் நாட்டுப் பிரமுகர்கள் பலர் ஒன்று சேர்ந்து இங்கிலாந்தில் உள்ள டி. ஐ. கம்பெனியின் கூட்டுறவுடன் சென்னை நகருக்கு மேற்கே பத்து மைல் தூரத்தில் உள்ள அம்பத்தூரில் "டி. ஐ. சைக்கிள் கம்பெனி" என்ற பெயரில் ஒரு பிரம்மாண்டமான தொழிற்சாலையை நிறுவி யிருக்கிறார்கள்.

அந்தத் தொழிற் சாலையின் நவீன இயந்திர வசதிகள் பொருத்தப்பட்ட ஒரு புதிய பகுதியை மைசூர் ராஜப் பிரமுகர் மகாராஜ ஸ்ரீ ஜயசாமராஜ உடையார் பகதூர் அவர்கள் ஜனவரி மாதம் 29ம் தேதி யன்று திறந்து வைத்தார்.

இந்தத் திறப்புவிழா வைபவத்துக்குச் சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா, முதல் மந்திரி ராஜாஜி, இதர மந்திரிகள், சென்னையில் உள்ள அயல் நாட்டு ஸ்தானிகர்கள், பிரபல தொழில் அதிபர்கள், பத்திரிகையாளர்கள் எல்லாரும் விஜயம் செய்து சிறப்பித்திருந்தனர்.

டி. ஐ. சைக்கிள் கம்பெனியின் டைரக்டர்கள் சார்பில் ஸ்ரீ ஏ. எம். எம். முருகப்பச் செட்டியார் அவர்கள் மைசூர் ராஜப் பிரமுகருக்கு வரவேற்புப் பத்திரம் ஒன்று வாசித்து அளித்தார்.

கம்பெனியின் மானேஜர் ஸ்ரீ என். கே. ஐயர், ஜனாதிபதி ராஜன் பாபு, உதவி ஜனாதிபதி, இந்திய சர்க்கார்—ராஜ்ய சர்க்கார் மந்திரிகள், தொழில் பிரமுகர்கள் முதலியோரிடமிருந்து வந்திருந்த ஆசிச் செய்திகளை வாசித்தார்.

பின்னர் மைசூர் ராஜப் பிரமுகர் மேஜை மீது இருந்த ஒரு மின்சாரப் பித்தானை அழுத்தியதும் தொழிற் சாலையின் பெரிய கதவுகள் தாமாகவே விலகித் திறந்து கொண்டன.

தொழிற்சாலையைத் திறந்து வைத்த ராஜப் பிரமுகர் அவர்கள் இந்தக் கம்பெனியின் உற்பத்திப் பொருள்களின் தரம் உயர்ந்திருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பிறகு பேசிய டி. ஐ. சைக்கிள் கம்பெனியின் சேர்மன் ஸ்ரீ ராமசாமி முதலியார் குறைந்த விலையில் சைக்கிள் உற்பத்தி செய்ய இந்தக் கம்பெனி உழைக்கும் என்றார்.

கடைசியில் இங்கிலாந்து டி. ஐ. கம்பெனியின் தலைவர் ஸ்ரீ ஐ. ஏ. ஆர். ஸ்டீட்போர்ட் நன்றி கூறத் திறப்பு விழா இனிது முடிந்தது.


ராஜப் பிரமுகரும் இதர பிரமுகர்களும் தொழிற்சாலையைச் சுற்றிப் பார்வையிட்டனர். தொழிற்சாலையில் தயாரித்து வைத்திருந்த சைக்கிள் ஒன்றில் சென்னை கவர்னர் கனம் ஸ்ரீ பிரகாசா ஏறி விட்டுப் பார்த்துப் பாராட்டினார்.

வருஷத்துக்கு ஒரு லட்சம் சைக்கிளும், சுமார் ஐம்பதாயிரம் இதர உறுப்புகளும் தயார் செய்யும் வசதியுள்ள இத்தொழிற் ஸ்தாபனத்தைத் தமிழ் நாட்டில் நிறுவி, தமிழ் நாட்டுக்குப் பெருமையளித்திருக்கும் டி. ஐ. சைக்கிள் இந்தியக் கம்பெனியின் டைரக்டர்களான ஸ்ரீமான்கள் ஏ. எம். எம். முருகப்பச் செட்டியார், ஏ. எம். எம். அருணாசலம் முதலியவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

வாழ்க, டி. ஐ. சைக்கிள் கம்பெனி!

மேற்படி கம்பெனியின் நவீன வசதியுள்ள புதிய தொழிற்சாலையின் திறப்பு விழாக் காட்சிகளை இரண்டு பக்கங்களிலும் காணலாம்.





# புத்தி வந்தது!

குண்டுமணி

சித்திர சேனர் தம்முடைய அறையில் மாய மந்திரங்களின் விந்தைகளையெல்லாம் ஆராய்ந்து கொண்டிருந்தார். அவருடைய அறையில் யாருமே நுழையக் கூடாது என்பது அவருடைய கடுமையான உத்தரவு. ஆனால் அவருக்குத் தெரியாமல் அந்த அறையில் நுழைந்து அவருடைய மாய வித்தைகளைக் கண் கொட்டாது கவனித்துக் கொண்டிருந்தான் அவருடைய செல்வக் குமாரன் சூரிய குமாரன்.

அவர் தன் கையில் ஒரு பூவை எடுத்துக் கொண்டு, "ஜாவோ" என்ற மந்திரத்தை உச்சரித்தார். அடுத்த கணம் அந்தப் பூ மறைந்து விட்டது. அதைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த சூரிய குமாரனுக்கு அந்த வார்த்தை அப்படியே மனத்தில் பதிந்து விட்டது. அவருக்குத் தெரியாமல், மாய வித்தை கற்றுக்கொண்ட பெருமை தாங்காமல் வெளியே ஓடோடி வந்து விட்டான் சூரியகுமாரன்.

பிறகு அவன் தன்னுடைய பெட்டியிலிருந்து ஒரு பென்சிலை எடுத்து வைத்துக் கொண்டு கண்களை மூடியபடி "ஜாவோ!" என்று முணுமுணுத்தான். அவ்வளவுதான்; அவன் கையிலிருந்த பென்சில் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. அவனுக்கு ஏற்பட்ட சந்தோஷம் சொல்லி முடியாது!

வாசலுக்கு வந்ததும் அவன் பள்ளிக்கூடத் தோழன் நின்று கொண்டிருந்தான். "உன்னைக் கையோடு பள்ளிக்கூடத்துக்கு அழைத்து வரச் சொன்னார் வாத்தியார்" என்றான் அவன்.

"நான் பள்ளிக்கூடம் வரவில்லை" என்று கூறினான் சூரியகுமாரன்.


"நீ வராவிட்டால் உன்னைத் தூக்கிக் கொண்டு போய் வாத்தியார் முன் போட்டு விடுகிறேன், பார்!" என்று கூறினான் அவன் தோழன்.

அதைக் கேட்டதும் சூரிய குமாரனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. "என்னை என்ன நினைத்தாய்? உன்னால் என்னைத் தூக்கிவிட முடியுமா? அதற்கு முன் உன் கதி என்ன ஆகிறது பார்!" என்று கூறி அவன் தந்தையிடமிருந்து கற்ற மந்திரத்தை உச்சரித்தான். அவன் தோழன் மறைந்து போய் விட்டான்.

இப்படி எத்தனை எத்தனையோ பொருள்களெல்லாம் சூரிய குமாரனின் கோபத்துக்கு இலக்காகி மறைந்தன.

அன்று அந்நாட்டு மன்னரின் பிறந்த நாள் வைபவம். நகரெங்கும் தோரணங்களும், வர்ண விளக்குகளும், பூமாலைகளும் ஜொலித்தன. மன்னர் ராஜ வீதிகளில் பவனி வரப் போகிறார் என்று கேள்விப்பட்டு, அந்தக் கோலாகலக் காட்சியைக் காண நாட்டு மக்கள் அனைவரும் பல்லாயிரக் கணக்கில் குழுமியிருந்தனர்.

சூரியகுமாரனின் தந்தை ஏதோ காரியமாக அயலூருக்குச் சென்றிருந்தார். ஆகவே, அவன் தன் தாயாருடன் ராஜ பவனியைக் காண வந்திருந்தான்.



ஸ்ரீ ஏ. கிருஷ்ணசாமி (ஜெனரல் மோட்டார்ஸ், [இந்தியா] லிமிடெட்) அவர்களின் குமாரத்தி சௌ. ராஜலக்ஷ்மிக்கும், அஞ்சோர் கடம்பி ஸ்ரீநிவாசாச்சாரியாரின் குமாரன் சிரஞ்சீவி ஏ. கே. வி. ராகவனுக்கும் ஜனவரி 21ந் தேதி பம்பாய், மாதுங்காவில் மிகவும் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்கு ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் விஜயம் செய்து சிறப்பித்தனர். வாழ்க மணமக்கள்!



மன்னர் வருவதற்கு முன்னால் படை வீரர்கள் அணி வகுத்துச் சென்றனர். இசை வல்லுநர் இசை பயின்று சென்றனர். ராணுவ வாத்தியங்கள் அணிவகுத்துச் சென்றன. இந்தக் காட்சிகளை யெல்லாம் சூரியகுமாரன் கூட்ட நெருக்கடியினால் காண இயலவில்லை. அவன் முண்டியடித்துக் கொண்டு கூட்டத்தில் முயன்று பார்த்தான். அவனுக்கிருந்த ஆர்வத்தில் கூட்டத்தை இடித்துக் கொண்டு சென்றதில் தாயாரை விட்டுப் பிரிந்து விட்டான். அதை அவன் சிறிதும் பொருட்படுத்தவில்லை. அவன் கருத்தெல்லாம் ராஜ பவனியைக் கண்டு களிப்பதில் அல்..வா முனைந்திருந்தது!

சூரியகுமாரன் எப்படியோ தட்டுத் தடுமாறிக் கூட்டத்தின் முன்னால் வந்துவிட்டான். அவன் இன்னும் முன்னேற முயலவே அவனை ராணுவ வீரன் ஒருவன் தடுத்தான்; அவன் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தினான். சூரியகுமாரனுக்குக் கோபம் தாங்க முடியவில்லை. உடனே தான் கற்ற "ஜாவோ" மந்திரத்தைக் கூறினான். அனைவரும் அதிசயிக்கும்படியாக அந்த ராணுவ வீரன் அந்த இடத்திலிருந்து மறைந்து விட்டான்.

சூரியகுமாரனின் செய்கையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த வீரர் நல்லவன் அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். அவன் இரும்புப் பிடியால் அழுத்தி, "ராணுவ வீரனை என்ன செய்தாய்? அவனை உடனே கொண்டு வந்து நிறுத்தா விட்டால் உன்னைச் சிறையில் அடைத்து விடுவேன்!" என்று பயமுறுத்தினான். அவனுடைய அதட்டலில் சூரிய குமாரனுடைய சப்தநாடிகளும் நடுங்கின. பயத்தில் தன் தந்தையிடமிருந்து தெரிந்து கொண்ட மந்திரத்தை அச்சமயத்தில் மறந்து விட்டான்.

"ஐயா! நான் ஒருவனை மாயமாய் மறையும்படி செய்யும் மந்திரத்தைத் தான் கற்றேன். திரும்பிக் கொண்டு வரும் வித்தையை அறியேன். என்னை மன்னித்து விட்டு விடுங்கள்!" என்று கூவினான் சூரிய குமாரன்.

"மன்னிப்பதா? உனக்கு உரிய தண்டனையை அநுபவித்தால்தான் உனக்குப் புத்தி வரும்!" என்றுகூறி அவனை இழுத்துக் கொண்டு போய்ச் சிறையில் தள்ளினான் வீரர் நல்லவன்.

மாலையில் அயலூரிலிருந்து திரும்பிய சித்திர சேனர் வீட்டில் தம்முடைய புதல்வனைக் காணாது தவித்தார். அவர் மனைவி, "கூட்டத்தில் சூரிய குமாரன் என்னிடமிருந்து பிரிந்து சென்று விட்டான். அவனை எங்கெல்லாமோ தேடினேன். காணவில்லை" என்று வருத்தத்துடன் கூறினாள். சித்திரசேனர் நகரெங்கும் தேடியலைந்த பொழுது அவருடைய சிநேகிதர்களில் ஒருவர், "ஐயா! ராஜா பவனி வரும் பொழுது உங்கள் பையனை வீரர் நல்லவன் அழைத்துச் சென்றதைக்

## குமாரி சித்ரலேகா சரவணம்

★

சென்ற 21-1-1954 வியாழக்கிழமை சென்னை, மியூஸியம் தியேட்டரில் நிதி மந்திரி கனம் சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் **குமாரி சித்ரலேகா சரவணத்தின்** பாதநாட்டிய அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற்றது. சபையில் கூடியிருந்த பிரமுகர்களும் பொதுமக்களும் குமாரியின் நடனத்தை வெகுவாக ரசித்தனர். ஸ்ரீ ஈ. கிருஷ்ணய்யர் குமாரியின் நடனத்தை பாராட்டிப் பேசினார். கனம் நிதி மந்திரி பல பிரமுகர்களின் சார்பாக குமாரிக்குப் பல பரிசுகள் வழங்கினார்.



கண்டேன். அவன் எங்கே அழைத்துச் சென்றானோ, தெரியாது" என்று கூறினார். அவருடைய பதிலைக் கேட்டு மகிழ்ந்த சித்திரசேனர் அவருக்கு நன்றி தெரிவித்துவிட்டுச் சிறைச்சாலையை நோக்கிச் சென்றார்.

சிறைச் சாலையில் வீரர் தலைவன் சூரிய குமாரனைப் பல கேள்விகள் கேட்டுத் திணற அடித்துக் கொண்டிருந்தான். சித்திரசேனர் தன்னைத் தேடி வந்திருப்பதாக அறிந்ததும் அவரைத் தன்னிடம் அழைத்து வரச் செய்தான்.

"வாருங்கள், சித்திரசேனரே! நாமிருவரும் பால்ய தோழர்களாயிற்றே! உங்களைப் பார்த்து வருஷக் கணக்கிலாகி விட்டதே?" என்று கூறி அவரை வரவேற்றான் வீரர் தலைவன்.

அச்சமயத்தில்சூரிய குமாரன் "அப்பா!" என்று கதறிச் சித்திர சேனரின் காலைக் கட்டிக் கொண்டான். சித்திரசேனரும் தம் குமாரனைக்கட்டியணைத்து உச்சிமோந்தார்.

இந்தக் காட்சியைக் கண்டு பிரமித்துப் போய், "இவன் தங்கள் குமாரனா? எனக்குத் தெரியாதே! இவன் ஏதோ மாய வித்தை செய்து ராணுவ வீரனை மறையச் செய்து விட்டான். அதனால் கோபமுற்று இவனைச் சிறையில் அடைத்து விட்டேன். அவனைக் கொண்டு வந்து விட்டால் விடுதலை செய்வதாக இவனிடம் சொன்னேன்!" என்று கூறினான் வீரர் தலைவன்.

"அப்படியா?" என்று கேட்டு விட்டுச் சித்திர சேனர் சிரித்தார். பிறகு ஏதோ மந்திரத்தை உச்சரித்தார். மாயமாய் மறைந்த ராணுவ வீரன் வந்தான்; அவனோடு சூரிய குமாரனின் கோபத்துக்கு இலக்கான அவன் பள்ளித் தோழன் வந்தான்; பென்சில், மற்றப் பொருள்களெல்லாம்கூட வந்தன.

"வீரர் தலைவனே! என் பிள்ளைக்குச் சரியான பாடம் கற்பித்த தங்களுக்கு என் நன்றி" என்று கூறினார். பிறகு சித்திர சேனர் தம் புதல்வனை நோக்கி, "அரை குறைப் படிப்பு எவ்வளவு ஆபத்தாகப் போய் விட்டது, பார்த்தாயா?" என்றார்.

சூரியகுமாரன் தலை குனிந்து நின்றான்.

"தம்பி! இனிமேல் உன் தந்தையிடம் முழு வித்தையும் கற்றுக் கொண்ட பிறகு உன் கை வரிசையைக் காட்டு. அவசர புத்தி அபாயத்தை அளிக்கும்!" என்று அவனுக்கு உபதேசம் செய்து அனுப்பினான் வீரர் தலைவன்.

அதற்குப் பிறகு சூரிய குமாரன் தன் தந்தையிடம் முறையாக வித்தை பயின்று அந் நாட்டிலேயே சிறந்த வித்தைக்காரனாகத் திகழ்ந்தான்.

## நாடகக் கலையில் புதுமை!

புராணக் கதைகளைச் சித்திரிக்கும் பொம்மலாட்டத்தை எல்லோரும் பார்த்திருப்பார்கள். நாடகங்களில் மனிதர் மனிதராக நடிப்பதையும், தேவர்களாகவும் அசுரர்களாகவும் நடிப்பதையும் பார்க்காதவர்கள் இருக்க முடியாது. ஆனால் மனிதர் பொம்மைகளாக மாறிப் புராணக் கதைகளை உணர்ச்சி ததும்ப நடிக்கும் அதிசயமான காட்சியைக் கண்டு களிக்கும் வாய்ப்பு இப்போது சென்னை வாசிகளுக்குக் கிடைத்திருக்கிறது.




அன்றுமலை மன்றத்திலே, பிப்ரவரி மாதம் 3-ந் தேதி ஆரம்பமாகி 5, 6, 7, 8 தேதிகளில் நடைபெறும் ராமாயண நடன நாடகம், நாடகக் கலையில் ஒரு புதுமை என்று கூறுவது மிகையாகாது. அதில் பங்கு எடுத்துக் கொள்ளும் முப்பது நடிகர்கள் பொம்மை முகமூடிகளையும் அவற்றிற் கேற்ற உடைகளையும் தரித்துக் கொண்டு ராமாயணக் கதையை நடிக்கிறார்கள். முகமூடிகளைப் போட்டுக் கொண்டிருந்தும் கூட அவர்கள் விசேஷ பாவத்துடனும் உணர்ச்சியுடனும் நடிப்பதைப் புதுடில்லி முதலிய இடங்களில் ரசிகர்கள் மிகவும் புகழ்ந்து பாராட்டியிருக்கிறார்கள்.

நாடகக் கலையில் இத்தகைய புது வழியைக் கண்டு பிடித்துள்ள ஸ்ரீ சாந்தி பர்தான் அவர்கள் எல்லோருடைய பாராட்டுதலுக்கும் பாத்திரராகி யிருக்கிறார்.

மேற்படி சிறந்த நாடகக் காட்சியின் மூலம் கிடைக்கும் வருமானம் உயர்ந்த கல்வித் திருப்பணிக்குப் பயன்படப் போகிறது என்பதைக் கேட்போர் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைவார்கள்.

மதனபள்ளிக்கு அருகில் உள்ள ரிஷிப் பள்ளத்தாக்கில் ஜாதி, மத, பிராந்திய பேதமற்ற அகில இந்தியப் பள்ளிக்கூடத்தை நிறுவியிருக்கிறார்கள். அந்தப் பள்ளிக்கூடத்துக்கு லட்சம் ரூபாய் செலவில் கட்டிடங்கள் கட்டவும் மற்றும் பல அபிவிருத்திகளைச் செய்யவும் திட்டமிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பரிசோதனை வெற்றி பெறுவதற்கு, அவர்களின் கைங்கர்யம் நிறைவேறுவதற்குக் கலா ரசிகர்களும் கல்வி தானத்தில் அக்கறை கொண்ட கனதனவான்களும் மனமுவந்து உதவி, நாடகக் காட்சிகளையும் கண்டு களிப்பார்களாக.


பிப்ரவரி 12ஆ முதல்
தென்னிந்திய வெள்ளித்திரைகளில்
விடுதலை
ஒரு கலைச்சித்திரம்...
நாகய்யா - மனோகர் - கிருஷ்ணகுமாரி
பீருமகமது - குமுதினி - விமலா - மோகன் -
K.பாலசுப்ரமணியம் - ஜாவர் சீதாராமன்
நடித்தது.
டைரக்ஷன் : ராம்நாத்
தயாரிப்பு : நியூ இரா
ஸ்டூடியோ : பிலிம் சென்டர்
உள்ளத்தை அள்ளும் கதை..
உருக்கமான வசனங்கள்..
உயர்தரமான சங்கீதம்..
பிரமிக்கச் செய்யும் நடிப்பு..

ருசி மிகுந்தது....




நரிஷிங் பிஸ்கட்ஸ்


ஜே. பி. மங்காராம் & கம்பெனி, குவாலியர்

மதராஸ் ஏஜண்டுகள்: நேஷனல் ஏஜன்ஸிஸ், 1/94, ராமசாமி தெரு, மதராஸ்-1 M. 3




கேசவர்த்தினி அணா 14. ஷாம்பு அணா 14. தபால் செலவு வேறு. எங்கும் கிடைக்கும்.

தென்னிந்திய ரஸாயனசாலை, கோயமுத்தூர்




வழக்கம் போல் சென்ற ஞாயிற்றுக் கிழமை நாங்கள் கடற்கரைக்குச் சென்றோம். 'பஸ்'ஸில் என் பக்கத்தில் ஒரு அம்மாள் ஏறி உட்கார்ந்தார்கள். சுமார் முப்பத்தைந்து வயது இருக்கும். நல்ல கறுப்பு நிறம். கறுப்பு நிறப் பட்டுப் புடவையும் அதே நிறத்தில் சோளியும் போட்டுக் கொண்டிருந்தாள். நன்றாக வாரி விடாத காரணத்தினாலோ அல்லது 'பஸ்'ஸில் போகும் போது பலமாகக் காற்றடித்த காரணத்தினாலோ தலைமயிர் அலை அலையாக அம்மாளின் முகமெல்லாம் தொங்கிக் கொண்டிருந்தது. இந்த அழகில் மூக்கில் ஒரு கறுப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டிருந்தாள்.

அந்த அம்மாள் என் பக்கத்தில் உட்கார்ந்ததும் என் மகள் பவானி அவளை ஏற இறங்க இரண்டு முறை பார்த்து விட்டுப் பயந்து கொண்டே என்னிடம் ''அம்மா, பூச்சாண்டி'' என்றாள். குழந்தை சொன்னது அந்த அம்மாள் காதில் விழுந்து விடப் போகிறதே என்று உடனே பவானியைத் தூக்கி ஜன்னல் பக்கம் நிற்க வைத்து விட்டேன்.

பவானிக்கு இரண்டு வயதுதான் ஆகிறது. இருந்தாலும் மிகவும் கெட்டிக்காரி. நான் அந்த அம்மாளைப் பற்றி மனத்தில் நினைத்ததைக் குழந்தை உடனே சொல்லிவிட்டாளே என்று நினைத்துக் கொண்டேன். குழந்தைக்கு எப்படித் தெரியும், சில சமயம் மனத்தில் தோன்றியதை நாம் வெளியில் சொல்லாமல் மறைத்து வைக்க வேண்டுமென்று.

திருவல்லிக்கேணியில் இறங்கிக் காப்பி சாப்பிட்டு விட்டுக் கடற்கரைக்குச் சென்று மணலில் உட்கார்ந்தோம்.

''பஸ்ஸிலே என் பக்கத்தில் ஒரு அம்மாள் உட்கார்ந்திருந்தாளே, பார்த்தீர்களா?'' என்றேன் நான் கணவரிடம்.

''ஆமாம். ஏன்? அவர்களை உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டார் அவர்.

''இல்லை. பவானி அந்த அம்மாளைப் பார்த்துப் பூச்சாண்டி என்று பயந்து விட்டாள்.''

''குழந்தைகளுக்குப் 'பூச்சாண்டி' என்ற வார்த்தையே கற்றுக் கொடுக்கக் கூடாது. நீ சாதம் ஊட்டும் போதும் தூங்க வைக்கும் போதும் 'பூச்சாண்டி' என்று சொல்லிக் குழந்தையைப் பயமுறுத்துகிறாய். அதனால் தான் இப்போது மனிதரைப் பார்த்துப் பூச்சாண்டி என்று பயப்பட ஆரம்பித்து விட்டாள். இதே ரீதியில் குழந்தையை வளர்த்தால் வயதான பின்பும் அது கோழையாகத்தானே இருக்கும்?'' என்றார்.

''ஆமாம், போங்கள். இருட்டு வேளையில் அவள் வந்தால் நீங்கள்கூடப் பேயோ, பிசாசோ என்று பயந்துதானிருப்பீர்கள்.''

''அட பைத்தியமே! நீ இவ்வளவு பயமுறுத்துகிறாயே! நான் சிறுவனாக இருந்தபோது எனக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தைக் கூறுகிறேன் கேள்: அப்போதாவது நீ இதையெல்லாம் நம்பாமல் இருக்கிறாயா, பார்க்கலாம். நான் பள்ளிக் கூடத்திலே படிக்கும் போது ஒரு நாள் நான் சினிமாவுக்

குப் போயிருந்தேன்; அப்போது என்ன நடந்தது தெரியுமா?......" என்று ஆரம்பித்து என் கணவர் சொன்னதைக் கீழே தருகிறேன்.

அன்று மின்சாரம் நடுவில் நின்று விட்டதால் இரவு பதினொரு மணிக்குத்தான் சினிமா முடிந்தது. வீட்டுக்குத் திரும்பப் பஸ் கிடையாது. என்ன செய்வதென்று விழித்துக் கொண்டிருக்கையில், "ஏண்டா, மணி இந்த நேரத்திலே இங்கே..." என்று கேட்டுக் கொண்டே அங்கே வந்து சேர்ந்தார் எங்கள் விஞ்ஞான ஆசிரியர்.

"சினிமாவுக்கு வந்தேன், சார்! ரொம்ப நேரம் ஆகி விட்டது. கடைசி பஸ் கூடப் போய் விட்டது. நடந்தே வீட்டுக்குப் போகலாமென்று பார்க்கிறேன்!"

"அட பாவி! இந்த வேளையில் தனியாக எப்படி ஐந்து மைல் நடக்கப் போறே? பேசாமல் எங்கள் வீட்டுக்கு வா. காலையில் போகலாம்" என்று சொல்லிக் கொண்டே என் கையைப் பிடித்து இழுத்துச் சென்றார்.

அந்த ஆசிரியர் என் மீது மிகுந்த அக்கறை கொண்டவர். காரணம் நான்தான் அவர் வகுப்பில் முதல் மார்க் வாங்கும் மாணவன். இது தவிர அவர் என் தகப்பனாரின் குடும்ப நண்பர்களில் ஒருவர்.

வீட்டுக்குப் போனதும் அவர் எனக்கு இரண்டு இட்டிலியும் சட்டினியும் ஒரு தட்டில் வைத்துக் கொடுத்தார். எனக்கு அப்போது இருந்த பசியில் கட கட வென்று அதைத் தின்று விட்டேன். சினிமாவுக்குப் புறப்படுகிற ஆசையில் அன்று மாலை நான் காப்பி கூடச் சாப்பிட வில்லை. "இன்னும் இரண்டு இட்டிலி சாப்பிடுகிறாயா!" என்றார். "போதும், ஸார்! வயிறு நிறைந்து விட்டது" என்று மதிப்பாகக் கூறி விட்டேன். "சரி, நீ மேலே என் ஆபீஸ் அறையில் படுத்துக் கொள்" என்று என்னை மாடிக்கு அழைத்துக் கொண்டு போனார்.

அவர் ஆபீஸ் அறையை அன்றுதான் நான் பார்த்தேன். எங்கள் பள்ளிக்கூட ரசாயன ஆராய்ச்சிச் சாலையில் இருக்கும் அத்தனை விதமான சாமான்களும் அங்கே மேஜைமீது இருந்தன.

"இந்த மேஜை நாற்காலிகளை யெல்லாம் ஒரு ஓரமாக நகர்த்திவிட்டு இங்கே படுத்துக் கொள்" என்று சொல்லி விட்டு "அடடே பாயைக் கொண்டு வர மறந்து விட்டேனே. இதோ வருகிறேன்" என்று கூறிக்கொண்டே கீழே இறங்கி விட்டார் ஆசிரியர்.

அவர் போன பிறகு அந்த அறையில் உள்ள ஒவ்வொரு பொருளையும் பார்வை யிட்டுக் கொண்டே வந்தேன். 'உஸ்' என்று காற்று வேகமாக அடித்தது. அந்த வேகத்தில் அறைக் கதவு படார் என்று மூடிக் கொண்டது. கதவைத் திறந்து கொக்கி போடலாம் என்று சட்டென்று திரும்பிய எனக்கு வெல வெலத்து விட்டது. காரணம் அந்தக் கதவுக்குப் பக்கத்தில் உள்ள மூலையில் ஒரு சிறிய அலமாரி இருந்தது. தேக்க மரத்தால் செய்தது; சுமார் நாலடி உயரம்தான் இருக்கும். மேஜைமேல் பூந்தொட்டி வைப்பார்களே அந்த முறையில் அதன் மேல் ஒரு மண்டை ஓடு வைக்கப் பட்டிருந்தது! மண்டை ஓடு இருக்கும் இடத்தில் பேய் நடமாட்டம் இருக்கும் என்று யாரோ எப்போதோ சொன்னது என் ஞாபகத்துக்கு வந்தது. போயும் போயும் ஏன் இதைக் கொண்டு வந்து வீட்டில் வைத்திருக்கிறார் இவர் என்று நினைத்துக் கொண்டேன்.

பாயுடன் வந்த ஆசிரியர் என் முகத்தைப் பார்த்து என்ன நினைத்தாரோ என்னவோ, "என்னடா தனியாய்ப் படுக்கப் பயமாயிருக்கிறதா? இங்கே நல்ல காற்று வரும். சௌகரியமாக நன்றாய்த் தூங்கலாமே" என்று சொன்னார்.

"நன்றாய்த்தான் சார் இருக்கிறது. இங்கேயே படுத்துக் கொள்கிறேன்" என்று பளிச்சென்று கூறிவிட்டேன் என்னையு மறியாமல். ஆனால் மனசில் மட்டும் 'ஏன் இப்படிச் சொன்னோம். கீழேயே படுத்துக் கொள்கிறேன் என்று சொல்லி யிருக்கலாமே' என்று இருந்தது.

மேஜை நாற்காலிகளை ஓரமாக நகர்த்த ஆரம்பித்தேன். "மணி, கவனமாக விளக்கை அணைத்து விட்டுப் படுத்துக் கொள்" என்று சொல்லிக் கொண்டே கீழே இறங்கிப் போய் விட்டார் ஆசிரியர்.

பாயைப் போட்டு விட்டு எந்தப் பக்கம் தலையை வைத்துப் படுப்பது என்று யோசித்தேன். மண்டை ஓட்டுப் பக்கம் தலைவைக்க வேண்டாமென்று தலையணையை அந்தப் பக்கம் போட்டேன், கால் பக்கம் வேண்டுமானால் அந்த மண்டை ஓடு இருக்கட்டுமென்று. விளக்கை அணைத்து விட்டுப் படுத்தேன். ஒரு விநாடி ஒரே இருட்டாக இருந்தது. ஒன்றும் தெரியவில்லை. ஆனால் கொஞ்ச நேரத்திற் கெல்லாம் ஜன்னல் வழியாக அந்த அறைக்குள் வந்த தெரு விளக்கின் மங்கலான வெளிச்சத்தில், என் கண்களுக்கு நேரே அந்த வெள்ளை நிற மண்டை ஓடு பளிச்சென்று தெரிந்தது. சே, கண்ணுக்கு நேராக அந்த மண்டை ஓடு ஏன் இருக்க வேண்டுமென்று தலையணையை மறுபடியும் எடுத்து இந்தப் பக்கம் போட்டுக் கொண்டேன்.

என் பயத்தை மாற்ற ஏதேதோ நினைத்துப் பார்த்தேன். அன்று பார்த்த சினிமாவைப் பற்றி நினைத்தேன். ஏன் சினிமாவுக்கு வந்தோம் என்று இருந்தது. புறப்படும் போதே அம்மா "நாளைக்குப் பகல் ஆட்டத்துக்குப் போகக் கூடாதா? நீ வரும் வரையில் நான் வேறு உனக்காகச் சாப்பிடாமல் காத்துக் கொண்டிருக்க வேண்டுமா?" என்றாள். பாவம் அம்மா வேறு எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாளோ, என்னவோ! அந்தத் தடிப்பயல் தாமுவை நம்பித்தான் புறப்பட்டேன். அவனும்கூட வந்திருந்தால் இத்தனை தொல்லை யில்லையே. பேசாமல்

அவன் வீட்டிலேயே படுத்துக் கொண்டிருக்கலாம். நல்ல துணையாக இருக்கும். எனக்குத் தூக்கம் வந்து நான் தூங்கி விட்ட பிறகு கூட நான் இன்னும் தூங்க வில்லை என்று நினைத்து ஏதாவது வளவள வென்று பேசிக் கொண்டிருப்பான். இப்போது இங்கே வந்து அகப்பட்டுக் கொண்டேனே!

அப்போது கீழே மாட்டியிருந்த கடிகாரம் மணி அடிக்க ஆரம்பித்தது. ஒன்று, இரண்டு என்று எண்ணிக் கொண்டே வந்தேன். பன்னிரண்டு முறை அடித்தது. மணி பன்னிரண்டு என்ற நினைவு வந்தவுடன் என் மனசில் ஏதோ விவரிக்க முடியாத ஒரு திகில் ஏற்பட்டது. இந்தப் பேய் நடமாட்டமெல்லாம் பன்னிரண்டு மணி வேளையில்தான் இருக்குமாமே. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் என்பார்களே அதைப்போல் அங்கு படுக்கவும் முடியாமல் வெளியில் எழுந்து போய் விடவும் முடியாமல் நான் தவித்தேன்.

திடீரென்று டக் டக் என்று யாரோ என் தலைக்குப் பக்கத்தில் தட்டுவது போல இருந்தது. படுத்துக் கொண்டிருந்த நான் சட்டென்று எழுந்து உட்கார்ந்து சத்தம் வந்த பக்கம் நோக்கினேன். அந்த மண்டை ஓடு என்னையே உற்றுப் பார்ப்பது போல் இருந்தது. சப்தம் ஒன்றும் கேட்கவில்லை. சீ, வெறும் மனப் பிராந்திதான் என்று நினைத்து மறுபடி படுத்துக் கொண்டேன். சிறிது நேரத்துக்கெல்லாம் திரும்பவும் டக் டக் என்ற சப்தம் முன்னைவிடப் பலமாக இருந்தது. உடனே எழுந்து விளக்கைப் போட்டேன். சத்தம் நின்று விட்டது. அவன் மார்பு படபட வென்று துரிதமாக அடித்துக் கொண்டது. இந்த முறை விளக்கை அணைக்காமல், சந்தடி செய்யாமல் அப்படியே கொஞ்ச நேரம் நின்று கொண்டு இருந்தேன், என்ன செய்வதென்று தெரியாமல்.

மறுபடியும் அதே சத்தம் கேட்க ஆரம்பித்தது. ஐயோ! அந்த மண்டை ஓடு ஏன் இப்படி மேலும் கீழும் ஆடுகிறது? அது என்னை வாவா வென்று கூப்பிடுவது போல் இருக்கிறதே! எனக்குக் குப்பென்று வியர்த்து விட்டது. என்ன செய்வதென்று புரியாமல் அப்படியே தடதட வென்று கீழே ஓடி வந்தேன். படிக்கட்டில் தவறி விழுந்தேனோ அல்லது விழாமல் சமாளித்துக் கொண்டேனோ என்னவோ எனக்குச் சரியாக ஞாபகம் இல்லை.

இதற்குள் நான் ஓடிவரும் சத்தத்தைக் கேட்ட விஞ்ஞான ஆசிரியர் "யாரடா அவன்?" என்று கேட்டார்.

"ஸார்...மேலே...மேலே..." என்றேன். அதற்கு மேல் வாயில் வார்த்தைகள் வரவில்லை. நாக்கு மேலே ஒட்டிக் கொண்டது.

"என்னடா திருடனா?" என்று கேட்டுக் கொண்டே எழுந்த ஆசிரியர், பரபரப்புடன் அங்கு சுவரின் ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த கைத்தடியை எடுத்துக் கொண்டு மேலே ஓடினார். நானும் அவரைப் பின் தொடர்ந்தேன்.



அந்த அறையின் மூலை முடுக்குகளையெல்லாம் பார்த்துக் கொண்டே "எங்கேடா?" என்றார் ஆசிரியர்.

நான் தூர நின்றபடியே அந்த மண்டை ஓட்டைச் சுட்டிக் காண்பித்தேன். அப்போது அந்த மண்டை ஓடு ஆடவில்லை. சாதாரணமாகப் பேசாமல் இருந்தது!

"ஏன்டா? ஏதாவது சொப்பனம் கண்டு பயந்து விட்டாயா, என்ன? நான் என்னமோ திருடன் என்று நினைத்துக் கையில் தடியுடன் ஓடி வந்து விட்டேன்" என்றார் அவர்.

நான் மென்று விழுங்கிக் கொண்டு நடந்ததைச் சொல்ல வாயெடுத்தேன்.

என்ன ஆச்சரியம்! மறுபடியும் அந்த "டக் டக்" சத்தம் கேட்க ஆரம்பித்தது. மண்டை ஓடும் மேலும் கீழும் பலமாக ஆட ஆரம்பித்தது!

"அதோ......அதோ......!" என்று நடுங்கிக் கொண்டே காட்டினேன் ஆசிரியரிடம்.

அவரும் அதைப் பார்த்தவுடன் ஒரு நிமிஷம் அப்படியே அசையாமல் ஸ்தம்பித்து நின்று விட்டார். மறுபடியும் அவருக்கு என்ன தோன்றிற்றோ என்னவோ, கையிலிருந்த தடியால் அந்த மண்டை ஓட்டின் மீது 'படார்' என்று ஒரு போடு போட்டார்.

அந்த மண்டை ஓடு அலமாரியின் மேலிருந்து உருண்டு கீழே விழுந்து இரண்டாகப் பிளந்து விட்டது. உடனே என்ன ஆச்சரியம்! அந்த மண்டை ஓடு பிளந்த உடனேயே அதனுள் மாட்டிக் கொண்டிருந்த சுண்டெலி துள்ளிக் குதித்துக் கொண்டு சுதந்திரமாக வெளியே ஓடியது!!

ஆசிரியர் என்னைப் பார்த்தார். நான் அவரைப் பார்த்தேன். என்னை வாட்டி வந்த பயம் சிரிப்பாக மாறியது.

இவ்வளவையும் சொல்லி முடித்த என் கணவர் "இப்போதாவது நம்புகிறாயா? பேயு மில்லை பிசாசுமில்லை" என்றார் என்னிடம்.

நான் என்னத்தைச் சொல்லுவது?

# படித்துப் பாருங்கள்!

## Indian Finance Silver Jubilee Number 1953

இந்தியாவில் நீண்டகாலம் ஆதிக்கம் செலுத்திய பிரிட்டிஷாரின் நாணயமாற்றுச் செப்பிடு வித்தைகளின் விளைவாக இந்தியாவின் பொருளாதார நிலைமை சீர்குலைந்தது; செல்வம் பறி போயிற்று. இந்தியத் தலைவர்களும் தேசியப் பத்திரிகைகளும் அரசியல் போராட்டத்தில் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தி வந்ததால் அவர்களுக்கு பிரிட்டிஷார் செய்து வந்த பொருளாதாரச் செப்பிடு வித்தைகளின் சிக்கலை அலசி ஆராய்வதற்கு அவகாசம் இல்லாமலிருந்தது. இந்நிலையில், 1928-ம் வருஷம் ஸ்ரீ சி. எஸ். ரங்கஸ்வாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு "இந்தியன் பைனான்ஸ்" என்ற ஆங்கில வாரப் பத்திரிகை கல்கத்தாவிலே ஆரம்பமாயிற்று. நாணய மாற்றிலும் தொழில் துறைகளிலும் அக்காலத்தில் இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் சர்க்கார் கையாண்ட தவறான முறைகளை வன்மையாகக் கண்டித்து, பொது ஜனங்களுக்கு உண்மையும் தகுந்த யோசனைகளையும் எடுத்துக் கூறுவதற்கு மேற்படி பத்திரிகை முன்வந்தது. இவ்விதம் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகப் பொருளாதார, கைத்தொழில் துறைகளில் இடைவிடாமல் தொண்டு புரிந்து வந்துள்ள "இந்தியன் பைனான்ஸ்" பத்திரிகையின் வெள்ளி விழா இவ்வருஷம் நடக்கின்றது. அவ்விழாவை ஒட்டி மேற்படி பத்திரிகை வெளியிட்டுள்ள மலர் உயர்ந்த 'ஆர்ட்' காகிதத்தில் அச்சிடப்பட்டுளது. அதில் பிரமுகர்களின் ஆசிச் செய்திகளும் தொழில் துறை சம்பந்தமான பல அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும் அடங்கி யிருக்கின்றன.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் பருத்தி உற்பத்தியாகி வந்தது. பருத்தியிலிருந்து துணி செய்யும் முறையை முதன் முதலாகக் கையாண்டவர்கள் இந்தியர்கள்தான் என்பது மேற்படி மலரில் வெளியாகியுள்ள ஒரு கட்டுரையிலிருந்து தெளிவாகிறது.

இந்தியா, சர்வதேச நிதி நிலைமை, இந்த நாட்டின் செல்வச் செழுமைக்கும் தொழில் முன்னேற்றத்துக்கும் இன்றியமையாத இரும்பு, எஃகு, சிமிட்டி, அலுமினியம், நிலக்கரி, தேயிலை, ரப்பர், சர்க்கரை உற்பத்தியின் பெருக்கம், மின்சார, இஞ்ஜினீரிங் கைத்தொழில்களின் அபிவிருத்தி இவை சம்பந்தமான புள்ளி விவரங்களுடன் பல சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் இம் மலரில் பிரசுரமாகி யிருக்கின்றன.

1947-ம் ஆண்டிலே இந்தியாவில் 3036 ரேடியோக்கள் உற்பத்தி செய்யப்பட்டன. ஆனால் 1952-ல் 71,496 ரேடியோக்கள் உற்பத்தியாகி யிருக்கின்றன. இன்னும் சில வருஷங்களில் இந்தியாவில் உற்பத்தியாகும் ரேடியோக்கள் உள்நாட்டின் தேவை போக, வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படலாம் என்பதை ஒரு கட்டுரை விவரிக்கின்றது.

ஆண்டு மலர்கள் உள்பட வருஷ சந்தா ரூ. 49.

பிரசுரம்: "Indian Finance", 116-A, Lower Circular Road, Calcutta.

## ஸ்டாலின்

"ஹிமாலயச் சாதனைகளைச் சாதித்தபீமன்" என்றும் "தம் சகாப்தத்தின் தலைவிதியை உருவாக்கிய தீரன்" என்றும் பாரதத்தின் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேருவின் பாராட்டுதலைப் பெற்றவர் ஸ்டாலின். இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது ஹிட்லரின் ஏகாதிபத்திய வெறியிலிருந்து உலகத்தைக் காப்பாற்றியவர்களில் ஸ்டாலின் முக்கியமானவர்.

எத்தகைய ஆபத்துக்கள் சூழ்ந்து வந்தபோதிலும் பீதியின் சாயலுக்கு இடம் கொடாமல், தோல்வியைக் கண்டு கலங்காமல், முடிவான வெற்றியே குறிக்கோளாகக் கொண்டு வெற்றியடைந்து பெருமை பெற்றவர் ஸ்டாலின்.

இன்றைய தினம் ருஷ்ய நாட்டைப் பார்த்து உலகம் வியக்கிறது. அதன் வளர்ச்சியைக் கண்டு மூக்கின்மேல் விரலை வைக்கிறது. அதன் மக்களின் வாழ்க்கை முறையை நேரில் அறிந்து வர உலக அறிஞர்கள் எல்லாம் ருஷ்ய நாட்டுக்குச் செல்கிறார்கள். இப்படியாக ருஷ்ய நாட்டை உலகில் ஒரு சிறந்த நாடாக ஆக்கியவர் ஸ்டாலின்.

சாமான்ய ஏழைத் தொழிலாளியின் குடும்பத்தில் பிறந்து சரித்திரம் போற்றும் தலைவராக உயர்ந்தவர் ஸ்டாலின். வீரத்துக்கும் விவேகத்துக்கும் உறைவிடமாக விளங்கிய அந்த உருக்கு மனிதரின் தீரம் செறிந்த கதையை, இந்நூலாசிரியர், வேகமும் விறுவிறுப்பும் உள்ள தமிழ் நடையில் அருமையாக எழுதியிருக்கிறார்.

"பதினோரு வருஷங்களில் ஸ்டாலின் ஆறாவது தடவையாகச் சிறைப்பட்டார். இதற்கு முன்

கைதான ஐந்து சந்தர்ப்பங்களிலும், தண்டனைக் குத் தலை வணங்காமல் தப்பி வந்த தீரர் ஸ்டாலின். ஆகவே அவருக்குக் கொடுந் தண்டனை கொடுக்க முன் வந்தனர் அதிகாரிகள். அவரை ஸைபீரியா வின் கடைக் கோடிப் பகுதிக்கு காடு கடத்தினர். போலீஸ் அதிகாரி அந்த இடத்தில் உள்ள குரிகா என்ற ஊருக்கு ஸ்டாலினை அழைத்துச் சென்றார். குரிகா ஆர்டிக் வட்டத்தைத் தொட்டுக் கொண் டிருக்குமிடம். அது பனிக்கட்டியால் மூடப்பட் டிருக்கும் பாழ்வெளி. அங்கு எண்ணிப் பதி னைந்து குடிசைகள்தான் இருந்தன. அதில் மிக மோசமான குடிசையில் ஸ்டாலின் இருந்தார். அந்தப் பாதகமான சீதோஷ்ண நிலையில் எவ்வளவு கஷ்டமான வாழ்க்கையை நடத்தினாரென்பதை நாம் கற்பனை செய்ய முடியாது" என்று நூலாசிரி யர் ஒரு இடத்தில் கூறுகிறார்.

வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய விரும்பும் ஒவ்வொருவரும் படித்து உணர வேண்டிய வரலாற்றுக் கதை ஸ்டாலின் கதை. தற்கால உலக அரசியல் நிலைமையை நன்கு உணர்ந்து கொள்ள விரும்புவோர் ஸ்டாலினின் வரலாற்றை அவசியம் அறிந்திருக்க வேண்டும்.

ஆசிரியர் : ஸ்ரீ எஸ். ராமகிருஷ்ணன் ; புத்தகம் வெளியிடுவோர் : மலர் நிலையம், 133, பிராட்வே, சென்னை-1 ; விலை: ரூ. 1—8—0.

## Republic Day Souvenir Madras 26th January 1954

நம் பாரத தேசத்தில் குடியரசு நிறுவப்பட்ட சில ஆண்டுகளில் பருவ மழை தவறியும், புயல் வீசியும், எத்தனையோ தொல்லைகள் நம் நாட்டில் நிகழ்ந்து விட்டன ; இதையெல்லாம் நம் சுதந்திர அரசாங்கம் மிகத் திறமையோடு சமாளித்துத் தீரத்துடன் முன்னேற வேண்டி வந்தது.

இத்தனை போராட்டங்களுக்கு இடையில், நமது சென்னை ராஜ்யம் எத்தனை விதத்தில் முன்னேறி யிருக்கிறது என்று தெரிந்துகொள்ள யாவருக்கும் ஆவல் ஏற்படுவது இயல்பு. அம் முன்னேற்றச் சாதனைகளையெல்லாம் சென்னை அரசாங்கச்செய்தி இலாக்கா சாங்கோபாங்கமாக இந்த 1954-ம் ஆண்டு குடியரசு மலரில் வெளியிட்டிருக்கிறது.

கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்கள் மக்களுக்குக் குடியரசு தினத்தில் ஆசிச் செய்தி விடுத்துள் ளார்கள். முதல் மந்திரி ராஜாஜி அவர்கள் மக்களின் சிந்தனையைத் தூண்டும் அறிவுரை பொதிந்த வாழ்த்தை அளித்துள்ளார்கள்.

நம் ராஜ்யத்தின் விசேஷப் பிரதம இஞ்ஜினீர், ஸ்ரீ ஏ. ஆர். வெங்கடாச்சாரியார் அவர்கள் நம் அரசாங்கம் துவங்கி யிருக்கும் பெரிய அணைத் திட்டங்களையும், நீர்ப்பாசனத் திட்டங்களையும் பற்றி விரிவான கட்டுரை எழுதி யிருக்கிறார். மின்சார இலாக்காவின் சாதனைகளைப் பற்றிய விவரமான கட்டுரை காணப்படுகிறது. டாக்டர் சௌந்தரம் ராமச்சந்திரன் எம். எல். ஏ., அவர்கள் சமுதாய நல அபிவிருத்தித் திட்டங் களைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

கிராம அபிவிருத்தி, புதிய ஆரம்பக் கல்வித் திட்டம், நூல் நிலைய இயக்கம், கைத்தறி நெசவுத் தொழில், குடிசைக் கைத்தொழில் அபிவிருத்தி – இவைகளையெல்லாம் பற்றிச் சிறந்த கட்டுரைகள் வெளியாகி யிருக்கின்றன.

இவ்விசேஷ மலர் உயர்ந்த தாளில் கவர்ச்சிகர மான அமைப்புடன் விளங்குகிறது.

பிரசுரம்: The Director of Information and Publicity, Government of Madras; விலை: ரூ. 1—0—0.





நாள் முழுதும்
கவர்ச்சிகரமாய்
இருக்க
பியர்லைன்
ப்ரெஞ்சு லாவண்டர்
பிரிலியன்டைன்
இயற்கையான ப்ரெஞ்சு லாவண்டர்
புஷ்பங்களிலிருந்து தயாரிக்கப்பட்
டது. தனிச்சிறப்பும், கண்யமும் பெற
அதை தினசரி விடாது உபயோகிக்
கவும்.
பியர்லைன்
ப்ரெஞ்சு லாவண்டர்
தற்காலத்திற்கேற்ற, ஒரு லட்சியமான புத்
துணர்ச்சியளிக்கும் சாதனம் ஸ்நானத்தி
ற்குப் பின்னர் அதை உபயோகித்து நாள்
முழுவதும் குளிர்ச்சியுடனிருங்கள்.
பியர்லைன்
ஓ-டி-கொலோன்
PEARLINE-PARIS LTD. P. O. Box No. 493, BOMBAY

# புனா கண்ட புதுமை

**விதுரன்**

நமது ஒப்புயர்வற்ற தலைவர் ராஜாஜி அடிக்கடி கூறுவதுபோல், கலாபிமானம் என்பது பக்திக்கும், ஒழுக்கத்துக்கும், சமூக ஒற்றுமைக்கும் சிறந்த சாதனமாகத் திகழ வேண்டும். புனாவிலுள்ள சகல தென்னிந்திய ஸ்தாபனங்களையும் ஒன்று சேர்ந்து ஒரு மகத்தான தொண்டில் ஈடுபடும்படி செய்தது அவர்களிடமுள்ள சங்கீதப் பிரேமை.


கர்நாடக சங்கீதத்தின் பிதாமகர், பிதா என்று முறையே கொண்டாடப்படும் இரு மகான்களான புரந்தரதாஸர், தியாகராஜர் ஆராதனை மகோற்சவங்களைக் கொண்டாடுவதற்காகவும், இந்த இருவருடைய அரிய பொக்கிஷங்களைச் சேர்த்துத் திரட்டி, இந்தியா, மலேயா, சிலோன், பர்மா, முதலிய சகல நாடுகளிலுமுள்ள கர்நாடக சங்கீத அபிமானிகளுக்கு உபயோகப்படும்படி நூற்றுக்கணக்கான கிருதிகளை ஸ்வரப்படுத்தி வெளியிட்ட ஸ்ரீ ரங்கராமானுஜய்யங்காரைப் பக்தியுடனும், நன்றியறிதலுடனும் பாராட்டவும், புனாவிலுள்ள கலா ரஸிகர்கள் ஒரு அமோகமான விழா நடத்தி, தங்களது பண்பாட்டையும் திறமையையும் கண்டு யாவரும் வியக்கும்படி செய்தனர். புனாவிலுள்ள கன்னடக்காரர்கள், தெலுங்கர்கள், தமிழர்கள், மலையாளிகள் ஆகிய நான்கு வகுப்பினர்களும் ஒன்று சேர்ந்து பத்து தினங்களுக்கு மேல் இன்னிசைக் கச்சேரிகள் நடத்தி எல்லோரும் இன்புறும்படி செய்தது இதுதான் முதல் தடவை.

வயோதிகர்கள், இளைஞர்கள், ஆடவர், பெண்டிர் முதலிய எல்லோருக்கும் அதீதமான உணர்ச்சியைத் தூண்டக்கூடிய சக்தி சங்கீதாபிமானத்துக்கு உண்டு என்பதை நினைவூட்டும்படி புனா நகரத்திலுள்ள கலா ரஸிகர்கள் திரள் திரளாகக் கூடி இந்த விழாவை மிகக் கோலாகலமாகக் கொண்டாடினார்கள்.


கர்நாடக சங்கீதத்தின் உயிர் நாடிகளான புரந்தரதாஸர், தியாகராஜர், ஆகிய இரு அவதார புருஷர்களும் உண்மையான சாகித்திய கர்த்தாக்கள் எப்படி வாழ வேண்டும், எவ்வித குணங்களையும் யோக்கியதைகளையும் பெற்றிருக்க வேண்டும் என்பதைத் தங்கள் வாழ்க்கையிலும் கிருதிகளிலும் காண்பித்தனர் என்பதை ஸ்ரீ ரங்கராமானுஜய்யங்கார் இந்த மகோத்ஸவத்தை ஆரம்பித்து வைத்த பொழுது அவர் செய்த சிறந்த பிரசங்கத்தில் அனேக மேற்கோள்கள் எடுத்துக் காட்டி அழகாக நிரூபித்தார்.

** ** **

ஜனவரி மாதம் 24ந்தேதி வானவீதியில் உதயமான சூரியன் வழக்கத்தைவிட ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்தான். புனாவில் தென் இந்திய மக்கள் அன்று மிகுந்த உற்சாகத்துடன் விளங்கினர். கர்நாடக சங்கீதத்தில் மூழ்கித் திளைத்து அனுபவிப்பதில் தங்களுக்கு நிகர் யாரும் இல்லை என்பதைத் தென் இந்திய மக்கள் உலகத்துக்கு எடுத்துக் காட்டிக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள் என்பதற்கு எத்தனையோ சான்றுகளை எடுத்துக் காட்டலாம். இருந்தாலும் அன்று புனாவில் வாழ்ந்து வரும் தென் இந்தியர்கள் அதிலும் சங்கீத ரஸிகர்கள் அளவற்ற மகிழ்ச்சியுடன் இருந்தார்கள். அவர்களின் திருமுகங்கள் பிரமாதமான உற்சாகத்துடனும் சோபையுடனும் காட்சி அளித்துக் கொண்டிருந்தன. அதற்கு முக்கியமான காரணங்கள் இரண்டு. முதலாவதாக அன்று ஸ்ரீ ரங்கராமானுஜய்யங்காரும் அவருடைய புதல்வி குமாரி பத்மாவும் செய்த ஆச்சரியமான வீணைக் கச்சேரி. இரண்டாவதாக, கிருதிமணிமாலை என்ற அற்புதமான சங்கீத நூலை ஆறு பாகங்கள் இயற்றி நம்முடைய சங்கீதத்துக்கு ஒப்பற்ற சேவை செய்துள்ள அந்தப் பெரியாரைப் பாராட்டுவதற்கு ஏற்பாடு செய்திருந்த விழாவாகும். பம்பாயிலிருந்து அதற்காகவே வந்த கானப்பிரியர் ஸ்ரீ டி. வி. ராமானுஜத்தின் தலைமையில் இந்தப் பாராட்டு விழா மிகச் சிறப்பாக நடந்தது.



கிருதிமணிமாலை ஆசிரியருக்குப் பொன்னாடை போர்த்தி மகிழ்கிறார் ஸ்ரீ டி. வி. ராமானுஜம்



விண்ணளாவி நிற்கும் வைணவத் திருக்கோயில்களில் மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி கோயிலும் ஒன்றென்பதைப் பலர் அறிவர். தமிழ் மன்னர்கள் கண்ட தலையாய அறவழிக்குச் சான்றான இக்கோயிலைச் சுற்றிக் கண் கவரும் பல சிவஸ்தலங்களும் உள்ளன. இவற்றில் ஊருக்கு மேற்கு பகுதியில் உள்ள ஸ்ரீ அண்ணாமலைநாதர் கோயிலும் ஒன்று. இவ்வூரார் கவனத்தைக் கவர்ந்த இக்கோயில் இன்று உலகத்தார் கவனத்திற்கு வருகின்றது. 21—1—54-ல் இக் கோயிலுக்கு அருகே பதின்மூன்று தெய்வச் சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. அச்சிலைகளை மேலே உள்ள படத்தில் காணலாம்.

---

ஸ்ரீ ரங்கராமாநுஜ அய்யங்காரும் அவர் குமாரத்தியும் சேர்ந்து ரீதி கௌளையில் 'ஸத் குருஸ்வாமி'யைப் புது கலா ரஸிகர்களுக்கு நினைவூட்டி, அமீர் கல்யாணியில் 'மானமு லேதா'', அடாணாவில் ''நாரத கான'', ஆஹிரியில் ''ஆதய ஸ்ரீ ரகுவர,'' வராளியில் ''மரகதமணி,'' சுருட்டியில் ''கீதாபதிக ஆரதி'' என்பது போன்ற சிறந்த ஸாஹித்யங்களை, ஸ்வச்சமான, அழகான, கமகப் பிரதானமான வீணை தனம்மாளின் பாணியில் வாசித்ததும் அங்கு கூடியிருந்தவர்கள் அனைவரும் மெய் மறந்து, நாதவெள்ளத்தில் மூழ்கித் திளைத்தார்கள். தங்களை மறந்து, ''இதுவன்றோ உண்மையான, கலப்பற்ற, படோடாபமற்ற, உருட்டல் புரட்டலில் லாத, சுத்தமான சங்கீதம்'' என்று வியந்தனர். அடிக்கடி 'ஆகா! சபாஷ்!' என்று பாராட்டி மகிழ்ந்தனர்.

அன்றைய விழாவுக்குத் தலைமை வகித்த ஸ்ரீ டி. வி. ராமாநுஜம் அவர்கள் ஸ்ரீ ரங்கராமாநுஜ ஐயங்காரின் சேவையைப் பாராட்டிப் பேசும் பொழுது ''காலஞ் சென்ற டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் தமிழ் இலக்கியத்துக்குச் செய்த தொண்டைப்போன்றது கிருதிமணி மாலையின் ஆசிரியர் கர்நாடக சங்கீதத்துக்குச் செய்துள்ள கைங்கரியம்'' என்று குறிப்பிட்டதும் அங்குள்ள ரஸிகர்கள் பலத்த கரகோஷம் செய்து தங்கள் ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் வெளியிட்டனர்.

கிருதிமணிமாலையின் ஆசிரியரான ஸ்ரீ ரங்கராமாநுஜ ஐயங்கார் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, பல பரிசுகள் அளித்துப் பாராட்டியது மிகவும் பொருத்தமான காரியம் என்பதை ஸ்ரீ டி. வி. ராமாநுஜம் தமக்கே உரிய தனிப்பாணியில் ரத்தினச் சுருக்கமாக எடுத்துக் காட்டி விளக்கினார். ''மகாகவி சுப்பிரமணிய பாரதியார் போன்ற மகான்களை அவர்களுடைய வாழ்நாளில் நாம் சரிவர ஆதரிக்கவில்லை; கிருதிமணிமாலை ஆசிரியரை அவருடைய வாழ் நாளிலேயே நாம் பாராட்டி, உற்சாக மூட்டி, மேலும் அவர் சேகரித்துள்ள எல்லாக் கிருதிகளையும் வெளியிடுவதற்கு வழி தேட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

'பாராட்டுதல்' என்ற வளம் அளிக்காவிட்டால் கலை யென்ற சிறந்த செடி வளராது என்ற உண்மையைப் புது ரஸிகர்கள் நன்றாக அறிந்திருக்கின்றனர் என்று ஸ்ரீ டி. வி. ராமாநுஜம் நிர்வாகிகளை ஆதரித்துப் பேசி, இந்த விழாவில் காணப் பட்ட ஒற்றுமை நீடித்திருக்குமாறு வேண்டிக் கொண்டார்.

# எச்சரிக்கை

# "'HAZELINE' SNOW"

(TRADE MARK)

## "'ஹாஸலீன்' ஸ்னோ" (டிரேட் மார்க்)

கடைகளில் போலித் தயாரிப்புச் சரக்குகள் ஏராளமாக குவிந்திருப்பதாகத் தெரிகிறது. இவைகளினின்று உங்களைப் பாதுகாக்கும் பொருட்டு எங்களால் உற்பத்தி செய்யப்படும் எல்லா "'ஹாஸலீன்' ஸ்னோ" (டிரேட் மார்க்) "'HAZELINE' SNOW" TRADE MARK தயாரிப்புகளிலும் பாட்டில் மூடியின் பேரில் ஆறு காப்ஸ்யூல் வெள்ளி நிற அலுமினிய ஜரிகை காகிதத்தால் அழுந்த மூடப்பட்டிருக்கும்.

நீங்கள் சரக்கு வாங்கும்போது அலுமினிய ஜரிகை மூடி கலையாமலிருக்கிறதா என்று கவனியுங்கள்.

மூடியின் மேற்புறத்தில் நீல நிறத்தில் இந்த டிசைன் இருக்கும்.




## பர்ரோஸ் வெல்கம்

அண்ட் கம்பெனி (இந்தியா) லிமிடெட்,

தபால் பெட்டி 290, பம்பாய்

"'HAZELINE' SNOW" "'ஹாஸலீன்' ஸ்னோ" என்பது லண்டனிலுள்ள தி வெல்கம் பவுண்டேஷன் லிமிடெட் ரிஜிஸ்தர் செய்துகொண்டுள்ள டிரேட் மார்க். அதை இந்தியாவில் உபயோகிக்க ரிஜிஸ்தர் செய்து கொண்டவர்கள் பர்ரோஸ் வெல்கம் அண்ட் கம்பெனி (இந்தியா) லிமிடெட் ஸ்தாபனம் ஒன்றுதான். எனவே அதிகாரமில்லாமல் இந்த டிரேட் மார்க்கை உபயோகிப்பவர்களும், போலிச் சரக்குகளை அசல் "'HAZELINE' SNOW" TRADE MARK "'ஹாஸலீன்' ஸ்னோ" டிரேட் மார்க் போன்ற தோற்றமளிக்கும்படி தயாரிப்பது, வர்த்தகம் செய்வது, விற்பது, விற்க முயற்சி செய்வது போன்ற செயலில் ஈடுபட்டுள்ளவர்களும் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

# கால்கேட்
# குளோரோபில் டூத்பவுடர்




## குளோரோபிலின் பூரண நன்மைகளை நீங்கள் உபயோகிக் கையில் தருகிறது!

## வீரிய குளோரோபில்தான் பலன் தரும்!

வீரிய குளோரோபிலின் நன்மைகளை எல்லாம் புதிய கால்கேட் குளோரோபில் டூத் பவுடர் தருகிறது. வீரிய குளோரோபில் தான் வாய் நாற்றம், கிரிமிகளை நீக்கி ஈறுகளைப் பலப்படுத்துகிறது. கால்கேட் முறையில் குழந்தைகளுக்கு குளோரோபில் கவனிப்பை அளியுங்கள்—அரிய சந்தர்ப்பம்.



### வாய் நாற்றத்தை அழிக்கிறது

ஒரு விசேஷ சூத்திரம் காரணமாக கால்கேட் குளோரோபில் டூத்பவுடர் துரிதமாக, திருத்தமாக வேலை செய்கிறது. உங்கள் வாய் அதிகநேரம் புதுமை, இனிமையுடன் இருக்கிறது. அதன் வாசனை ஜோரானது!




### கிருமிகளை ஒழிக்கிறது

சாப்பிட்டவுடன் கால்கேட் குளோரோபில் டூத் பவுடரை உபயோகிப்பதால் பற்களைச் சிதைக்கும் அமிலங்கள் ஒழிகின்றன.



### ஈறுகளை பலப்படுத்துகிறது

ஈறுகளை குளோரோபில் பலப்படுத்துகிறது. தினசரி கால்கேட் குளோரோபில் டூத் பவுடரை உபயோகிப்பதால் குளோரோபிலின் பூரண நன்மைகளைப்பெற்று ஈறுகளைப் பாது காக்கலாம்.




CTPG/1

## 35. "சபாஷ்! அதுதான் சரி!"

ராதா சிரித்த அந்தச் சிரிப்பின் எதிரொலி அடுத்த கணமே காரின் ஹாரன் சப்தத்தில் மூழ்கி விட்டது. காரின் ஹாரன் சப்தம் அங்கே அத்தனை நேரமும் நிலவியிருந்த தனிமையைக் கலைத்து விட்டது. ராதா, சுதாகர் இருவரும் ஏககாலத்தில் துணுக்குற்றனர். ஹாரன் சப்தம் வேறு எந்தக் காரினுடையதும் இல்லை. ஜ்வாலாப் பிரஸாதின் காரினுடையதுதான். ஜ்வாலாப் பிரஸாதின் டிரைவர் துணிமணிகளுடன் காரிலிருந்து இறங்கினான். அப்பொழுது ராதாவும் சுதாகரும் ஒருவருக் கொருவர் எதிரும் புதிருமாக நின்று கொண்டிருந்தார்கள். டிரைவரைக் கண்டதும் இருவருடைய முகங்களும் தொங்கி விட்டன.

ஹிந்து சமூகம் சமுத்திர ஸ்நானத்துக்கு மிகுந்த மதிப்பு அளித்திருக்கிறது. சமுத்திர ஸ்நானத்தைப் பற்றிப் பல மகாத்மியங்களையே கூட இயற்றி யிருக்கிறது. ஆனால் அன்னிய புருஷனுடன் 'கடலில் நீராடலாம் என்று சொல்ல வில்லை. கூடாது என்றுதான் சட்டமும் திட்டமும் வகுத்திருக்கிறது. சமூகத்தின் அந்தச் சட்டமும் திட்டமும் அவ்வளவு கடுமையானவை இல்லைதான். ஆயினும் அன்னிய ஆடவன் ஒருவனுடன் கடலில் குளிப்பது நியாயமானது என்று எந்தச் சட்டமும் ஏற்றுக்கொள்ள வில்லையே! என்ன செய்வது?

இருவருடைய தலையெழுத்தும் நன்றாயிருந்தது. நல்ல வேளையாக ஜ்வாலாப் பிரஸாத் அந்த மோட்டாரில் வர வில்லை. இருந்தாலும் இருவருடைய இருதயத்திலும் இனம் தெரியாத ஒருவித பீதி வந்து புகுந்து கொண்டது. இருவரும் எண்ண முடியாத பல எண்ணங்கள் எண்ணியவாறு மெதுவாகக் கரை யேறி வந்தார்கள்.

உடைமாற்றிக் கொண்டிருந்த சுதாகரின் கையில் கார் டிரைவர் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அதைப் பார்த்த ராதாவுக்குப் பயமா யிருந்தது. அவள் மனத்தை ஒருவிதத் திகில் ஆட்கொண்டது. 'சுதாகரை வேண்டாம் என்று கூறித் தன் கணவர் வேலையை விட்டு நீக்கி யிருப்பாரோ?' என்ற எண்ணம் எழுந்து அவள் மூளையை மிகவும் குழப்பியது. ஏனெனில் அவர்கள் இருவரும் கடலில் ஒன்றாகக் குளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்னும் விஷயத்தை டிரைவர் வாய்மொழியாக அறிந்த பின்னர் தானே அவர் காரில் அவர்களுக்கு மாற்று உடை அனுப்பி யிருக்க வேண்டும்?

சுதாகரை அழைத்துக் கொண்டு ராதா தனியாகச் சமுத்திர ஸ்நானம் செய்யப் புறப்பட்டிருக்கிறாள் என்றால் ஜ்வாலாப் பிரஸாதுக்கு அது எப்படிப் பிடிக்கும்? ஒரு கணவன் தன் மனைவியை அன்னிய புருஷனுடன் தனியே மனமொப்பிக் கடலில் குளிக்க அனுப்புவானா? ஜ்வாலாப் பிரஸாத் தன்னுடைய அந்தச் செய்கையை விரும்ப மாட்டார் என்பதை அறிய இயலாத அளவுக்கு அவள் அவ்வளவு அறிவு மழுங்கியவள் அல்லவே! எனவே, "அந்தக் கடிதத்தில் என்ன எழுதி யிருக்கிறது?" என்று கேட்டாள் சுதாகரைப் பார்த்து.

"என்னை உடனே புறப்பட்டு வீட்டுக்கு வரச் சொல்லி எழுதி யிருக்கிறார்!"

"யார்?"

"ஸேட்ஜீ தான்!"

ராதா அதற்குமேல் ஒன்றும் பேச வில்லை. சுதாகர் யோசனையில் ஆழ்ந்தான். 'இது என்ன கஷ்ட காலம்? நம் மூளை இப்படித் தறிகெட்டுப் போவானேன்?' என்று எண்ணினான். அதைத் தொடர்ந்தாற் போலவே, ஜ்வாலாப் பிரஸாத் தம் கண்களினால் தன்னுடன் ராதா கடலில் குளிப்பதைக் காண வில்லை என்ற நினைவு அவனுக்கு வந்தது. அப்புறம் தான் அடங்கி ஒடுங்கிப் போய்க் கொண்டிருந்த அவனுடைய ஆத்ம பலம் மறுபடியும் திரும்பி வந்தது.

"என்ன விசேஷமா யிருக்கலாம்?"

பாதி தன்னையும் பாதி ராதாவையுமாகச் சுதாகர் கேட்டுக் கொண்டான்.

"என்னவாயிருந்தால் என்ன? என்னோடு வாருங்கள்!" என்று கூறி ராதா காரில் ஏறி உட்கார்ந்தாள். சங்கோசத்தினால் கூனிக் குறுகி நின்றான் சுதாகர். கடைசியில் ராதா மிகவும் வற்புறுத்தவே, வெகு சிரமத்துடன் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

நீண்ட சாலைகளையும் தெருக்களையும் தாண்டிக் கொண்டு கார், கண் இமைக்கும் நேரம் என்று சொல்வார்களே, அவ்வளவு



ரமண்லால் வஸந்தலால் தேசாய்] [மொழிபெயர்ப்பு: ரா. வீ.

சீக்கிரமாகப் பங்களாவை அடைந்தது. ஜ்வாலாப் பிரஸாத் பங்களாவின் வராந்தாவில் நின்று கொண்டிருந்தார்.

கணவன் தன் மனைவியை எத்தனை தான் அலட்சியப் படுத்தினாலும், மனைவியின் கவனம் முழுவதும் தன்னிடமே இருக்க வேண்டும் என்று தான் விரும்புகிறான். கணவனின் ஸ்தானத்தை அடைந்து விட்டால் மனிதனுடைய இயல்பு தானாகவே அத்தகையதாகி விடுகிறது. ஜ்வாலாப் பிரஸாதின் விழிகளில் கோபம் கோரத் தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

சுதாகரும் ராதாவும் காரிலிருந்து சேர்ந்தாற்போல் இறங்கினார்கள். அந்தக் காட்சியைக் காண ஜ்வாலாப் பிரஸாதின் கண்களுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அவர் விழிகள் ரத்தச் சிவப்பாகச் சிவந்தன.

எதற்குமே ஒரு எல்லை இருக்கும்பொழுது கணவனின் உதார குணத்துக்கும் தாராள மனப்பான்மைக்கும் கூட ஒரு எல்லை இருப்பது இயல்புதானே? அன்னிய ஆடவனுடன் கடலில் குளித்து விட்டு, அதே ஆடவனுடன் காரில் ஏறி அமர்ந்து ஒரு பெண் தன் வீட்டுக்கு வருவது, தன் கணவனின் கண்களுக் கெதிரிலேயே அன்னிய ஆடவனுடன் காரிலிருந்து இறங்குவது என்றால், எந்தக் கணவன் தான் அதை விரும்புவான்? நல்ல நோக்குக் கொண்டு பார்ப்பான்?

உலக நீதி அப்படியிருக்கும்பொழுது ஒருவனைக் குறை கூறி என்ன பயன்? கன்னியின் கரம் பற்றியதும் மனிதனின் மனத்தில் 'தான் கணவன்' என்னும் எண்ணம் முளைத்து விடுகிறது. 'கட்டின பெண்டாட்டியைத் தன் இஷ்டப்படி அடக்கியாள, ஆட்டி வைக்கத் தனக்குப் பூர்ண உரிமை உண்டு' என்ற சிந்தனை கிளை விடுகிறது. அப்படிச் செய்வது தன்னுடைய பிறப்புரிமை என்றே கூட எண்ணி விடுகிறான். 'தான் எஜமானன்' என்று எண்ணக்கூடத் தலைப்பட்டு விடுகிறான். மனத்திலே அத்தகைய அகம்பாவம் புரையோடி விடுவதன் பலனாக அவளிடம் அன்பும் ஆதரவும், பரிவும் பிரியமும் ஏற்படுவது போல, எரிச்சலும் பொருமையும் கூட ஏற்பட்டு விடுகின்றன. எனவே மனைவியின் ஒவ்வொரு செயலையும் கண்காணிக்கத் தொடங்கி விடுகிறான். தனக்குப் பிடிக்காத விஷயம் எதையாவது அவளிடம் கண்டு விட்டால் ஆணவம் மேலோங்கி அவளைக் கடிந்து அடக்க முற்பட்டு விடுகிறான். அது அவனுடைய தவறல்ல; இருதயத்தில் வேர் விட்டு விட்ட அகந்தை வித்தின் தவறுதான். எனவே ஜ்வாலாப் பிரஸாதின் கண்களில் கோபக் கனல் பறந்ததில் தவறு என்ன?

ஆனால் கண் மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள்ளாக ஜ்வாலாப் பிரஸாத் தமது முகபாவத்தை மாற்றிக் கொண்டு விட்டார். பிறகு மிகவும் மரியாதையுடன் சுதாகரைத் தம் அருகில் வருமாறு ஜாடை காட்டி அழைத்து, "வாருங்கள், சுதாகர்! என் கடிதம் இத்தனை சீக்கிரமாகத் தங்கள் கைக்குக் கிடைத்துவிட்டது ஒரு சுபசூசகம்தான்!" என்று கூறினார்.

ஜ்வாலாப் பிரஸாதின் கண்களில் கடுகடுப்பைக் கண்டு துணுக்குற்றுப் போன ராதாவுக்கு ஜ்வாலாப் பிரஸாதின் பார்வையில், தான் கண்ட கோப உணர்ச்சி வெறும் பிரமை தானோ என்று தோன்றிற்று. அதோடு அவர் பேச்சிலும் அன்பும் ஆதரவும் தொனிக்கவே, அது வெறும் பிரமைதான் என்ற நிச்சயமான முடிவுக்கும் வந்து விட்டாள்.

"தாங்கள்தான் கடிதம் கண்டதும் புறப்பட்டு வருமாறு எழுதியிருந்தீர்களே! எனவேதான் உடனே புறப்பட்டு வந்தேன். ஏதாவது விசேஷம் உண்டோ?" என்று கேட்டான் சுதாகர்.



"ஆமாம், ஒரு வேலை இருக்கிறது. அதுவும் மிகமிக முக்கியமான வேலை. அதனால்தான் தங்களை இத்தனை சீக்கிரமாக வரச்சொல்லித் தொந்தரவு கொடுக்கும்படியாகி விட்டது!" என்றார் ஜ்வாலாப் பிரஸாத்.

"அதனால் என்ன? பரவாயில்லை. சொல்லுங்கள்!" என்றான் சுதாகர்.

"சொல்வதற்காகத்தானே வரச்சொல்லியனுப்பினேன்!" என்றார் ஜ்வாலாப் பிரஸாத். அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதை அறியும் ஆவலுடன் சுதாகர் அவருடைய முகத்தையே பார்க்கலானான்.

"நீங்கள் போட்ட திட்டத்தை நமது மில் டைரக்டர்கள் ஒப்புக் கொண்டு விட்டார்கள். அதனால் வேலை நிறுத்தம் நின்று விட்டது. இத்தனை கெட்டிக்காரத்தனமாகவும் சாமர்த்தியமாகவும் நீங்கள் நடந்துகொண்டு எங்கள் மில்லை வேலை நிறுத்த அபாயத்திலிருந்து காப்பாற்றினீர்கள். அதற்காக நாங்கள் தங்களுக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறோம். எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள வேண்டித் தங்களுக்கு நான் ஏதாவது வெகுமதி அளிக்க விரும்புகிறேன்!"

இவ்வாறு கூறியவாறே ஜ்வாலாப் பிரஸாத் தமது அறைப் பக்கம் சென்றார். அவருக்குப் பின்னாலேயே சுதாகரும் ராதாவும் சென்றார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் மூவரும் விசாலமான ஜ்வாலாப் பிரஸாதின் பிரத்தியேக அறைக்குள் நுழைந்து அங்கிருந்த அழகிய சோபாக்களில் உட்கார்ந்தனர்.



ஜ்வாலாப் பிரஸாத் தமது மேஜை டிராயரைத் திறந்து பதினாயிரம் ரூபாய்க்கு ஒரு செக் எழுதினார். பிறகு அதைச் செக் புஸ்தகத்திலிருந்து கிழித்தெடுத்துச் சுதாகரின் கையில் கொடுத்தார்.

செக்கைப் பார்த்த சுதாகர் ஸ்தம்பித்து விட்டான். சேர்ந்தாற்போல் நூறு ரூபாயையே காணாத அவன் கையில் அதைப் போல் நூறு மடங்கு ரூபாய் வந்து விட்டது என்றால் வியக்காமல் என்ன செய்வான்? அவன் வியந்து ஸ்தம்பித்து நின்றதில் ஆச்சரியம் இல்லை. வியக்காமல் இருந்தால்தானே ஆச்சரியப்பட வேண்டும்?

ஒரு கண நேரத்துக்குச் சுதாகருக்கு ஒன்றுமே புரியவில்லை. தான் காண்பது கனவா, நனவா என்றுகூட அவனுக்குப் பிரமையாக இருந்தது. ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்ட அவனுக்கு, அத்தனை பெரிய தொகையைப் பெறுவதற்குத் தான் அருகதை ஆனவனே அல்ல; தனக்குக் கடுகளவும் உரிமை கிடையாது என்றே தோன்றிற்று. 'நாம் என்ன பெரிய காரியம் செய்து விட்டோம்? எதற்காக இந்த வெகுமதியைப் பெற வேண்டும்?' என்று தோன்றவே, அவன் செக்கைத் திருப்பிக் கொடுத்த வண்ணம், "நான் ஒன்றும் பிறரால் சாதிக்க முடியாத பெரிய காரியத்தைச் செய்துவிடவில்லை. இத்தனை ரூபாய் பெறுவதற்கு எனக்கு எந்த விதத்திலும் உரிமை கிடையாது. எவ்வித உழைப்பும் இன்றி இத்தனை ரூபாய் பெறுவதை நான் மகா பாவமாக நினைக்கிறேன்!" என்றான்.

அதைக் கேட்ட ஜ்வாலாப் பிரஸாத் அந்த அறையே கிடுகிடுக்கும்படி 'கலகல' வென்று பலமாகச் சிரித்தார்.

"அடடா! நீங்கள் உலகம் தெரியாத பரம சாது மனிதராயிருக்கிறீர்களே! நான் கொடுக்கும் இந்தத் தொகை ஒன்றுமே இல்லை. இதைக் காட்டிலும் எத்தனையோ பங்கு கொடுக்க வேண்டும். நீங்கள் செய்த இந்தக் காரியத்தை இன்னொருவன் செய்தால், இதைக் காட்டிலும் எத்தனை மடங்கு அதிகமான தொகை அவனுக்குக் கொடுக்க வேண்டியிருந்திருக்கும், தெரியுமா? இவ்விஷயம் தெரிந்திருந்தால் நீங்கள் இப்படிப் பேசியிருக்க மாட்டீர்கள்! இன்று எந்த மில்லைப் பார்த்தாலும் வேலை நிறுத்தம். ஆனால் எங்கள் மில் மட்டும் வேலை செய்து கொண்டிருக்கிறது. இதனால் எங்களுக்கு எத்தனை லாபம் கிடைக்கும் என்று உங்களால் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாது. உங்களைப் போன்ற சூது வாது கள்ளங்கபடு தெரியாத......"

ஜ்வாலாப் பிரஸாத் தம் பேச்சை முடிப்பதற்குள்ளாகக் குறுக்கிட்டு, "ஆனால் சேட்ஜி! உழைப்புக்குத் தகுந்த ஊதியம் தான் கிடைக்க வேண்டும். இந்தக் காரியத்தில் நான் எவ்வளவு உழைக்க வேண்டியிருந்தது என்பது

எனக்குத்தான் தெரியும். இதற்கு இத்தனை ரூபாய் வாங்கிக் கொள்வது என்றால் எனக்கு அது அநியாயமாகவும் அக்கிரமமாகவும் தான் தோன்றுகிறது!" என்றான் சுதாகர்.

ஜ்வாலாப் பிரஸாதும் ராதாவும் கபடம் என்பதையே என்ன என்று அறியாத சுதாகரின் தன்மையைக் கண்டு சிரித்தனர். இனாம் வாங்கிக் கொள்ள எத்தனையோ பேர் நான் முந்தி, நீ முந்தி என்று முண்டியடித்துக் கொண்டு முன் வருகிறார்கள். ஆனால் இனாம் வேண்டாம் என்று சொல்பவர்கள் தான் இந்த உலகத்தில் காணக் கிடைப்பதற்கு அரியவர்களாயிருக்கிறார்கள். அத்தகைய அரியவனைக் கண்ட காரணம்தான் அவர்களுக்குச் சிரிப்பாக வந்தது.

"நீங்கள் மிகவும் விசித்திரமான மனுஷ்யராயிருக்கிறீர்களே! வாழைப்பழமும் வேண்டாம் என்று சொல்லும்......" என்று வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்தினாள் ராதா.

ராதா சொன்னதை ஜ்வாலாப் பிரஸாத் வெகு கவனமாகக் கேட்டார்; அவள் முகத்தையும் ஊன்றிக் கவனித்தார். பிறகு சிரித்துக்கொண்டே, "இன்னும் உங்கள் மூலமாக எத்தனையோ காரியங்கள் ஆகவேண்டியிருக்கின்றன. நீங்கள் இப்படி இருந்தால்......" என்றார்.

"நீங்கள் சொல்லும் வேலையை மகிழ்ச்சியுடன் நான் செய்யத் தயார்!" என்றான் சுதாகர் அடக்கமே உருவான ஊழியனைப் போல.

"...ஆனால் நீங்கள் இந்த வெகுமதியை வாங்கிக் கொள்ளாதவரையில், நான் உங்களுக்கு வேறு வேலை தரமாட்டேன். நமது தொழிலில் சிற்சில சமயம் காசைப் பற்றியெல்லாம் கணக்கு வழக்குப் பார்க்க முடிவதில்லை. ...ராதா! நீ சுதாகரிடம் சொல்லிப் பார். ஒரு வேளை உன் கையால் கொடுத்தால் வாங்கிக் கொள்ளுவாரோ, என்னவோ!" என்றார் ஜ்வாலாப் பிரஸாத்.

ஜ்வாலாப் பிரஸாத் எம். ஏ. யோ, பி. ஏ. யோ படித்த பட்டதாரி இல்லைதான். இருந்தாலும் வியாபார நுணுக்கங்களை நன்கு அறிந்திருந்தார். எப்பொழுது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அவருக்குத் தெரிந்திருந்தாற் போல் பிறருக்குத் தெரிய நியாயம் இல்லை. சரியான சமயத்தில் அவருக்கு அந்த விஷயம் தோன்றியது. மூளை பளிச்சிட்டுச் சரியான வழியைக் காட்டியது.

ஆனால் ஜ்வாலாப் பிரஸாதின் அந்தரங்க நோக்கம் என்ன என்பதை ராதாவினால் புரிந்து கொள்ள முடியவில்லை. மேஜைமீது வைத்திருந்த செக்கை ராதா தன் கையில் எடுத்துக் கொண்டாள். ஒய்யார நடை நடந்தவாறு சுதாகரின் அருகில் சென்று அவன் கையில் அன்புடன் அந்தச் செக்கைத் திணித்து, "என்மீது ஆணை! நீங்கள் இதைக் கட்டாயம் வாங்கிக் கொண்டுதான் ஆக வேண்டும்!" என்று குரலில் பிடிவாதம் தொனிக்க வற்புறுத்தினாள்.

ராதாவின் கையைச் சுதாகரினால் உதற முடியவில்லை. வாங்கிக் கொள்ள முடியாது என்று மறுதளிக்க முடியவில்லை. பிரமை பிடித்தவன் போல் கையில் செக்குடன் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். இரண்டு மூன்று தடவைகள் சீக்கிரம் சீக்கிரமாகக் கண்களைக் கொட்டிக் கவனித்தார் ஜ்வாலாப் பிரஸாத்.

"சபாஷ்! அதுதான் சரி! என்ன இருந்தாலும் என் ராதா கெட்டிக்காரிதான்!" என்றார். பிறகு சுதாகரைப் பார்த்து, "சுதாகர்! உங்களிடம் இன்னொரு வேலையும் ஒப்படைப்பதாக இருக்கிறேன். அந்த வேலையில் நீங்கள் வெற்றி கண்டு விட்டால், உங்களை அப்புறம் யாரும் கட்டிப் பிடிக்க முடியாது. அவ்வளவு அதிர்ஷ்டசாலியாகி விடுவீர்கள்! தெரிந்ததா?" என்றார்.

சுதாகரும் ராதாவும் அப்படிப்பட்ட அதிர்ஷ்டக் கதவைத் திறந்து விடப்போகும் வேலையைப் பற்றிக் கேட்க வேண்டி மனத்தை ஒருநிலைப்படுத்திக் கொண்டார்கள்.

ஜ்வாலாப் பிரஸாதின் நண்பர் ஒருவர் ஏதோ ஒரு நகரத்தில் இருந்தார். அந்த நகரத்தின் பெயரை ஜ்வாலாப் பிரஸாத் கூறவே, சுதாகர் துணுக்குற்றான். அதே நகரத்தில் தான் அவனுடைய சித்தப்பா முதலில் வேலை பார்த்து வந்தார். சுதாகரும் அதே நகரத்தில் தான் கல்வி பயின்றான். அவனுடைய மனோரமாவும் அதே நகரத்தில் தான் இருந்தாள். அந்த நகரத்தின் பெயர் மனோரமாவின் நினைவை அவனுக்கு உண்டு பண்ணி விட்டது. அவ்வளவுதான்; அடுத்த கணமே அவளுடைய அந்த நினைவு அவன் மனத்தை வாட்டி வதக்கி வறுத்து எடுக்கத் தொடங்கி விட்டது. அவன் அதிக ஆவலுடன் 'அவ்விடத்தில் என்ன வேலை, ஏது வேலை?' என்பதைப் பற்றி ஜ்வாலாப் பிரஸாதிடம் கேட்கத் தொடங்கிவிட்டான். அப்புறம் அவனுக்கு அவர் அளித்த வெகுமதியைப் பற்றிய நினைவே எழவில்லை. மனோரமாவின் நினைவு அவனை ஆட்கொண்ட பின் மற்ற நினைவுகள் எழ நியாயம் ஏது?

"சுதாகர்! அங்கே இருக்கும் என் நண்பர் மிக மிகப் பெரிய பணக்காரர்; பிரபலமான ஜமீன்தார். அவர் ஜமீனில் பருத்திச் சாகுபடி வெகு நன்றாக நடக்கிறது. அவர் தம் நகரத்திலேயே ஒரு துணி மில் ஆரம்பிக்க விரும்புகிறார். இந்த ஆசை அவருக்கு இன்று நேற்று எழுந்ததில்லை. எத்தனையோ நாட்களாக எழுந்ததுதான். நீங்கள் இன்று இரவு வண்டியிலேயே அந்த நகரத்துக்குப் புறப்படுங்கள். நேரில் சென்று எல்லா விஷயங்களையும் பேசித் தீர்மானித்துக் கொள்ளுங்கள். இப்பொழுது மில் ஆரம்பிப்பதற்குச் சரியான தருணம். இங்கே தொழிலாளிகள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள் அல்லவா? அவர்களுக்கு அங்கே வேலை கிடைத்து விடும். என் நண்பர் மில் ஆரம்பிக்க வேண்டும் என்று


# எவ்வளவு காலம் உழைக்கிறது...

## என்ன

# புதுமை



501 ஸோப்பைக் கொண்டு சலவை செய்யப்படும் துணி மணிகள்நீடித்துழைப்பதுடன் புதுமையும் அடைகின்றன. இந்த ஸோப்புகள் பார்களாகவும், சிறு தூள்களாகவும் விற்கப்படுவது தவிர, 501 ஸ்பெஷலுமாகக் கிடைக்கும். இவை பணம் மிச்சப்படுத்துகின்றன, துணிகளை மிகவும் பாதுகாக்கின்றன, வீட்டுச் சலவை வேலையை உங்களுக்கு எவ்வளவோ சுலபமாகவும் செய்கின்றன.




# 501


## சலவை ஸோப்புகள்

இவை டாடா தயாரிப்புகள் A TATA PRODUCT டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மெம்பர், இந்தியன் சோப் அண்டு டாய்லட்ரீஸ் மேக்கர்ஸ் அஸோஸியேஷன்

FZY-34 TAM.

# உலகின் மகோன்னத சமன ஔஷதம்




**வெட்டுப்புண், தீப்புண், சிராய்ப்பு,**

**காயங்களுக்கு மிகுந்த பாதுகாப்புள்ள மிக நிச்சயமான சிகிச்சை**

விபத்துகளை முன்னிட்டு ஜாம்-பெக்கை எப்பொழுதும் கைவசம் வைத்திருங்கள். ஜாம்-பெக் இதமளிப்பது விஷத்தடுப்பு குணமுள்ளது. காயங்களில் அபாயகரமான கிருமிகள் பரவாமல் தடுக்கும் ஜாம்-பெக் சீக்கிரத்தில் காயங்களை ஆற்றும். இதர மதிப்புவாய்ந்த ஔஷதப் பொருள்களைத் தவிர ஜாம்-பெக்கில் க்ளோரோபில் சேர்ந்திருப்பதால் அதன் சமனகுணம், தசை நார் போஷாக்கு மற்றும் இதர பயன்களும் கிடைக்கும். ஜாம்-பெக்கை எக்ஸிமா முதலிய சரும நோய்களின் நிவாரணத்திற்கும் வலியுடன் சோர்வுற்று ரணமடைந்த கால்களுக்கு சமனமூட்டி குணமாக்கவும் மூலநோயின் வலியையும் அரிப்பையும் நிறுத்தவும் உபயோகிக்கலாம். ஜாம்-பெக்கில் மிருகக் கொழுப்பு சேரவில்லை என்பதற்கு உத்திரவாதம்.

**ஜாம்-பெக்—எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.**

மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள்: தாதா & கம்பெனி, பார்க் டவுன்

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

# மதுரை மில்ஸ் கம்பெனி லிட்.

போன்: 250 (5 லைன்) மதுரை தந்தி: "ஹார்வி"

**மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்**

**5,00,000 நூற்கும் கதிர்கள் - நெம்பர் 80 வரை நூல்கள்**

**எங்களுடைய விசேஷமான நூல்கள்**


கைத்தறி, மில் தறி, பின்னல் தறிகளுக்கேற்ற சகலவிதமான ஒற்றை, இரட்டை, மடக்கு காரிக்கன் நூல்கள்

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

மானேஜர்கள்

**ஏ. & எப். ஹார்வி லிமிடெட்**

போன்: 420 (4 Lines) மதுரை தந்தி: "ஹார்வி"




ஆசை கொண்டிருந்தாரே, அவருடைய அந்த ஆசையும் நிறைவேறி விடும். இவ்விடத்துத் தொழிலாளர்கள் பலர் அங்கு வந்து விட்டால், இங்கேயுள்ள மில்களுக்குத் தொழிலாளிகள் அகப்பட மாட்டார்கள். அதன் காரணமாக அவற்றில் பூட்டுத் தொங்கத் தொடங்கி விடும். நாம் இப்பொழுது எத்தகைய பயங்கரப் போட்டியைச் சமாளிக்க வேண்டியிருக்கிறதோ, அந்தப் போட்டியின் வேகம் சற்றுத் தணிந்து விடும்!'' என்று கூறினார் ஜ்வாலாப் பிரஸாத்.

ஜ்வாலாப் பிரஸாத் தம் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தார். அவருடைய அந்தத் தொழில் யோசனை காரணமாக அவருக்கும் லாபம் கிடைக்கும். அவருடைய நண்பருக்கும் லாபம் ஏற்படும். 'ஒரு கல்லில் இரண்டு மாங்காய்!' என்னும் நீதியைக் கடைப் பிடிக்கும் ரீதியில் அமைந்தது அவருடைய அந்தப் பேச்சு! அவருடைய அந்தத் தொழில் சாமர்த்தியத்தைக் கண்டு யாருமே மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சரியப் படத்தான் வேண்டும்.

ஆனால் ராதா மட்டும் அதைக் கேட்டுத் திடுக்கிட்டான். ஜ்வாலாப் பிரஸாத் வியாபார நுணுக்கங்கள் மட்டும் தெரிந்தவர் அல்ல; நல்ல உலகாநுபவம் பெற்றவர் என்பதும் அவருடைய அந்தப் பேச்சிலிருந்து உறுதியாயிற்று.

'ஓகோ! இப்படியா சேதி? சுதாகரை இங்கிருந்து அப்புறப் படுத்துவதற்கான யோசனையா இது!'

ராதாவின் இருதயத்தில் இத்தகைய எண்ணம்தான் எழுந்தது; இடம் பெற்றது.

''சேட்ஜி! நீங்கள் சொல்வது சரி. ஆனால் இந்த விஷயத்தில் எனக்குக் கொஞ்சங்கூட அநுபவமோ ஞானமோ கிடையாதே! யாராவது விஷயம் தெரிந்தவர்களை அனுப்புங்களேன்! ஆரம்பத்தில் விஷயம் தெரியாத நான் போய் என்ன செய்ய முடியும்?'' என்று கேட்டான் சுதாகர்.

''விவரம் தெரிந்த மனிதன் முதலில் தன்னலத்தைத் தான் பார்ப்பான். நீங்கள் நாணயஸ்தர்; நல்ல குணம் படைத்தவர். தப்புத் தண்டா வியாபாரத்தில் இறங்க மாட்டீர்கள். அது மட்டும் அல்ல; இப்படி வேலை செய்யப் பழகிப் பழகித்தானே தொழில்முறை தெரிந்துகொள்ள வேண்டும்? சும்மா கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தால் தானாக வந்து விடுமா? சிறிதும் யோசிக்காதீர்கள். உங்களுக்கு அங்கே எந்தவிதமான அசௌகரியமும் ஏற்படாது. உங்களோடு உங்கள் ஒத்தாசைக்கு ஒரு வேலைக்காரனை வேண்டுமானாலும் அழைத்துக் கொண்டு போங்கள்!'' என்றார்.

''எனக்கு அந்த நகரத்தைப் பற்றித் தெரியும். எனக்கு ஊர் புதிதல்ல, தெரியாததல்ல. நான் படித்தது, வளர்ந்தது எல்லாம் அந்த ஊரில்தான். அநுபவம் உள்ளவர்களை அனுப்பினால் ஆரம்ப வேலைக்குச் சௌகரியமாயிருக்குமே என்று சொன்னேனே யொழிய வேறு எதற்காகவும் சொல்லவில்லை.— ஆமாம், அந்தச் செல்வந்தரின் பெயர் என்னவோ?'' என்று கேட்டான் சுதாகர்.

''மாதவப் பிரஸாத். ரொம்பத் தங்கமான மநுஷ்யர். உங்களைப் போன்றவர்கள் அவருடன் பேசப் பேச ஆனந்தம் அடைவீர்கள். எந்த விஷயமானாலும் அவர் தித்திக்கத் தித்திக்கப் பேசுவார். வெகு கெட்டிக்காரர். என்னைப் போலவே, அவரும் உங்களைப் பூராவாக நம்புவார். நான் சொல்வதில் ஒரு எழுத்துக் கூடப் பிசகில்லை... ஏன் ராதா! நான் சொல்லுவது சரிதானே?''

இந்தக் கேள்வியைக் கேட்ட ஜ்வாலாப் பிரஸாத் திரும்பி ராதாவின் முகத்தைக் கூர்ந்து கவனித்தார்.

ராதாவுக்கு அதெல்லாம் பிடிக்க வில்லை. சுதாகரைப் போன்ற கல்வி கேள்விகளில்

சிறந்த அறிஞனை மில் போன்ற குப்பைக் காரியங்களில் இழுத்துப் போட அவன் மனம் இடம் கொடுக்க வில்லை. அப்படிச் செய்வது அறிவுக்கு உகந்த காரியமாகவும் பட வில்லை. அது மட்டும் அல்ல; சுதாகர் தன்னிட மிருந்து மெதுவாக அகற்றப்படுகிறான். அதற் காகத்தான் இந்தக் திட்டம் என்பதை எண்ணும் பொழுது அவள் மனத்தை என் னவோ செய்தது. உள்ளத்தில் ஒரு முள் உறுத்துவது போன்ற உணர்ச்சி உண்டா யிற்று. எனவே, அவள் தன் ஆட்சேபணை யைத் தெரிவிக்கும் தோரணையில், "சுதா கரையும் எதற்கு இந்தச் சகதியில் இழுக்கப் பார்க்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"உம். மில் வேலை உனக்குச் சகதியாகத் தோன்றுகிறதோ?" என்று கேட்டார் ஜ்வாலாப் பிரஸாத்.

"சகதி யில்லாமல் என்னவாம்?"

"என் மானத்தையும் உன் மானத்தையும் காப்பாற்றும் துணிகள் அங்கேதான் தயாரா கின்றன. நினைவு வைத்துக் கொள்."

"அது சரி! ஆனால் என் படிப்பில் மண் விழுந்து விடுமே! அதற்கு என்ன செய்வது, சொல்லுங்கள். அதற்காகத்தான் கேட்கி றேன்!" என்று கேட்டாள் ராதா.

"நீதான் எல்லாவற்றையும் தானாகவே புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டதாகச் சுதாகர் சொல்லிக் கொண்டிருந்தாரே!"

"வாத்தியார் என்றால் அப்படித்தான் சொல்வார்கள். ஒரு விதத்தில் பார்க்கப் போனால் அவர்கள் அப்படித்தான் சொல்ல வேண்டும். இவர் போய் விட்டால் என் கட்டுரை கவிதைகள் எல்லாம் அரை குறை யாகவே நின்று விடுமே!"

"ஏன் நிற்கிறது? இன்னொரு பட்டதாரி யைப் பார்த்து ஏற்பாடு செய்து கொண்டால் போயிற்று! அது மட்டும் இல்லை. நம் சுதாகர் எங்கேயாவது தொலை தூரத்துக்குப் போய் விடுகிறாரா? சமய சந்தர்ப்பத்தில் அவரைக் கூப்பிட்டுக் கொண்டால் போயிற்று!" என்றார் ஜ்வாலாப் பிரஸாத்.

"சுதாகர் சொல்லிக் கொடுத்துப் படிப்ப தென்றால் எனக்குப் பிடித்துப் போய் விட்டது. அவர் சொல்லிக் கொடுத்தால் தான் எனக்குப் படித்தாற் போல் இருக் கிறது. படிப்பும் மண்டையில் ஏறுகிறது. அவர் இங்கே இருப்பதனால் எனக்கு மட்டும் என்ன, உங்களுக்கும் கூட நன்மைதான். அவரைக் கொண்டு நீங்கள் எவ்வளவு பெரிய காரியத்தைச் சாதித்துக் கொண்டு விட்டீர்கள்? அப்படிப் பட்டவரை இங் கிருந்து விரட்டி விடுகிறேன் என்கிறீர்களே! இது நன்றாயிருக்கிறதா?" என்று அன்பும் ஆதரவும், மரியாதையும் மதிப்பும் ஒயிலும் ஒய்யாரமும் தாண்டவமாட ஜ்வாலாப் பிர ஸாதைப் பார்த்துக் கேட்டாள் ராதா.

ஜ்வாலாப் பிரஸாதினால் தன் பேச்சுக்கு மறு பேச்சுப் பேச முடியாது என்ற இறு மாப்பு அவளுடைய பேச்சில் தொனித்தது. ஆனால் அதற்கும் சரியான பதில் வைத்திருந் தார் ஜ்வாலாப் பிரஸாத். அவர் பேச்சுத் தான் பிறர் மறு பேச்சுப் பேச முடியாத வாறு அமைந்திருந்தது.

"இதில் எனக்கு என்ன லாபம் என்கிறாய்? ஒன்றும் இல்லை! இது நீயும் சுதாகரும் யோசித்துப் பதில் கூற வேண்டிய விஷயம். இந்தச் சந்தப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டால் சுதாகரைத் தானாகவே அதிர்ஷ்ட தேவதை வந்தடைவாள். இதைப் பயன் படுத்திக் கொள்வதோ கொள்ளாமல் இருப்பதோ உங்கள் இஷ்டம்!" என்றார் ஜ்வாலாப் பிரஸாத்.

அவருடைய அந்தப் பேச்சுக்கு மறு பேச்சுச் சொல்ல ராதாவுக்கு இடம் இருந் தால்தானே? பட பட வென்று அடித்துக் கொள்ளும் உள்ளத்துடன் அவள் அசை வற்று உட்கார்ந்திருந்தாள். சுதாகரும் கண வன் மனைவிக்கு இடையே நடந்த அந்தப் பேச்சைக் கேட்டுப் பேச்சற்றுப் போய் உட்கார்ந்திருந்தான்.

நகரத்தின் பெயரைக் கேட்டதுமே அவ னுடைய மனத்திரையிலே மனோரமா இடம் பெற்றாள். ஜ்வாலாப் பிரஸாத் அந்த நகரத்துக்குப் போகுமாறு உத்தரவிட்டதும், அவனுக்குத் தன் கனவு நினைவாகி விடும் என்ற எண்ணம் எழுந்தது.

இனி அவன் மனோரமாவுக்குக் கடிதம் ஏன் எழுதக் கூடாது? பத்தாயிரம் ரூபாய் அவன் கைக்கு வந்து விட்டது. மில் தொழில் ஆரம்பிக்கப் பட்டால் தனக்கு நல்ல பதவி கிடைக்கக் கூடும் என்ற நம்பிக்கையும் அவனுக்கு ஏற்பட்டு விட்டது. மனோ ரமாவை மணந்து கொண்டு குடும்பத்தைப் பராமரிக்கும் வன்மை தனக்கு வந்து விட்ட தாகவே அவன் எண்ணினான்.

வாழ்க்கையில் முதன் முதலாகச் சம்பாதிக் கும் தொகையை மனோரமாவுக்குக் கொடுத்து விட வேண்டும் என்று அவன் அடி நாளி லேயே மனத்துள் திட்டமிட்டிருந்தான். மணம் முடிந்த பிறகு பணம் இல்லாத குறையினால் மனோரமாவுக்கு மணவாழ்க்கை சுமையாகத் தோன்றக் கூடாது என்பது தான் அந்த நாளில் அவன் அப்படி எண்ணிய தற்கு ஆதி காரணம்.

அவன் மனத்தில் முளைத்த சிந்தனை கண் ணெதிரே காட்சியாகப் பரிணமித்தது. அங்கே போனதும் முதல் காரியமாக மனோ ரமா அவனைச் சந்திப்பாள். அப்புறம்?... அப்புறம்?? அப்புறம் என்ன? அவள் அவ னுக்குச் சொந்தமானவளாகவே ஆகி விடு வாள். அவன் அவளுடைய கரம் பற்றிக் கணவனாகி விடுவான். இந்த எண்ணத்தில் மென்மையே உருவான அவனுடைய இரு தயம் துடித்தது; படபடத்தது. (தொடரும்)

# நீரிழிவு

## ஏழு நாட்களில் குணமாகும்

•

சிறு நீரில் அதிக சர்க்கரை இருப்பின் **நீரிழிவு (DIABETES)** என்று சொல்லப்படும் இப் பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான். இதை நிவர்த்திக்க டாக்டர்கள் இன்ஸுலின் இன்ஜக்ஷன் ஒன்றைத்தான் கண்டு பிடித்தார்கள். இதைக் குத்திக் கொள்வதால் பூரண குணம் ஏற்படுவதில்லை; இன்ஜக்ஷன் மருந்து உள்ள வரை சர்க்கரை தற்காலிகமாக மறைந்து விடுகிறது.

அபரிமிதமான தாகம், பசி, அடிக்கடி சிறு நீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதியின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்றி ராஜப் பிளவை கட்டிகள், சாலேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும். வீனஸ் சார்ம் நவீன விஞ்ஞான அதிசயமாகும். இதை உபயோகித்ததால் பலர் மரணத்தினின்று தப்பியுள்ளனர்.

வீனஸ் சார்ம் உபயோகித்த 2-வது அல்லது 3-வது நாளில் சிறுநீரில் சர்க்கரை குறைந்து அடிக்கடி போகும் சிறு நீரும் குறைகிறது. 3-வது அல்லது 4-வது நாளில் வியாதி பாதிக்குமேல் குணமடையும். இந்த மருந்துக்குப் பத்தியம் கிடையாது; இன்ஜக்ஷன் கிடையாது. நன்கு விளக்கும் இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.

•

**50 வில்லைகள் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 6-12-0**

(பாக்கிங், தபால் செலவு இனாம்)

•

**வீனஸ் ரிஸர்ச் லாபரட்டரி (K.M.)**

**தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா**



பிரசித்தி பெற்ற ஸ்விஸ் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்ட கைக் கெடிகாரங்கள்


கைக் கெடிகாரம்

பாக்கெட் கெடிகாரம், டைம் பீஸ் ஒவ்வொன்றும் 5 வருஷ உத்தரவாதம்



| | ஒரிஜினல் விலை | தற்போதைய விலை |
|---|---|---|
| பாக்கெட் வாட்ச (ஆஸ்ட்ரியா) | 24 | 10/- |
| அயல் நாட்டு அலாரம் டைம்பீஸ் | 30 | 14/- |
| உயர் ரகம் அலாரம் டைம்பீஸ் | 35 | 16/- |

No. 501



Size 7¾

| | | |
|---|---|---|
| 15 ஜுவல்ஸ் ரோல்ட் கோல்ட் | 75 | 36/- |
| 15 ஜுவல்ஸ் ,, 20 மைக்ரோன்ஸ் | 90 | 40/- |

No. 502



Size 10½

| | | |
|---|---|---|
| 15 ஜுவல்ஸ் வாட்டர்ப்ரூப் | 80 | 38/- |
| 17 ஜுவல்ஸ் வாட்டர்ப்ரூப் | 90 | 44/- |
| 21 ஜுவல்ஸ் வாட்டர்ப்ரூப் | 130 | 60/- |

No. 503



Size 6¾

| | | |
|---|---|---|
| 5 ஜுவல்ஸ் க்ரோம்கேஸ் பிராஞ் | 42 | 20/- |
| 5 ஜுவல்ஸ் ரோல்ட் கோல்ட் | 52 | 25/- |
| 15 ஜுவல்ஸ் ரோல்ட் கோல்ட் | 70 | 32/- |

குறைந்த விலையில் பவுண்டன் பேனாக்கள்



ஷீவான் கோல்ட் நிப் பவுண்டன் பேனா ரூ. 14/-
கோல்ட் கேப் ரூ. 18/- பிளாக் பேர்டு ரூ. 13/-
ராஜா (ஜெர்மன்) ரூ. 10/- சைனாஷாப் மாடல் ரூ. 6/-
வில்ஸன் ரூ. 5/-, பார்க்கர் ஜூனியர் மாடல் (ஜப்பான்) ரூ. 7/-

**PIONEER WATCH CO**

Post Box No. 11428, CALCUTTA 6


இந்த சாமர்த்தியமான பஞ்சாபி பெண்மணி கூறுகிறாள்:
பணத்தை மிச்சப்படுத்துங்கள்
புத்தம்புதிய, சுத்தமான
தேயிலையை
வாங்குங்கள்
தேயிலைத் தொழிலில் தேர்ந்தவர்களால் தயாரிக்கப் பட்டு, ஈரம் புகாதபடி சிறந்த முறையில் பாக் செய்யப்பட்டு, அதி வேகமாக தோட்டத்திலிருந்து கடைகளுக்கு அனுப்பப்படுவதால் ப்ரூக் பாண்ட் தேயிலை களங்கமற்று புத்தம் புதியதாகவும், கலவையற்று சுத்தமானதாகவும் இருக்கிறது.
எப்பொழுதும்
ப்ரூக் பாண்ட்
பாக்கெட்
தேயிலையை
வாங்குங்கள்
KORA BRAND
Tea Dust
Brooke Bond Tea
58 17 K

# யாருக்குக் கல்யாணம்?

கோமதி சுப்பிரமண்யம்



அத்தானின் தலையைக் கண்டதுமே வேகமாக ஓடிப் போய் மறைவான ஓரிடத்தில் நின்று கொண்டாள் குமுதா. அழையாத வீட்டுக்கு நுழையாத விருந்தாளியாக வந்திருக்கும் தனக்கு எத்தகைய வரவேற்பு கிடைக்குமென்று தயங்கித் தயங்கிப் படியேறிய பாலுவுக்கு வாசலிலேயே தரிசனம் தந்த குமுதத்தின் கமல முகம் "அதைரியப் படாமல் காரியங்கள் வெற்றி யடையப் பாடு படுங்கள்" என்று உற்சாக மூட்டுவது போலிருந்தது.

வந்தது வரட்டுமென்று வாசல் வராந்தாவில் வந்து நின்று கொண்ட பாலு தன் வரவை அறிவிக்கும் பாவனையில் தொண்டையைக் கனைத்து விட்டுக் கொண்டான்.

காலை பாராயணத்தை முடித்து விட்டுச் சிற்றுண்டி செய்ய எழுந்த பட்டாமணியம் வேற்று மனிதரின் கனைப்புக்குரல் கேட்டு வெளியே வந்து எட்டிப் பார்த்தார். கனவிலும் எதிர்பார்த்திராத ஜென்மப் பகைவன் தன் வீட்டினுள் துணிச்சலுடன் வந்து நின்றதற்காக மற்றச் சமயமானால் அவனைச் சுலபத்தில் விட்டு வைத்திருக்க மாட்டார். பலவித வசவு மொழிகளைப் பொழிந்து வழி யனுப்பி யிருப்பார். அப்பொழுதுதான் முருகக் கடவுளோடு ஐக்கியமாகி யாவும் பரப்பிரம்மமே என்ற வேதாந்த நிலையில் மனப் பக்குவப்பட் டிருக்கும் சமயம். அந்தச் சந்தர்ப்பத்தை உளவு கூறி உதவி செய்தது குமுதம் என்பது அவனுக்கு மட்டுமே தெரியும்!

"வந்த விஷயம் என்னவோ!" என்று அசிரத்தையாகக் கேட்டார் பட்டாமணியம். அந்தக் குரலிலேயே அவனிடம் அவர் அதிகம் பேச விரும்பவில்லை என்பதை விளக்கி விட்டார்.

அவரது அலட்சியத்தைப் பெரிது படுத்தித் திரும்பிப் போகவா அவன் வந்திருந்தான்! வந்த காரியத்தை முடித்துப் போகக் கருதியவனாக, "விஷயம் அத்தனை சுலபத்தில் இல்லை, மாமா!" என்று கூறிச் சிரித்து மழுப்பியவாறே அங்கிருந்த நாற்காலியில் அவர் சொல்லுமுன்பாகவே இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான்.

இக்கட்டான நிலையில் இரண்டு தட்டுகளில் பலகாரம் ஏந்தியவாறு குமுதா வந்து விடவே, நெருக்கடியான நிலையைச் சமாளிக்கக் கருதி ஒரு தட்டை அவன்முன் நகர்த்தி வேண்டா வெறுப்பாய்ச் சாப்பிடச் சொன்னார். வந்த காரியம் முடியும் முன்பாகச் சாப்பாட்டில் மனத்தைச் செலுத்த முடியவில்லை என்றாலும் நேரத்தைப் போக்கக் கருதியும், குமுதாவின் மறைமுகமான வேண்டுகோளுக்காகவும் பலகாரத் தட்டின்முன் அமர்ந்தான். சாப்பாட்டில் அவன் மனம் செல்லவில்லை; வார்த்தையில் இறங்கினான்.

"குமுதாவுக்கு எங்கெங்கோ வரன்கள் தேடுவதாக அறிந்தேன். முறைக்காரனான என் உரிமையைத் தங்களிடம் கூறிப் போகவே வந்தேன்" என்று சுருக்கமாகச் சொல்லி முடித்தான் பாலு.

"முறைக்காரன்! உனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது!" என்று கேட்கத் துடித்தது பட்டாமணியத்தின் மனம். ஏனோ பல்லைக் கடித்துக்கொண்டு நாவை அடக்கிக் கொண்டார்.

"முறைக்காரன் உரிமையைக் கேட்க வேண்டியது நியாயம்தான். ஒப்புக் கொள்ளுகிறேன். பெண்ணை வைத்துக் காப்பாற்றச் சிறிதும் திறமையில்லா திருந்தால்!..."

"திறமையைப் பெற்று, வந்து கேட்டால் மறுக்க மாட்டீர்களே........." என்று திருப்பிக் கேட்டான் பாலு.

"பார்க்கலாம்" என்ற சொல் அசுவாரஸ்யமாய் வெளிப் புறப்பட்டது. 'உனக்கெங்கே அதற்கு யோக்கியதை!' என்று கேட்பது போலிருந்தது அவர் அளித்த பதில்.

வாசற்படி யேறிக் கேட்கவே அநுமதி கிடைக்குமா கிடைக்காதா என்று அஞ்சி வந்தவனுக்கு அவர் அளித்த பதில் "பூரண சம்மதம்" என்று தெரிவித்தது போலிருந்தது.

வேலை தேடும் நிமித்தம் வெளியூர் சென்ற மகனை வழி யனுப்பியபோது பெற்றவர்களின் மனம் ஒருகணம் பிரிவுத் துயரை அநுபவித்தது.

பகை முற்றிப் போயிருந்த அண்ணனின் உற வைத் தளிர்க்கச் செய்யப் பணம் தேடியே மகன் பாலு பிரிகிறான் என்பதை நினைத்து மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள் பாலுவின் தாயார். ஆயிரம் பகை யிருந்தாலும் வீடு தேடி வந்தவனை மரியாதை கொடுத்து வரவேற்று வழியனுப்பிய அண்ணனின் பெருந்தன்மையை நினைத்து வியந்து வழிந்தது மனம். என்றுமே பெரும் போக்கு மனம் கொண்டவர் தான் பட்டாமணியம். எளியவனுக்கு வாழ்க்கைப் பட்டிருந்தாள் தங்கை என்பதற்காக, அவள் குடும்பம் கஷ்டப்படாமலிருக்கத் தன்னாலியன்ற உதவிகளை யெல்லாம் அவ்வப்போது செய்யத் தவறவில்லை.

தங்கையின் நலத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்த அவர் மனம் மாறும்படியாக நேர்ந்து விட்ட அந்தச் சம்பவத்தை நினைத்துப் பார்த்துக் கொண்டது செல்லம்மாவின் மனம்.

செல்லம்மாவோ அவள் கணவன் சொக்கலிங்கமோ என்றுமே பட்டாமணியத்தின் வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசி அறியாதவர்கள். அவரது தயவில் வாழ்கிறோம் என்கிற எண்ணத்தில் அவர் பேச்சுக்கு மறுப்புப் பேசியதே கிடையாது. என்னதான் பிறர் தயவில் வாழ்ந்து வந்தாலும், தன்மானம் பொறுப்பு என்பது இடையே குறுக்கிடும் போது அதன் போக்குப்படி நடந்தே ஆக வேண்டி யிருக்கிறது.

பக்கத்து ஊரில் கட்டிக் கொடுத்திருந்த சொக்கலிங்கத்தின் தங்கை யொருத்தி விதவையாகி அண்ணனின் வீட்டோடு வரக் காத்திருந்தாள். அதே சந்தர்ப்பத்தில் அவரது மற்றொரு தங்கை புருஷனோடு மனஸ்தாபப்பட்டுக் கொண்டு வாழா வெட்டி என்கிற பட்டத்தோடு அண்ணனின் வீடு வந்து சேர்ந்தாள்.

"இருவரின் பொறுப்பையும் இழுத்துப் போட்டுக் கொண்டு கடைசிவரை நிலை நிறுத்த முடியாமல் திண்டாடாதே. ஆரம்பத்திலேயே அவர்கள் போக்குப்படி விட்டுவிடு. நீ அதில் தலையிடாதே!" என்று மைத்துனனுக்குப் புத்தி புகட்டி வைத்திருந்தார் பட்டாமணியம். ரத்த பாசத்தில் மனம் துடித்த சொக்கலிங்கம் பட்டாமணியத்தைப் போல ஏனோ தானோவென்று இருக்க முடியவில்லை. வீடு தேடி வந்த தங்கைகளை வரவேற்று வீட்டோடு வைத்துக் கொண்டார்.

"நீ அதற்கு இடம் கொடுக்காதே!" என்று பல முறை தங்கை செல்லம்மாவிடம் கூறியும் அவளும் கணவனோடு சேர்ந்து கொண்டு நாத்திகளை வீட்டோடு வைத்துக் கொண்டது பட்டாமணியத்துக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. அத்துடன் தங்கை வீட்டு வாசற்படி மிதிப்பதில்லை என்று அவர் நிறுத்திக் கொண்டார்.

அண்ணனின் வருகை நின்றதோடு அவனது உதவியும் நின்று போகவே நிலைமையைச் சமாளிக்க முடியாமல் தடுமாறினாள் செல்லம்மாள். செலவு வகையும் அதிகமாகி வரவு இனமும் நின்று விடவே குடும்பத்தைக் காப்பாற்றப் பல கஷ்டங்கள் அனுபவித்தனர் கணவனும் மனைவியும். எத்தனை கஷ்டம் அனுபவித்தாலும் கடமையைக் கைவிடக் கூடாதென் றெண்ணி எப்படியோ சமாளித்து வந்தனர் குடும்ப பாரத்தை.

இத்தனை கஷ்டத்தோடும் ஒரே பிள்ளையான பாலுவைப் பட்டணத்துக்கு அனுப்பிக் கலாசாலையில் படிக்க வைத்திருந்தார்கள். அதே கலாசாலையில் படிப்பதற்காகக் குமுதாவும் வந்திருந்தாள். அவள் பணம் பல தடவை அவன் உபயோகத்துக்கு உதவி இருந்தது. பாலுவும் அதே கலாசாலையில் தான் படிக்கிறான் என்பதை அறிந்திராத குமுதாவின் தந்தை அவள் கேட்கும் போதெல்லாம் பணத்தை அனுப்பி வருவார்.

உறவு முறையோடு கலாசாலை நட்பும் சேர்ந்து கொள்ளவே அவர்கள் அன்பு, காதலாகக் கனிந்தது. படிப்பு முடிந்து விடுமுறையில் ஊருக்குத் திரும்பியபோது இருவரும் கடைசிக் கடைசியாகப் பேசிச் செய்து கொண்ட திட்டத்தின்படி தான் பாலு துணிந்து பெண்கேட்க முன் வந்தான்.

இந்த மட்டும் வந்த இடத்தில் அவமரியாதையாக நாலு வார்த்தைகள் பேசி வழியனுப்பாமல் சுமுகமாகப் பேசி அனுப்பியது மனத்துக்குப் புதியதோர் தெம்பை ஊட்டியிருந்தது. இதுவரை இருந்ததைப் போல் அத்தானின் அன்பு தயங்கித் தயங்கி இல்லாமல் பூரணமாய் நிறைந்து நின்றது குமுதாவின் மனத்தில். இனி எப்படியும் அத்தானின் உரிமைதான் அவள். இன்றோ நாளையோ இரண்டு மாதமோ...இரண்டு வருஷமோ ஆனாலும் அத்தான் வேலை தேடி வரும் வரை காத்திருப்பதென அவள் முடிவுக்கு வந்திருந்தாள்.

★

முகூர்த்தக் கால் நடுவதற்காக ஆட்களை அழைத்து வந்தபோது திகைத்து விழித்தாள் குமுதா. 'அத்தான் பாலு அதற்குள் எப்படித் திரும்பி வந்தார்!' என்றெல்லாம் அறியத் துடித்தது அவள் மனம்.

"யாருக்கப்பா கல்யாணம்......!" என்று குமுதா தன் உள்ளத்து உணர்ச்சியை மறைத்தவாறு கேட்டபோது சிரித்தார் பட்டாமணியம்.

"யாருக்காக இருக்க முடியும்! உனக்குத்தான்! இது தெரியாதா!" என்று அவர் கூறவும் மேலும் திகைத்தாள் குமுதா.

"அத்தான் எப்போது திரும்பி வந்தார்!" என்று கேட்டபோது விழுந்து விழுந்து சிரித்தார் பட்டாமணியம். "இருந்திருந்து அந்தப் பஞ்சைப் பயலுக்கா உன்னைக் கொடுப்பேன்! நீ அப்படியெல்லாம் கவலைப்பட வேண்டிய அவசியமேயில்லை, குமுதா! மாப்பிள்ளை யார், தெரியுமோ! பக்கத்து ஊர் தாசில்தாரின் மகன்! ஒரு எம். ஏ."

அப்பொழுதுதான் விஷயம் புரிந்தது குமுதாவுக்கு. முறைக்காரனை ஊர்ப் பக்கமே தலை காட்ட முடியாதபடி தொலை தூரம் அனுப்பிவிட்டு மாப்பிள்ளை பேசி முடித்து விட்டார் பட்டாமணியம்! தந்தையின் வஞ்சம் அவளுக்கு இப்பொழுதுதான் புரிந்தது.

தந்தையின் கருத்தை அறிந்து கொண்ட குமுதா செய்வதறியாது விழித்தாள். தந்தை நின்ற இடத்திலும் நிற்கப் பிடிக்காதவளாய்த் தன் அறைக்குச் சென்று ஆத்திரம் அடங்கும் மட்டும் விக்கி விக்கி அழுதாள். "தாயார் இருந்தால்" என்கிற எண்ணம் எழவே அப்பொழுதுதான் பெற்றவளைப் பறி கொடுத்தவளைப் போலக் குமுறி அழுதாள். மழையைப் பொழிந்த வானம் நிர்மலமாவது போலக் கண்ணீரை உகுத்ததின் பின்பு மனமும் ஓரளவு தெளிவுபெற்றுப் போயிருந்தது. எப்படியும் இந்த விவாகத்தினின்று விடுபட்டு விட வேண்டுமென்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு தன் வேலைகளைக் கவனிக்கப் புறப்பட்டாள் குமுதா.

★


முகூர்த்த நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் சில தினங்களில் தான் கட்டி முடிந்து விடும். ஒரே பெண்ணின் கல்யாணம். எவ்விதக் குறையும் இருக்கக் கூடாது என்பதற்காகப்

பார்த்துப் பார்த்து ஆடம்பரமாகச் செய்து வந்தார் பட்டாமணியம். கல்யாண ஜவுளிக்காகப் பக்கத்து நகரத்துக்கு வண்டி கட்டிப் போயிருந்த பட்டாமணியம் வண்டி நிறையப் பட்டுத் துணிகளை வாங்கி வந்தார். அவற்றை மகள் பார்த்துத் திருப்திப்பட வேண்டும் என்கிற ஆசையுடன், "குமுதா!" வென உற்சாகமாய் அழைத்துக் கொண்டே வீட்டினுள் சென்றார். ஆனால் அவர் அழைக்கும் குரல் எதிரொலித்ததே தவிரக் குமுதம் வரவேயில்லை. நிமிஷத்துக்கு நிமிஷம் உச்ச ஸ்தாயியில் எழுந்த அவரது குரலைக் கேட்டதன் பின்பே பதுங்கியிருந்த வேலைக்காரர்களெல்லாம் மெல்லத் தலையை நீட்டினர்.

அவர்கள் "குமுதா அம்மாவைக் காணவில்லை!" என்று கூறி முடிக்கவும், துள்ளி எழுந்தார் பட்டாமணியம்.

"குமுதாவைக் காணவில்லையா! எங்கேயடா போய் விட்டாள்!" என்று சீறியெழுந்தார். கடல் பொங்கினால் எப்படி ஊரை நாசப்படுத்துமோ அப்படி இருந்தது அவரது கோபம்.

குமுதா, எங்கு தேடியும் அகப்படவில்லை. "ஓடிப் போனவள்" என்னும் அழியாத அவமானத்தைத் தேடிக் கொடுத்த மகளைக் காணவில்லை என்பதற்காக அவர் வருந்தவில்லை. பரம்பரைக் கௌரவம் அழிந்து விட்டதற்காகவே வருந்தினர். அந்த வருத்தம் நிரபராதிகளான பாலுவின் பெற்றோரின் மீது பாய்ந்தது. அவர்களது போதனையின் பேரில்தான் மகள் புறப்பட்டுப் போயிருக்க வேண்டும் என்கிற முடிவுக்கு வந்தார். இப்பொழுது அவருடைய கோபப் புயல் தங்கை வீட்டை நோக்கி வீசிற்று.




"மரியாதையாக என் பெண் இருக்குமிடத்தைத் தெரிவித்துவிட வேண்டும்; தவறினால் தக்க தண்டனை அடைவீர்கள்" என்று ஆள் மூலம் சொல்லி அனுப்பினர், பட்டாமணியம். விழித்தாள் செல்லம்மாள்; அவள் கணவர் சொக்கலிங்கம் கதறினர். அவர்களுக்குத் தெரிந்தாலல்லவா சொல்ல முடியும்! 'தெரியாது' என்று எத்தனையோ தடவை கூறியும் நம்பாத பட்டாமணியம் முரடர்களை ஏவி அவர்கள் வீட்டைச் சூறையாடினர். மாடு கன்றுகளை அவிழ்த்து விரட்டியும் வைக்கோல் போரின் மீது நெருப்பைக் கொளுத்தியும் படாத பாடு படுத்தினர். ஹிம்சை தாங்க மாட்டாத சொக்கலிங்கம் இன்னும் ஒரு வாரத்திற்குள் எப்படியும் பெண்ணைத் தேடிக் கொண்டு வந்து கொடுத்து விடுவதாகக் கெடு வாங்கிக் கொண்டு பட்டாமணியத்தின் தொந்தரவினின்றும் விடுதலை பெற்றுக் கொண்டார்.

பாலுவின் தந்தை சொக்கலிங்கம் குமுதா இருக்குமிடமே தெரியாதபோது எப்படிக் கொண்டு வந்து சேர்க்க முடியும்! எங்கெல்லாமோ ஓடியாடி அலைந்து பிரயத்தனங்கள் செய்து பார்த்தார்; குமுதாவைப் பற்றி யாதொரு விதமான தகவலும் அகப்படவில்லை.

சாப்பாட்டை முடித்துக் கொண்டு கையலம்பிய குமுதாவுக்கு ஏனோ அன்று மனம் ஒரு நிலையில் இல்லை. அவள் வீட்டை விட்டுப் புறப்பட்டு நாலு நாட்கள் கடந்து விட்டன.

பாலுவிடம் பெண் தருவதாக வாக்குக் கொடுத்து விட்டு அவனைத் தூரதேசம் அனுப்பிய பின்பு, மற்றொருவருக்கு மணமுடித்துவிடக் கருதிய தந்தையின் மீது குமுதாவுக்கு அடங்காத சினம் மூண்டது. அவர் செய்கை நியாயமற்றது என்பதை வாய் வார்த்தையாகப் பல முறை கூறியிருந்தாள். அவர் அதைப் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை. திருமண வேலைகள் தொடர்ந்து நடந்து வரவே, இனி அவரிடமிருந்து தப்ப முடியாதென்று தான் தோன்றியது. "முகூர்த்தசமயம் எங்கேயாவது தலைமறைவாய்ப் போய்விட வேண்டும். குறித்த நேரம் தவறிவிட்டால் மீண்டும் அந்த இடத்தில் சம்பந்தம் செய்து கொள்ளப் பிள்ளை வீட்டார் சம்மதிக்க மாட்டார்கள். 'ஓடிப் போனவள்' என்கிற காரணத்திற்காக எந்தப் பிள்ளை வீட்டாரும் சம்மதிக்க மாட்டார்கள். தந்தைக்கும் புத்தி வந்தாற் போலாகும். தன் எண்ணமும் பூர்த்தியாகும்" என்கிற நோக்கத்துடன் ஒருவருக்கும் தெரியாமல் புறப்பட்டு வந்து சென்னையில் தன்னோடு படித்த மாலதியின் வீட்டில் தங்கியிருந்தாள்.

'திடுதிப்' பென்று வந்து நின்ற தோழியை ஆசையுடன் வரவேற்றுத் தன் வீட்டில் வைத்துக் கொண்டாள் மாலதி. தோழியின் வருகையால் மகிழ்வுற்றிருந்த மாலதிக்கு அடிக்கடி குமுதா

முகத்தைத் தொங்கவிட்டுக் கொள்வது அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

காரணம் கேட்ட போதும் சரியாகச் சொல்லாமல் மழுப்பி விட்டாள். ஒரு வேளை தன் வீட்டில் ஏதேனும் வசதிக் குறைவாக இருக்குமோ என்று நினைத்துக் கேட்டபோதும் அப்படியெல்லாம் ஒன்றுமில்லை என்று கூறி விடுவாள் குமுதா. பின் என்னதாவிருக்கும் என்று யோசித்துப் புரியாமல் மாலதி யோசனையைக் கை விட்டுச் சகஜமாகப் பழகினாள் குமுதாவுடன்.

சாப்பாடு முடிந்து அறைக்கு வந்த மாலதி அன்றையத் தினப் பத்திரிகையைப் பிரித்துப் படித்த போது அதிசயத்தால் ஸ்தம்பித்து விட்டாள். தன்னை ஆச்சர்யத்தில் மூழ்கடித்த அந்தச் செய்தியைத் தோழியிடம் சுட்டிக் காட்டிப் படிக்கச் சொன்னபோது பேயறைந்தவளைப் போல மாறியது குமுதாவின் முகம்.

“ஓடிப்போனவள்” என்ற தலைப்பில் கொட்டை எழுத்தில் பிரசுரமாகியிருந்த அந்தப் பத்தியைப் படித்தாள் குமுதா.

**“கிராமங்கலம் பட்டாமணியத்தின் மகள் முத்தம்மா என்னும் பெண் தன் அத்தை மகனுடன் ஓடி விட்டாள். அவர்கள் இருக்குமிடத்தைப் பையனின் பெற்றோரிடம் கேட்ட போது தமக்குத் தெரியாதென்று கூறினார்கள். அதை நம்பாத பட்டாமணியம் பெண்ணின் தந்தை அவர்களைக் கொடுமைப் படுத்தினார். இந்த விளம்பரத்தைக் கண்ட யாரும் மேற்படி பெண் இருக்குமிடத்தைத் தெரிவிக்க வேண்டுமென்பதாகப் பையனின் பெற்றோர்கள் கேட்டுக் கொள்ளுகிறார்கள்.”**

இந்தச் செய்தியைப் படித்த குமுதா தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள். தன் தோழியின் அயர்வை நீக்கக் கருதிய மாலதி, “என்ன விஷயம், குமுதா! இந்த விளம்பரத்துக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்! என்னிடம் தெரிவிக்கலாமென்றால் சொல்லேன். என்னாலான உதவியைச் செய்ய மாட்டேனா!” என்று கல்லும் கனியும்படி கூறினாள். தோழி மாலதியின் கரத்தைப் பற்றிக் கொண்டு கண்ணீர் உகுத்தாள் குமுதா.

“நான் ஒன்று நினைத்தால் அது வேறு ஒன்றாய் முடிகிறதே, மாலதி! தந்தைக்குப் புத்தி புகட்ட வேண்டுமென்று புறப்பட்டு வரப் போக ஒரு பாவமும் அறியாத என் அத்தை குடும்பம் அவதிக்குள்ளாக நேர்ந்ததே, இந்தக் கொடுமைக்கு என்னடி செய்வேன்!” என்று கலங்கினாள் குமுதா.

“முத்தம்மா என்பது...!”

“கிராமத்தில் என் பெயர் அது! கலாசாலையில் குமுதா! கிராமத்தில் என் பெயர் முத்தம்மா!”

மாலதிக்கு அவளுடைய கிராமப் பெயரைக் கேட்டுச் சிரிப்புத்தான் வந்தது. ஆனால் தோழியின் துயரத்தின் போது சிரிப்பது அழகல்ல என்று கருதி அடக்கிக் கொண்டாள்.

“நான் என்ன செய்கிறது, மாலதி!” என்று கலக்கத்துடன் கேட்டாள் குமுதா.

“செய்வதென்ன! நேரே உன் தந்தையிடம் போ. உன் அத்தான் உன்னை இழுத்துக்கொண்டு ஓடவில்லை என்பதை அவருக்கு நிரூபித்து விடு. அதன் மூலமாவது உன் அத்தை வீட்டாருக்குச் செய்து வரும் தந்தையின் கொடுமைகள் அடங்கட்டும்” என்று யோசனை கூறி, மாலதி அவளை அனுப்பி வைத்தாள். குமுதா சரியென்று கூறி ஊருக்குப் புறப்பட்டுப் போனாள்.

மகள் வண்டியை விட்டிறங்கிய போது பெற்ற பாசம் ஓடிப்போய் அணைத்துக் கொள்ளத் தூண்டியதானாலும் பட்டா மணியத்துக்குக் கௌரவம் வந்து அதற்குக் குறுக்கே திரையிட்டது. ‘ஓடிப்போனவளை’ வீட்டிற்குள் நுழைய அனுமதி கொடுப்பதா, வேண்டாமா என்று அன்புக்கும் அந்தஸ்துக்கும் இடையே அவருக்குள் நடந்த போராட்டம் முடிவு காணா முன்பாகவே “அப்பா!” என்று ஓடிவந்து தந்தையின் காலைக் கட்டிக் கொண்டாள் குமுதா.

சிலையாகச் சமைந்து நின்ற தந்தை எதுவும் கேட்கு முன்னதாகவே தானே முந்திக் கொள்ளக் கருதிய குமுதா பேசத் தொடங்கினாள். “நீங்கள் பக்கத்து நகரத்துக்குச் சென்ற சமயம் என்னுடன் படித்த தோழி மாலதி இங்கு வந்திருந்தாள். சென்னைக்கு அழைத்துப் போய் நாகரிக உடைகள் தைத்துத் தருவதாகத் தன்னுடன் வரும்படி அழைத்தாள். என்னைத் தவறாகக் கருத மாட்டீர்களென்று நினைத்து இரண்டு நாளில் திரும்பி விடலாமென்று நினைத்துப் போனேன். போன இடத்தில் உடனே திரும்ப முடியாமல் பின்னும் இரண்டு நாள் தாமதமாகி விட்டது. அதற்குள் இல்லாத புரளியைக் கிளப்பி விட்டுப் பத்திரிகையில் என் பெயரைக் களங்கப் படுத்தி விட்டீர்களே, அப்பா! பெண்ணின் வாழ்வை வளம் பெறச் செய்ய வேண்டிய தந்தையே குழிதோண்டிப் புதைத்து விட்டபோது இனி எனக்கு வாழ்வேது!” என்று கூறிய குமுதா குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

அந்த வேளையில் தந்தி ஒன்று வந்தது. “பத்திரிகைச் செய்தி கண்டோம், அவமானம் போதும்! உங்கள் சம்பந்தம் வேண்டாம் — சம்பந்தி வீட்டார்!” என்றதைப் படித்து இடி விழுந்தவராக உட்கார்ந்து விட்டார் பட்டாமணியம்.

மகளின் கண்ணீரைக் கண்டு மனம் கலங்கிய தந்தை, தன்னைச் சமாளித்துக் கொண்டு மகளைத் தேற்றினார். “உன்னை வாழவைக்க வேண்டிய பொறுப்பு என்னைச் சார்ந்தது. உனக்கு ஏன் அதைப் பற்றிய கவலை! கண்ணீரைத் துடைத்துக் கொள்” என்று கூறியபோது மேலும் விசித்தாள் குமுதா.

“கட்டுப்பாடு நிறைந்த பட்டிக்காட்டில் வாழும் என்னை இனி துணிந்து யார் மாலையிட வரப் போகிறார்கள்! ஓடிப்போனவள் என்கிற அவமானத்துக்குப் பின் உயிர் வாழ்வதைவிடச் சாவதே மேல்” என்று உள்ளமுருகக் கூறினாள்.

“இப்பொழுதும் ஒன்றும் குடி முழுகிவிடவில்லையம்மா. இனி ஊரார் உன்னைப் பெண் கொள்ள மறுப்பார்கள் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் உன் அத்தான் பாலுவைக் கூடவா மறந்து விட்டாய்!......”

“அவருக்குக் கொடுக்கச் சம்மதிப்பீர்களா! ஆமாம்! சம்மதித்தாலும் அவர் எங்கிருக்கிறார் என்பதே நமக்குத் தெரியாதே!”

“பட்டாமணியம் முயன்று ஆகாத காரியமும் ஒன்று உண்டா!” என்று வீறுப்புடன் தன் தந்தை கூறியதைக் கேட்டதும் அவள் உள்ளம் பெருமிதத்தால் விம்மித் தணிந்தது.

அந்த மாதத்திலேயே அமைந்த முகூர்த்தத்தில் குமுதா-பாலுவின் திருமணத்தை வெகு சிறப்பாக நடத்தி விடுவதென்று பட்டா மணியம் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்.



இந்த நவீன சிகிச்சை

# ஜலதோஷத்தை 2 விதங்களில் எதிர்த்துப் போராடுகிறது.

இப்பொழுது நீங்கள் ஜலதோஷத்தை முன்னைக்காட்டிலும் அதிக சீக்கிரத்தில் நிறுத்தலாம். படுக்கப் போகும் சமயத்தில் விக்ஸ் வேபோரப்பை உங்கள் குழந்தையின் மார்பின் மேலும், தொண்டையின் மேலும், முதுகின் மேலும், தடவித் தேயுங்கள். இந்த நவீன ஔஷதம் பல தேசங்களில் பிரக்யாதி பெற்றுள்ளது. ஏனெனில் அது ஜலதோஷத்தை இரண்டு விதங்களில் எதிர்த்துப் போராடுகிறது.



1. அதன் குணப்படுத்தும் உஷ்ண மார்பிலுள்ள வலியை அகற்றுகிறது.

விக்ஸ் வேபோரப்பின் சக்திவாய்ந்த மருந்துச் சத்து சருமத்தின் வழியாக உட்சென்று மார்பிலுள்ள சளியை வெளியேற்றுகிறது. மேலும், அதே சமயத்தில்...



2. அதன் நல்ல வாசனை சுவாசக் குழாய்களைச் சுத்தம் செய்கிறது.

நல்ல வாசனையுள்ள விக்ஸ் வேபோரப் ஜலதோஷத்துக்கு மிகவும் சக்திவாய்ந்த மருந்தாகும். உங்கள் குழந்தை இந்த வாசனையை இரவு முழுவதும் சுவாசிக்கிறது. அடைசலாயிருந்த அவனுடைய மூக்கு சுத்தமாகிறது. தொண்டைப் புண்ணுக்கு ஆறுதலளிக்கப்படுகிறது. இருமல் நிறுத்தப்படுகிறது. அநேகமாக மறுநாள் காலையில் ஜலதோஷத்தின் கொடுமை மறைந்துவிடுகிறது.

தடவித் தேயுங்கள்...

**விக்ஸ் வேபோரப்**




"விக்ஸ்" மற்றும் "வேபோரப்" டிரேட் மார்க்குகள்.



# உங்கள் நரம்புகள்!

வலுவுள்ளதாக உறுதியுடன் இருக்க வேண்டும் — அதுவும் ஓய்வில்லாத உழைப்பும் ஒழியாத கவலையும் நிறைந்த தற்கால வாழ்க்கையில்

# அஸ்வான்

நீண்ட காலமாய் மனோ பலமும் தேக திடனும் வியர்த்தமாகியிருந்தாலும் ஈடு கொடுத்து போஷாக்கு அளிக்கக் கூடிய ஒரு உயர்ந்த டானிக்

இன்றே ஒரு பாட்டில் வாங்குங்கள். எப்போதும் கையிருப்பாக வைத்திருங்கள்




சிறியோர்

•

முதியோர்

•

நோயாளிகள்

யாவருக்கும் உகந்தது

## பெங்கால் கெமிகல்

கல்கத்தா : பம்பாய் : கான்பூர்

ஏஜண்டுகள் :

என். தேசாய் கௌண்டர் & கோ.
41, பந்தர் தெரு - சென்னை

# தேன்மொழியாள்

மாலை வேளை. மேல் வானத்தில் சூரியன் ஜோதிப் பிரகாசமாய் மினுக்கி மறைந்து கொண்டிருந்தது. அதன் தங்க மயமான ஆயிரமாயிரம் கதிர்கள் வான வெளியின் நீல நிறத்தில் பட்டு எத்தனை எத்தனையோ வண்ண ஜாலங்கள் புரிந்து கொண்டிருந்தன. நீல வானத்தின் கீழே அமைதியாக இருந்த சித்தமல்லி கிராமத்தின் தாமரைக் குளத்தை நோக்கிக் காற்று மெதுவாக வீசிக் கொண்டிருந்தது. ஊர்ப் புறத்திலிருந்த பூந் தோட்டத்தின் மலர்களின் நறுமணம் காற்றிலே கலந்து வந்தது.

தாமரைக் குளத்தங் கரையில் இருந்த அரச மரத்தின் இலைகள் சூரியனின் பொன் ஒளியால் தங்கத் தகடுகளாயின. காற்றில் அசையும் அவை 'பள பள' வென்று மின்னின காட்சி கண்ணைப் பறித்தது. அப்போது ஏற்பட்ட 'சல சல' வென்ற சத்தம் எங்கிருந்தோ இளம் பெண்கள் 'கல கல' வென்று கை கொட்டிச் சிரிப்பது போலிருந்தது.

தாமரைக் குளத்தை ஒட்டினாற் போலிருந்த தென்னந் தோட்டத்தில் ஒரு வைக்கோற் போர் இருந்தது. அதற்குச் சற்றுத் தூரத்தில் இருந்த கிணற்றுக்கு அருகில் ஒரு மாட்டுக் கொட்டிலும், மாடுகளுக்குத் தீனி வைக்கும் தொட்டிகளும் கிடந்தன. கொட்டகைக்குச் சற்று அப்பால் கட்டப்பட்டிருந்த பசு மாடு யாரையோ எதிர் பார்ப்பது போலக் கொட்டகைக்கு எதிரே இருந்த வழியை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தது. சற்று நேரத்துக்கு ஒருமுறை "அ...ம்...மா! அ...ம்...மா!" என்று தலையை ஆட்டிக் கொண்டு பரிதாபமாகக் கத்தியது.

புதிய வைக்கோலின் நறுமணம் கமழும் வைக்கோற் போர்மீது இனியன் படுத்துக் கிடந்தான்.

அவன் சித்தமல்லி பண்ணையாரின் மகன். தாமரைக் குளத்துக்கும் அந்தத் தோட்டத்துக்கும் ஏன், அந்த ஊருக்கே சொந்தக்காரன். இனியன் ஒருதரம் எழுந்து கத்துகின்ற பசுவைப் பார்த்தான். அது பார்த்த வழியை அளவற்ற ஆசையோடு பார்த்தான். வாய்க்குள்ளாகவே ஏதோ முணுமுணுத்தான். உழைத்து உரமேறியிருந்த தன் கைகளைத் தலைக்கு அடியில் வைத்துக் கொண்டு மல்லாந்து படுத்தான். மௌனமாக, அமைதியாக, ஏங்கிய முகத்துடன் படுத்துக் கிடந்தான். அவன் அழகிய கண்கள் இமைகளைத் திறந்து கொண்டு யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. தென்னந் தோட்டத்தை ஒட்டித் தூரத்தில் தெரியும் வீட்டுப் பக்கமாக, கண்களை இமைக்காமல் பார்த்தான். வீட்டின் கொல்லைப் புறத்தின் ஓரமாகத் தோட்டத்துக்கு வரும் வழியில் யாரோ வருவதுபோல் தெரிந்தது. இனியன் மகிழ்ச்சி பொங்கும் உள்ளத்தோடு அந்த உருவத்தைக் கூர்ந்து பார்த்தான்.

நீண்ட நேரமாகக் கண்களை அகலத் திறந்திருந்ததால் ஏற்பட்ட சோர்வை நீக்கக் கண்களை ஒருமுறை சுருக்கி விழித்தான். மன நிறைவோடு, அவன் புன்னகை புரிந்தான். இதோ தேன்மொழி வந்து கொண்டிருக்கிறாள். அவள் நேரே தாமரைக் குளத்துக்குப் போவாள். ஒரு குடம் தண்ணீரைக் கொண்டு வந்து மாட்டுத் தொட்டியில் ஊற்றுவாள். தவிட்டை அள்ளிப் போடுவாள். பின்னுக்குத் தண்ணீரையும் கொட்டிப் பசுவுக்குத் தண்ணீர் காட்டுவாள். உடனே இனியனைத் தேடி ஓடிவருவாள்; சிரிப்பாள். அவளது இதயம் ஆசையோடு துடிக்கும்; மகிழ்ச்சியால் அவள் முகம் சிவந்து மலரும். தன் உருண்டு திரண்ட மிருதுவான கரங்களால் இனியனின் கையைப் பற்றுவாள். நாழியாகி விட்டது என்பதற்கு ஏதாவது சாக்குச் சொல்லுவாள். தேனினும் இனிய தீங்குரலை இசைத்துப் பாடுவாள். அதைக் கேட்டு கானப் பறவைகள் கூடச் சிறகடித்து மகிழும். இனியனும் சேர்ந்து பாடுவான். பாடிக்கொண்டே இருவருமாகச் சேர்ந்து தாமரைக் குளத்துப் படித் துறைக்குப் போவார்கள். அருமையாகச் செய்த பலகாரத்தைத் தேன்மொழி இனியனுக்கு அன்போடு கொடுப்பாள். 'கல கல' வென்று சிரித்துக் கொண்டு பலகாரத்தை இருவருமாகச் சாப்பிடுவார்கள். தாமரைக் குளத்தின் கரைக்குக் காவலாக இருப்பது போல ஓங்கி வளர்ந்து நிற்கும் அரச மரத்துக்குப் போவார்கள். சின்னஞ் சிறு மேடை போல நீண்டு கிடக்கும் அதன் வேர்மீது நெருக்கமாக உட்கார்ந்து பேசுவார்கள். பிறகு பிரிய முடியாமல் பிரிந்து போவார்கள். இப்படித்தான் சென்ற முப்பது நாட்களுக்கு மேலாக ஒவ்வொரு நாள் மாலை வேளையிலும் நடப்பது வழக்கம்.

அன்று கூட்டை நாடிவரும் பறவைகள்கூட கல கலப்பாக இல்லை. ஏதோ சோர்ந்து காணப் பட்டன. வரும்போதே, ஒன்றுக் கொன்று சண்டையிட்டுக் கொண்டு வந்தன. வழக்கமாக அவைகள் பாடிக் கொண்டே பறந்து வரும் உற்சாகத்தைத் துறந்து விட்டன.

வழியில் தேன்மொழியைத் தவிர, வேறு யாரோ ஒரு ஆசாமிகூட வருவதாக இனியனுக்குத் தோன்றியது. பழையபடியும் அவள் அத்தை மகன் வந்து விட்டானோ! தேன்மொழியின் களங்கமற்ற மனத்தில் ஏதாவது கசப்பை வளர்த்து விடுவானோ! இனியன் ஒருதரம் தான்



படுத்திருந்த இடத்திலிருந்து எழுந்தான். கையி னால் கண்ணுக்கு நிழல் தேடிக்கொண்டு தேன் மொழி வரும் வழியை ஆர்வத்தோடு கூர்ந்து பார்த்தான். அவளுடன் தொடர்ந்து வரும் ஆசாமி யார் என்று இனம் கண்டு கொள்ள முயன்றான். தேன்மொழி இடுப்பில் குடத்தை வைத்துக் கொண்டு வந்தாள். இனியன் அதைப் பார்த்தான். அவளுடன் வரும் மனிதரை மறந்து விட்டான். அந்தக் குடத்தினால் அவள் இடுப்புக்கு அழகா! அல்லது அவள் இடுப்பினால் அந்தச் செப்புக் குடத்துக்கு அழகா! என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டு விட்டான்.

தேன்மொழியும் அவளுடன் வந்த ஆசாமியும் சேர்ந்து சிரித்த சத்தம் இனியனைத் தன் நிலையை உணரும்படி செய்தது. அந்த மனிதன் தோட் டத்தை நோக்கி முகத்தைத் திருப்பிப் பார்த்தான்.

இனியனுக்கு அந்த முகம் பழக்கப்பட்ட முக மாகவே தோன்றியது. ஆள் அடையாளம் தெரிந்து கொள்ள முடியவில்லை. இருந்தாலும் அந்த ஆசாமி தேன்மொழியின் அத்தை மகன் இல்லை; அத்துடன் வயது சென்ற மனிதராகவும் இருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டு ஒரு வாறு மன அமைதி அடைந்தான்.

தோட்டத்தின் வேலிப்படலைத் திறந்துகொண்டு தேன்மொழியும் அந்தக் கிழவரும் உள்ளே வந்த னர். இனியனுக்கு இப்பொழுது அந்தக் கிழவர் யார் என்று தெரிந்து விட்டது. தேன்மொழியின் தாத்தா. கொஞ்ச நாட்களாக அவர் ஊரிலில்லை. இன்றுதான் வந்திருக்கிறார் போலிருக்கிறது.

"வணக்கம் தாத்தா, வாருங்கள்!" என்று வரவேற்றான் இனியன்.

"வருகிறேன் தம்பி! உங்களைத்தான் பார்க்க வந்தேன். நீங்கள் இங்கு இருப்பதாகத் தேன் மொழி சொன்னாள்" என்றார் கிழவர்.

"உட்காருங்கள் தாத்தா."

"ஆகட்டும் தம்பி" என்றார் பெரியவர்.

இருவரும் அந்த வைக்கோல் போருக்கு அடி யில் மெத்தென்ற வைக்கோலின்மீது அமர்ந்தனர். கிழவர் ஒருதரம் தொண்டையைக் கனைத்து விட்டுக் கொண்டு பேச ஆரம்பித்தார். "என் மகன் வயிற்றுப் பேரன் ஒருவன் பட்டணத் திலே படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறான். அவனுக்கு ஏதாவது......" என்று இழுத்தார். தம்முடைய தளர்ந்து போன கன்னத்தைத் தேய்த்துக் கொண்டே இனியனைப் பார்த்து மனோ கரமான புன்னகை புரிந்தார்.

"நான் என்ன செய்ய வேணும், தாத்தா! கிராமத்தில் இருக்கும் என்னால் என்ன செய்ய முடியும்!"

என்று சொல்லிக் கொண்டே இனியன் தேன் மொழியைப் பார்க்கத் துடித்தான். பகவுக்குத் தண்ணீர் காட்டிக் கொண்டிருந்த அவள் பக்கம் திரும்பினான். அன்பு நிறைந்த சிரிப்பு அவள் இதழ்க் கோணத்தில் துள்ளி விளையாடியது. அந்த மாதிரிப் புன்னகை புரிவதை அவன் இதற்குமுன் பார்த்ததே இல்லை. மேலும் அவளது உடம்பு, உருண்டு திரண்டு புதுமையும் பொலி வும் நிறைந்து ஏதோ அபூர்வமாகத் தோன்றியது. அவள் தன் வெண் பற்கள் தெரிய மீண்டும் சிரித் தாள். கிழவர் அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்துப் புன்னகை புரிந்தார்.

"பத்தாவது வரையில் படித்திருக்கிறான் பையன். சர்க்காரிலே ஏதாவது வேலை கொடுக்க நீங்கள் யாருக்காவது சிபாரிசு செய்ய வேணும். படித்த பிள்ளைகளின் வேலையில்லாத் திண்டாட் டம் அதிகமாகி விட்டது" என்றார் கிழவர்.

"தாத்தா! நான் சொல்லுகிறேனே என்று வருத்தப்படாதீர்கள். படித்தவர்களுக்கு மட்டுந் தானா வேலையில்லை. படித்தவர்களை விட அதிக மாகப் படிக்காதவர்கள்தான் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். படிக்காத அந்த ஏழை மக்களுக்காக யாரும் கஷ்டப்படுவதாகவே தெரிய வில்லை. படித்தவர்கள்தான் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்கிறார்கள்."

"அதென்னவோ, உண்மைதான் தம்பி! படித்த வர்கள் என்ன, நூற்றுக்குப் பத்துப் பேர் கூட இருக்க மாட்டார்கள். படிக்காதவர்கள்தான் அதிகம். உங்கள் மாதிரி யார் படிக்காத ஏழை மக்களை நினைத்துப் பார்க்கிறார்கள். படித்தவர் களுக்கு வேலையில்லை என்றுதான் சொல்லு




கிறார்கள். என் பேரனைக் கூட 'சர்க்கார் வேலை என்னத்துக்கு, எஜமான் பண்ணையிலேயே சேர்த்து விடுகிறேன் வா' என்று சொன்னேன். அவன் என்னமோ 'சர்க்காரில் வேலை கிடைத்தால்தான் நிம்மதியாக இருக்கலாம்' என்கிறான். அப்படி என்ன சர்க்கார் வேலையோ தெரியவில்லை!'' என்றார் கிழவர்.

''உங்கள் பேரன் சொல்வதும் உண்மைதான் தாத்தா! சர்க்காரில் வேலை நிச்சயம் ஆகி விட்டால் பிறகு கவலைப்பட வேண்டியதே இல்லை. வருஷத்திலே நூறு நாளைக்கு மேல் விடுமுறை கிடைக்கும். உழைத்துப் பாடுபட வேண்டும் என்ற அவசியமில்லை. நல்ல படியாக வேலை செய்யவில்லையென்று யாரும் வேலையை விட்டுத் தள்ள முடியாது. நிம்மதியாக இருக்கலாம். கடைசிக் காலத்தில் 'ஒய்வு ஊதியம்' வேறு கிடைக்கும். இதெல்லாம் பண்ணையிலே எதிர் பார்க்க முடியுமா! இங்கே உண்மையாக உழைத்துப் பாடுபட வேணுமே!''

''வருஷத்தில் நூறு நாளைக்கு மேலே விடுமுறையா! ஆச்சரியமாகத்தான் இருக்கிறது! நம் நாடு உருப்பட வேணும் என்றால் எல்லாரும் உழைத்துப் பாடு படவேணும். யாரும் எந்த வேலையும் செய்ய முன்வர வேணும். 'சர்க்கார் உத்தியோகம், சர்க்கார் உத்தியோகம்' என்று எல்லாரும் அலையும்படி அந்த உத்தியோகத்தில் மட்டும் மக்களுக்கு மோகம் இருக்கும்படி விடக் கூடாது. சர்க்கார் உத்தியோகத்திலும் உண்மையோடு உழைக்காதவர்கள் வேலையிலே நீடிக்க முடியாதபடி செய்ய வேணும். அப்படிச் செய்து விட்டாலே இந்த 'வேலையில்லை, வேலையில்லை!' என்ற கூச்சல் கொஞ்சம் குறைந்து விடும். எல்லாரும் எல்லா வேலையும் செய்ய முன் வருவார்கள்.''

''நீங்கள் சொல்லுவது என்னவோ நூற்றுக்கு நூறு உண்மை. ஆனால் படித்தவர்களும் சர்க்கார் உத்தியோகங்களில் இருப்பவர்களும் தங்களுடனேயே சமுதாயம் சரியாகி விடுகிறதாக நினைத்துக்கொண்டிருக்கிறார்களே!''

''அதெல்லாம் இந்தப் புதிய கல்வித் திட்டத்திலே அடிபட்டு விடும் தம்பி!''

''தாத்தா! நீங்கள் என்ன பெரிய அரசியல் வாதியாக மாறி விட்டீர்களே!''

''அதெல்லாம் ஒன்றுமில்லை, தம்பி! ஏதோ நீங்கள் சொன்னதற்கு என் அனுபவத்திலிருந்து பதில் சொன்னேன். அந்தக் காலத்தில் வெள்ளைக்காரன் நம்மை ஆண்டான். அவன் தனக்குச் சாதகமாக எல்லாரும் வேலை செய்யவேணுமே என்று ஏராளமான விடுமுறைகளையும், வேண்டிய சலுகைகளையும் செய்து வைத்தான். இப்பொழுது நம் சுதந்தர சர்க்காரிலே அப்படி எல்லாம் நடந்தால் முடியுமா! விடுமுறையைக் குறைத்து உழைக்கும் திறனை அதிகரித்தால்தான் நாடு முன்னேறும். இப்பொழுது என்ன, வேலைக்குத் திறமையான ஆளா கிடைக்க மாட்டார்கள்! அது கிடக்கட்டும் தம்பி! என் பேரனை உங்களிடம் அனுப்புகிறேன். 'புத்தியை கித்தியை'ச் சொல்லிக் கிராமத்திலேயே விவசாயம் செய்யச் சொல்லுங்க!'' என்று சொல்லி விட்டுக் கிழவர் எழுந்திருந்தார்.

''கிளம்பி விட்டீர்களா, தாத்தா!''

''ஆமாம் தம்பி போய் விட்டு வருகிறேன்.''

''தாத்தா!'' என்று ஏதோ சொல்லுவதற்கு வாயெடுத்தாள் தேன்மொழி.

இனியன் குறுக்கிட்டான்: ''உங்கள் பேரனைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை, நான் கவனித்துக் கொள்கிறேன் தாத்தா'' என்றான்.



கிழவர் ஒருதரம் இருவரையும் பார்த்துப் புன்னகை புரிந்தார். அங்கிருந்து கிளம்பி விட்டார். சற்றுத் தூரம் சென்று நின்றார். "தேன்மொழி! சீக்கிரம் வீட்டுக்கு வந்து விடம்மா" என்றார்.

"ஆகட்டும் தாத்தா!" என்றாள் தேன்மொழி.

தோட்டத்தின் வேலிப் படலைத் திறந்து கொண்டு கிழவர் போய் விட்டார்.

கிழவர் பண்ணையார் குடும்பத்துடன் பரம்பரையாகத் தொடர்பு கொண்டவர். மூன்று நான்கு தலைமுறைகளாகப் பண்ணையார் வீட்டு நிலங்களைப் பராமரித்து, அவர்கள் ஆதரவால் முன்னுக்கு வந்தவர். இன்று நல்ல நிலைமையில் அவர்கள் குடும்பம் இருந்தது. இருந்தாலும் பழைய அன்பையும் விசுவாசத்தையும் மறக்காமல் பண்ணையார் குடும்பத்தாரிடம் பழகி வருகிறார். அவருடைய மகன் மேற்பார்வையில்தான் பண்ணையார் வீட்டு அந்தத் தென்னந் தோட்டமும், பசுமாடுகளும் இருந்து வருகின்றன.


தேன்மொழிக்கு ஒரே ஒரு சிவப்புப் பசுமீது மட்டும் அலாதிப் பிரியம். அவள் அதைச் சின்னஞ்சிறு கன்றுக் குட்டியாக இருந்த போதிலிருந்தே செல்லமாக வளர்த்து வந்தாள். அந்தப் பசுவுக்குத் தீனி போடுவது, தண்ணீர் காட்டுவது எல்லாம் அவளேதான் செய்ய வேணும். அவளுடைய அந்த ஆசையை அவள் பெற்றோர்கள் மேலும் வளர விட்டனர். மாலை வேளையில் அந்தப் பசுவோடு நீண்ட நேரம் இருந்து விட்டு வருவதையும் அவர்கள் தடுப்பதில்லை. பொதுவாகக் கிராமத்து விவசாய குடும்பத்துப் பெண்களே அப்படித்தான் இருப்பார்கள்.

தேன்மொழியும் இனியனும் சிறுவயதிலிருந்தே ஒன்றாக வளர்ந்தவர்கள். இனியன் மட்டும் பட்டணத்திலேயே படித்து வந்ததால் விடுமுறையின் போது மட்டும் கிராமத்துக்கு வருவான். மாலை வேளைகளில் தேன்மொழியுடன் தென்னந் தோட்டத்தில் ஓடி ஆடி விளையாடுவான்.

இப்படியாக வளர்ந்த அவர்கள் அன்பு நடுவில் இனியன் இரண்டு ஆண்டுகள் கிராமத்துக்கே வர முடியாமல் போகவே சற்றுத் தடைப்பட்டுப் போயிருந்தது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின் வந்த இனியன் தேன்மொழியைப் பார்த்து ஒரு கணம் திகைத்துப் போய் விட்டான்.

முன் தான் விளையாடிய சிறுமி அல்ல இவள். உலகம் தெரிந்த பெண் என்பதை அறிந்த இனியன் சற்றுத் தூரத்திலேயே தான் இருந்தான். அவள் அருமைத் தாத்தா இனியனைக் கேலி செய்தார். "தேன்மொழி உங்கள் வீட்டு உப்பைத் தின்று வளர்ந்த பெண் அவளைக்கண்டு இப்படி வெட்கப் படலாமா! இந்தக் காலத்து ஆண் பிள்ளைகள் எல்லாம் பெண் பிள்ளைகளாக மாறிவிட்டார்கள். காலம் மாறி விட்டது" என்றார்.





★ ★ ★ ஜனவரி 17-ம் திருவல்லிக்கேணி தமிழ் இளைஞர் முன்னணியார் தமிழர் திருநாளைக் கோலாகலமாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருந்தார்கள். ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி கோயில் சந்நிதியில் பதினாயிரத்துக்கு மேற்பட்ட ஜனங்கள் கூடியிருந்த மாபெரும் கூட்டத்தில் ஸ்ரீ சிவஞான கிராமணியார், ஸ்ரீ சி. சுப்ரமணியம், ராஜாஜி ஆகியவர்கள் பழந் தமிழ்ப் பண்பாட்டைக் குறித்தும் வருங்கால முன்னேற்றத்தைக் குறித்தும் அருமையான சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். ★ ★ ★

இப்படி அவர் சொல்லும்போது தேன்மொழி 'கலீ' ரென்று சிரித்தாள். இனியனும் பதிலுக்குச் சிரித்தான். இப்படியாகக் கிழவரின் துணையில் இனியனும் தேன்மொழியும் மீண்டும் நெருங்கிப் பழக ஆரம்பித்தார்கள்.

கிழவர் தோட்டத்தை விட்டுச் சென்ற பிறகு, "அடாடா! இவருக்குத்தான் என்ன வெள்ளை மனசு! என்மீதும் தேன்மொழியிடமும் எவ்வளவு அன்பு. நாங்கள் இரண்டு பேரும் சிரித்து மகிழ்வதைப் பார்த்து எப்படியெல்லாம் சந்தோஷப்படுகிறார்!" என்று நினைத்தான்.

தன் அருகில் தேன்மொழி வந்து நிற்பதைப் பார்த்தான். அன்று என்னமோ வழக்கம் போல உள்ள உற்சாகம் அவனிடம் இல்லை. தேன்மொழி அவன் முகத்தைப் பார்த்தாள். அது மலர்ச்சி இன்றி இருந்த கோலத்தைப் பார்த்தாள். அவள் உள்ளமும் சோர்ந்து விட்டது.

இனியன் சட்டென்று திரும்பி அவளை முகத்துக்கு முகம் நேராகப் பார்த்தான். அவள் கருத்து உருண்ட கண்கள், வாட்டமுற்ற உதடுகள், அது சோகமாக இருந்த கோலம் எல்லாவற்றையும் பார்த்தான். அவனுக்கு மேலும் சோர்வு உண்டாகி விட்டது.

"நீ ஏன் ஒருமாதிரியாக இருக்கிறாய்!" என்று முகத்தில் சிரிப்பைச் சிரமத்துடன் வரவழைத்துக் கொண்டு கேட்டான்.

"நீங்களுந்தான் வழக்கத்துக்கு மாறாக இன்றைக்கு உற்சாகமில்லாமல் இருக்கிறீர்கள்!"

அவன் ஒன்றும் பதில் சொல்லாமல் நடந்தான். தேன்மொழியும் அவனுடன் சென்றாள். அவர்கள் இருவரும் தாமரைக் குளத்துக்குச் செல்லும் பாதையிலே நடந்தார்கள். இனியன் ஏதோ சிந்தனையில் ஈடுபட்டவனாய் மௌனமாக நடந்து வந்தான். தேன்மொழியும் மௌனமாகத்தான் வந்து கொண்டிருந்தாள்.

மறு நாள் இனியன் சித்தமல்லியை விட்டுப் புறப்பட்டு விடவேண்டும். அவன் கல்லூரி திறந்து விடுகின்றனர். நாளைக்கே அவன் சென்னைக்குப் போய்விட வேண்டும். தேன்மொழியை விட்டுப் பிரிய முடியவில்லை என்றால் முடியுமா! மாசக் கணக்காக ஆனாலும் ஆகிவிடும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ள.

இருவரும் இதையேதான் சிந்தித்துக் கொண்டிருந்தனர். ஒருவர் மனத்திலிருந்தது மற்றொருவருக்கு வார்த்தைகளால் சொல்லாமலே தெரிந்தது.

இனியன் வானத்தை அண்ணாந்து பார்த்தான். மேகங்கள் பலப் பல நிறங்களில் காட்சி அளித்தன. மஞ்சளும் சிவப்பும் கலந்த இளம் பச்சை, சாம்பல் கலந்த ஊதா நிறங்களோடு கூடிய மேகங்களும், ஏதோ சிந்தனையில் செல்லும் பாவனையில் வெள்ளை மேகக் கூட்டங்களும் தெரிந்தன. அவைகள் மெதுவாக அசைந்து கொண்டு ஒன்றை ஒன்று கட்டிப் புரண்டு கொண்டு ஒன்றின் நிறத்தை மற்றொன்று பெற்றுக்கொண்டு மனத்துக்கு இன்பமூட்டும் வண்ணம் விளையாடிக் கொண்டிருந்தன. உயிர் இல்லாத அந்த மேகக் கூட்டங்களின் மெல்லிய அசைவிலே ஒரு பெருந்தன்மை இருந்தது. நீல வானத்துக்கு அடியிலே காணப்பட்ட அந்த எண்ணற்ற மேகக் கூட்டங்கள் திடீரென்று காற்றில் கலந்தது. அடுத்த கணம் மனித உருவில் காட்சி அளித்தது. அது அசைந்து செல்லும்போது தேன்மொழி சத்தமில்லாமல் நடந்து வருவது போலவே இருந்தது. இனியன் திரும்பிப் பார்த்தான். தேன்மொழியும் மௌனமாகப் பார்த்தாள்.

இருவரும் ஒரே சமயத்தில் சிரித்தனர். தாமரைக் குளத்தின் அரசமரத்து வேரில் அமர்ந்தனர்.

"தாமரைக் குளம் அழகாக இருக்கிறது இல்லையா!" என்றாள் தேன்மொழி.

தாமரைக் குளமும், அதைச் சுற்றி யுள்ள வயல்கள் சூழ்ந்த இயற்கைக் காட்சியும் அவன் உடம்பிலே எப்போதும் புத்துணர்ச்சியை உண்டாக்கி அவன் உள்ளத்தை நிரப்பும். இத்தகைய இயற்கைக் காட்சியும் இளைய தென்றலும் கலந்த சூழ்நிலையிலேதான் அவன் தேன்மொழியுடன் உட்கார்ந்து பலப் பல கதைகள் பேசியிருக்கிறான். அவன் வாழ்வின் இன்பமே தாமரைக் குளமாக அவன் நினைத்தான்.




"க்ருஷன்" உபயோகித்ததனால் நான் அடைந்துள்ள அத்யாச்சரியமான பலன்களை நான் அவசியம் உங்களுக்குச் சொல்ல வேண்டும். வருஷக் கணக்காகக் கீல் வாதத்தினால் முடங்கிக் கிடந்தேன். பல தரப்பட்ட சிகிச்சைகள் செய்தும் நிரந்தரமான பலன் ஒன்றும் ஏற்படாது போயிற்று. ஆனால் மூன்று மாதங்களுக்குத் தவறாமல் ஒழுங்காக "க்ருஷன்" உட்கொண்ட பின்னர் அதன் உண்மையான குணங்களை உணர்வதுடன் ஏறக்குறைய எனது வியாதிக்கு முன்னிருந்த தன்மையையும் பெற்றிருக்கிறேன்.—A. R."

குடல்கள் நன்கு இயங்கி கழிவு பதார்த்தங்களைச் சரிவர வெளித்தள்ளத் தவறுவதால் விஷத் தன்மை வாய்ந்த அசுத்தங்கள் உள்ளேயே தங்கிவிடுகின்றன. இவைகளே கீல்வாய்வுக்குச் சாதாரணமான காரணம். க்ருஷனிலுள்ள ஆறு வித உப்புக்கள், இவ்விஷப் பொருள்கள் நன்கு வெளியேற்றப்படுமாறு உட்புற அவயவங்களைச் சரிவர இயங்கச் செய்ய உதவுகிறது. தினசரி க்ருஷன் உட்கொள்ளுவது உங்களது குடல்களை ஒரே நிதானத்துடன் இயங்கச் செய்கிறது. இதைத் தொடர்ந்து உட்கொள்ளுங்கள்; கீல் வாயு ஒருபோதும் திரும்பி வராது.

**"க்ருஷன்"** உங்களது ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் உதவுகிறது

KSA—1

"ஆஹா! என் எதிர்கால வாழ்க்கையே வாழ்க்கை... இவ்வைந்து வருடங்கள் எனக்கு எவ்வளவு நன்மைகளை அளிக்கப்போகின்றன! அதோ - ஆற்றின் நடுவே எஃகாலும் கான்க்ரீட்டாலும் ஓர் பிரம்மாண்டமான சுவர் எழுப்பப்படுகிறது.... ஆம், அவர்கள் அணை கட்டுகிறார்கள். இனி பரந்து கிடக்கும் எங்கள் வயல்களுக்கெல்லாம் நீர்ப் பாய்ச்சுவதற்கு வேண்டிய தண்ணீர் கிடைக்கும். இனி நாம் வானத்தை நோக்கிக் காத்திருக்க வேண்டியதில்லை!"

இவ்வெளிய உழவனின் ஆசை வார்த்தைகள் நம் மக்களின் உயரிய எண்ணத்தை உறுதிப் படுத்துகின்றன. விவசாயத்தின் நிலையை உயர்த்தி, வறுமை மிஞ்சிய இந் நாட்டை வளம்பெறச் செய்ய ஐந்து வருடத்திட்டத்தில் 795 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வரிய தேசிய திட்டத்தில், நம் விவசாயிகளின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. உண்மையில், இவர்கள் கையில்தான் நம் நாட்டின் எதிர்கால சுபிக்ஷம்-இருக்கிறது.

## செழுமை மிக்க அறுவடை

இவ்வைந்து வருட திட்டத்தின் பல்வேறு சாதனங்களில் பல்லாயிரக்கணக்கான டன் எஃகு உபயோகிக்கப்படும். ஆதலால் நம் நாட்டு மக்களின் வருங்கால வாழ்க்கையை செழிப்புறச் செய்வதில் எஃகானது எண்ணற்ற விதங்களில் ஈடுபடும்.

**தி டாடா அயரன் அண்ட்**
**ஸ்டீல் கம்பெனி லிமிடெட்**



TN 3932

## ஏமாற்று நிதி!

சென்னையில் பல 'சீட்டு நிதிகள்' நடத்தப்படுகின்றன. அவைகள் பணம் சேமித்துத் தருவதாக விளம்பரமும் செய்கின்றன. அப்படிப்பட்ட விளம்பரம் ஒன்று, தென்னிந்தியப் பத்திரிகைகளில் வெளியானதைப் பார்த்து நான் மாதந்தோறும் ரூ. 10 கட்டும் உத்தேசத்துடன் ஒரு சீட்டு நிதியில் சேர்ந்து கொண்டேன். இதுவரை சுமார் 19 மாதங்களாகப் பணம் அனுப்பி வந்திருக்கிறேன். ஆனால் சென்ற இரண்டு மாதங்களாக மேற்படி சீட்டு நடத்தும் கம்பெனியிலிருந்து எனக்கு யாதொரு தகவலும் இல்லை. நான் எழுதிய கடிதங்களுக்குப் பதிலுமில்லை.

இந்த மாதிரி ஏமாற்றுக் கம்பெனிகளை நடத்துபவர்கள் கொடுக்கும் விளம்பரங்களைப் பிரசுரிக்கும் பத்திராதிபர்களும், பத்திரிகை ஆசிரியர்களும் சற்று எங்கள் நிலைமையும் கவனிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். சென்னை மாகாணத்தில் வேலை கிடைக்காத காரணத்தினாலேயன்றோ, சொந்த ஊரையும் மாகாணத்தையும் விட்டு இவ்வளவு தூரம் வடநாட்டுக்கு வந்து வேலை செய்து வாழ்கிறோம். இப்படி அரும்பாடு பட்டுச் சம்பாதித்த பணத்தில் ஒரு பகுதி சேமிக்க உத்தேசித்தால், அது முடிவில் ஏமாற்றிப் பறிக்கப் பட்டதாக அறியும்போது எங்கள் மனசு எவ்வளவு வேதனையடைகிறது! பத்திரிகைக்காரர்கள் இதை யெல்லாம் நினைத்துப் பார்க்கும்படி தயவுசெய்து கேட்டுக் கொள்ளுகிறேன்.

புர்குண்டா, பீஹார்
9—1—54 கே. ஏ. வைத்யநாதன்

"அழகாக இருக்கிறதா என்று கேட்டாய்! என் இன்ப வாழ்வே இங்கு தானே இருக்கிறது" என்று சொன்னான் இனியன்.

"இதையெல்லாம் விட்டு விட்டு நாளைக்குச் சென்னைக்கு போகப் போகிறீர்கள். அங்கு அலை பொங்கும் பெரிய கடலே இருக்கும்."

"எவ்வளவு பெரிய கடலாயிருந்தாலும், இந்தத் தாமரைக் குளத்து அழகு வருமா! இதன் அமைதி கிடைக்குமா! அங்கு என் மனத்துக்கு உவகை யளிக்கும் தேன்மொழி இல்லையே! அதன் தண்ணீர் உப்புக் கரிக்குமே!" என்றான்.

தேன்மொழி பதில் சொல்லவில்லை.

இனியன் அவள் அழகிய முகத்தைப் பார்த்தபடியே உட்கார்ந்திருந்தான்.

"ஊருக்குப் போனால் உங்களுக்கு என் நினைவு வருமா!" என்றாள்.

"உன்னை மறக்க முடியுமா தேன்மொழி!"

இந்த வார்த்தைகள் தேன்மொழியின் செவியில் ஒரு வாக்குறுதிபோல் மகிழ்ச்சி தந்தது. அவள் உள்ளம் இனிமை கொண்டு குறுகுறுத்தது. எனவே சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"இந்தத் தடவை ஊருக்குப் போனால் சீக்கிரம் வந்து விடுவீர்களா!"

"பொறுத்திருந்து பார்" என்று அமைதியாகச் சொன்னான். அவன் சிவந்த இதழ்களில் அன்பு தவழ்ந்து விளையாடியது.

அவர்கள் தலைக்கு மேலாகக் காதற் பறவைகள் இரண்டு வட்ட மிட்டன. அவைகள் ஒன்றை ஒன்று தழுவிக் கொண்டன. காதலாலும், இன்பத்தாலும் இனிமையாகப் பாடின. மீண்டும் ஒன்றை ஒன்று தாவிப் பிடிக்க முயன்றன. அந்தக் காதற் பறவைகளின் இன்ப ஒலி அமைதி நிறைந்த அந்த வெளியில் புரண்டு புரண்டு ஒலித்துக் கொண்டிருந்தது.

"நாழியாகி விட்டது. தாத்தா என்னைத் தேடிக் கொண்டு வந்து விடுவார். நான் போகிறேன்" என்று எழுந்தாள் தேன்மொழி.

"ஆமாம். நீ போகத்தானே வேண்டும். போய் விட்டு வா" என்று பிரிவைத் தாங்க முடியாத வருத்தத்தோடு சொன்னான் இனியன்.

தேன்மொழி விடைபெற்றுக் கொண்டு தோட்டத்து வேலி ஓரமாக மெதுவாக நடந்து சென்றாள். கூந்தலின் பின்னல் அவிழ்ந்து அவளுடன் விளையாடுவது போல முதுகில் புரண்டன. அவள் பளபளப்பான புடவையின் நிறம் அவள் நடந்து செல்லச் செல்ல அவன் கண் பார்வையிலிருந்து மறைந்து கொண்டிருந்தது.

அவளுடன் சூரியனும் மறைந்து விட்டான். இரவு தன் நிழல் திரைகளை அவிழ்த்துப் பரப்பியது. தாமரைக் குளத்திலும், தோட்டத்திலும், தோட்டத்தைச் சுற்றியுள்ள நெல் வயல்களிலும் கருமை பாய்ந்தது. அங்கு இனிய அமைதி நிலவியது. சொப்பன சுகம்போல இருந்தது.

அந்த அமைதியைக் குலைத்துக் கொண்டு இனியன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

** ** **

அன்று இரவு இனியன் தன் அறையில் படுத்துக் கொண்டு தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தான். அவன் மனக்கண் முன்னால் தேன் மொழியின் சிரித்த முகம் தோன்றிக் கொண்டே இருந்தது. அவளுடைய எழில் முகத்தைப் பார்த்தவாறே கண்ணயர்ந்தான்.

திடீரென்று தன் தந்தை கூப்பிடுவதுபோலிருந்தது. படுக்கையை விட்டு எழுந்தான்.

"இனியா!"

"ஏன் அப்பா!"

இனியனின் தந்தை அவன் களங்கமற்ற முகத்தைக் கோபத்தோடு பார்த்து விட்டுச் சற்றுக் கடுமையாகச் சொன்னார்.

"நீ தேன்மொழியைக் கலியாணம் செய்து கொள்ள முடியாது. அப்படி நினைத்துக் கொண்டு அவளுடன் பழகுவதை நிறுத்தி விடு."

இனியன் ஒரு கணம் ஒன்றும் புரியாமல் தவித்தான். அடுத்த கணம் ஏதோ ஒரு தைரியத்தில் பதில் சொல்ல ஆரம்பித்தான்.

"ஏன், நான் அவளை மணப்பதற்கு என்ன தடை! அவளுக்கு என்ன அழகில்லையா!"

இனியன் மிகவும் மரியாதையுடன் நல்லதனமாகவே இதைக் கேட்டான்.

"அவளுக்கு அழகு இருக்கலாம். அதற்காக நீ அவளை மணந்து கொள்ள முடியுமா!"

"அழகு மட்டும் இருந்தால் போதாதுதான். ஆனால் அவள் மிகுந்த அறிவுடையவள். படித்துமிருக்கிறாள். அத்துடன் என்மீது தன் உயிரையே வைத்திருக்கிறாள்."

"இனியா! சுற்றி வளைத்துப் பேசவானேன்! நீ அவளை மணந்து கொள்ளுவது நம் குலத்துக்கு விரோதம்; நம்முடைய சாதிக்கு அடுக்காது. ஒரு கீழ் சாதிப் பெண்ணை உன் தாயார் மருமகளாக ஏற்றுக் கொள்ளச் சம்மதிக்க மாட்டாள்."

"அம்மா சம்மதித்தால்!"

"நான் சம்மதிக்க வேண்டாமா!"

"தேன்மொழியை நான்தானே கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்! 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்று நீங்கள்தானே எனக்

★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★

## இது நியாயமா?

முதல் தேதி அன்று முடிசூடா மன்னராகி இரண்டாம் தேதி மாலை அன்னக்காவடியாகும் திருக்கூட்டத்தைச் சேர்ந்த,-அதாவது குமாஸ்தா வர்க்கத்தைச் சேர்ந்த, ஒரு ஏழை குமாஸ்தாவின் மகள் நான். கோவை ஜில்லாவில் உள்ள உடுமலைப் பேட்டையில் வசித்து வருகிறோம். எப்படியோ படாத பாடுபட்டு எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் தேறினேன். வறுமை காரணமாக வேலை தேடும்படி நேர்ந்து விட்டது. சுமார் இரண்டு மாதங்களுக்கு முன் பத்திரிகைகளில் "நர்ஸ்" பயிற்சிக்கு ஆட்கள் தேவை என்று விளம்பரம் வந்திருந்தது. கோவை ஜில்லாவுக்கு நான் 'நர்ஸ்' பயிற்சி பெற மனுச் செய்து கொண்டேன். கோவைக்கு என்னை நேரில் வரும்படி அழைப்பு வந்திருந்தது. அந்த அழைப்புக்கு இணங்க என் தந்தையுடன் கோயமுத்தூர் சென்றேன்.

என்னைப் போலவே ஆண்களும் பெண்களுமாக மூந்நூறு பேர் அங்கு வந்திருந்தனர். உங்களுக்கு 'நர்ஸ்' பயிற்சி அளிப்பது சம்பந்தமான முடிவுகள் டிஸம்பர் மாதத்துக்குள் தெரிவிக்கப்படும் என்று சொல்லி விட்டார்கள். டிஸம்பர் மாதம் முடிந்தது. எனக்குக் கடைசி வரையில் ஒரு தகவலும் தெரியவில்லை.

பிறகு விசாரித்ததில் அன்று கோயமுத்தூருக்கு வந்த மூந்நூறு பேரையுமே தேர்ந்தெடுக்கவில்லை என்று தெரிந்தது. ஆனால் ஒரே ஒருவரை மட்டும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். சென்னையில் பொறுக்கி எடுக்கப்பட்ட ஒரு ஆங்கிலோ இந்திய மாதுவுக்குக் கோவையில் பயிற்சி அளிக்க உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். இது நியாயமா!

இதற்குக் கோவைக்கின்றி ஒன்றை வைத்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. எங்கள் மூந்நூறு பேரில் இந்த 'நர்ஸ்' பயிற்சிக்கு யாருமே தகுதி இல்லாமல் போனதற்கு என்ன காரணம்! கோவை ஆஸ்பத்திரியை விளையாட்டு மைதானமாக அமைத்து அதில் எங்களைப் பொம்மைகளாக வைத்து விளையாடி யிருக்கிறார்கள்.

கோவைக்கின்றி கிடையாது என்று போட்டிருந்தால் வேறு இலாகாவிலாவது முயற்சி செய்திருப்பேன். வறுமை நிலையில் உள்ள எனக்கு இதனால் ஏற்பட்ட நஷ்டம் ரூபாய் இருபத்தைந்து.

உடுமலைப் பேட்டை
12—1—54 க. கோமளவல்லி

★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★

குப் பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறீர்கள்! அதை நீங்களே மறுக்கும்படி சொல்லலாமா!"

"என் கண் முன்னால் நீ வேறு சாதிப் பெண்ணை மணந்து கொள்ளுவதை நான் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன்."

"நீங்கள் சம்மதித்தாலும் சம்மதிக்கா விட்டாலும் நான் முடிவு செய்து விட்டேன். தேன்மொழியையே கல்யாணம் செய்து கொள்ளுவது என்று தீர்மானித்து விட்டேன்."

"இது விஷயத்தில் நான் சொல்லுவதை நீ கேட்கப் போகிறாயா, இல்லையா!"

"உங்கள் மகன் விருப்பத்துக்கு நீங்கள் உதவி செய்யக் கூடாதா! இதன் மூலம் சாதி வெறியில் கிடக்கும் இந்தச் சமுதாயத்தையே உயர்த்திய பெருமை உங்களுக்குக் கிடைக்குமே."

"இனியா! இது என்ன, நாடக மேடையா! அல்லது சீர்திருத்தப் பிரசங்கமா! உன் வாழ்க்கையைப் பற்றி, உன்னுடைய எதிர்கால முன்னேற்றத்தைப்பற்றி எனக்கு அக்கறையில்லையா!"

"நீங்கள் இது விஷயத்தில் என் எதிர்கால வாழ்வை நாசமாக்கத்தான் பார்க்கிறீர்கள்."

"என்னது!" என்று அதட்டினார்.

இனியன் ஒன்றும் பதில் சொல்ல வில்லை. தன் முகத்தை அவரிடமிருந்து திருப்பிக் கொண்டான். என்றாலும் தன்னம்பிக்கையும் தைரியமும் நிறைந்து தோன்றினான்.

அவன் தந்தையும் அவன் தம் எதிரில் நிற்பதையே விரும்பவில்லை. "போ! என் எதிரில் நிற்காதே!" என்று கத்தினார்.

இனியன் நேராகத் தன் படுக்கை அறைக்கு வந்தான். படுக்கையில் பொத்தென்று விழுந்தான். கதவைச் சாத்திக் கொண்டு குழந்தை போல விம்மி விம்மி அழுதான். தன் வாழ்வு சுவையற்றதாக வீணாகி விட்டதாக உணர்ந்தான்.

இனியன் அவன் தந்தையை விடச் சற்று ஒல்லியானவன் என்பதைத் தவிர அவனுடைய உருவம் அவருடைய உருவம் போலவே இருந்தது. வேஷ்டியை உடுத்திக் கொண்டு, ஜிப்பாவை அணிந்து கொண்டு அங்கவஸ்திரத்தை விரித்துப் போர்த்திக் கொண்டிருக்கும் போது பார்த்தால் இனியனுக்கும் அவன் தந்தைக்கும் கொஞ்சம்கூட வித்தியாசமே தெரியாது.

தன் தந்தையிடம் இத்தனை நாழி வாதம் செய்தானே ஒழிய அவனுக்கு அவருடைய மனத்தைப் புண்படுத்திக் கொண்டு, அவருடைய வீட்டை விட்டு விலகித் தேன்மொழியை மணந்து கொள்ளும் தீவிரம் இருப்பதாக அவனைப் பார்த்தால் இப்போது தெரியவில்லை.

அவன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்து விட்டவன் போல் அறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்தான். கல்யாணம் செய்து கொள்ள முடியாத காதலர்களின் முடிவுப்படி தான் தற்கொலை செய்து கொள்ளுவது என்று தீர்மானித்தான். சற்றும் இரக்க மில்லாத தன் தந்தையை இதன் மூலம் தண்டிக்க வேண்டும் என்று விரும்பினான்.

தான் இறந்து விட்ட செய்தி கேட்டுத் தேன்மொழி அழுது புலம்புவாள்; தன்னுடைய ஆடை அலங்காரங்களை யெல்லாம் களைந்து விட்டு என் உயிரற்ற உடலின்மீது விழுந்து புரளுவாள். அதிகார தோரணையில் ஆடம்பரமாக, குடும்ப கௌரவம் குலையாமல், சாதியின் உயர்வு குன்றாமல் வாழ்ந்த என் தந்தை தன் தவறை நினைத்து வருந்துவார். கண்ணீர் விடுவார்; கதறுவார் என்றெல்லாம் கற்பனை செய்து கொண்டான்.

மனிதர்களுடைய நிலைமையைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்து, சமுதாய அமைப்பையே மாற்றி 'எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்' என்று உலகுக்கு வாழ்ந்து காட்ட வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்த இனியன் இரண்டு கைகளாலும் தன் கழுத்தை நெரித்துக் கொண்டு சாகத் துணிந்து விட்டான்.

அந்த முடிவை அப்பொழுதே நிறைவேற்ற ஆரம்பித்து விட்டான். அடுத்த கணம் அந்த அறையில் பயங்கரமான அலறல் சத்தம் கேட்டது. வெளியில் காற்று 'விர், விர்'ரென்று கோரமாக வீசியது. எங்கோ தூரத்தில் ஒரு நாய் ஓலமிட்டு அழும் சோகக் குரல் சகிக்க முடியாமல் இருந்தது. நாயின் அந்த அழுகைச் சத்தமும் வேகமாக அடிக்கும் அந்தப் பேய்க் காற்றின் பயங்கரத்தையும் தவிர அங்கு வேறு எதுவுமே இல்லை போலிருந்தது. (தொடரும்)

# ஆதார சக்தி



நீங்களும் பெறுக

# வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

தினசரி போஜனத்திற்குப் பிறகு ருசிகரமான வாட்டர்பரீஸ் காம்பவுண்டும் சாப்பிட்டு வந்தால் சொற்பகாலத்திலேயே தென்பும் திடமும் அதிகரிப்பதை காண்பீர்கள். தேக உறுப்புகளுக்கு வலுவூட்ட அவசியமான பொருள்கள் நிறைந்த வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் உங்களுடம்பில் திராணி அதிகரிக்கச் செய்யும். களைப்பேற்படாமல் தென்பூட்டி ஜலதோஷம், இருமல் வராமலிருக்க அதிக எதிர்ப்பு சக்தியும் பெற உதவுகிறது. இளையோர், முதியோர் யாவருக்கும் சிறந்த ஆரோக்கிய டானிக்.




# WATERBURY'S COMPOUND

## வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

உங்களைத் தென்புடன் வைத்திருக்கும்

MAS 42-53.


நல்வாழ்வு பெற
துள்ளி எழும்
சேய் . . .
சேமித்து முதலீடு செய்யுங்கள்
நேஷனல்
சேவிங்ஸ்
சர்டிபிகேட்டுகள்
குழந்தையின் எதிர்காலத்தை வலுப்படுத்துங்கள்
இந்தியாவின் க்ஷேமத்திட்டத்திற்கும்
உதவி புரியுங்கள்

# கண்ணுசாமியின் அதிர்ஷ்டம்

எஸ். டி. சீனிவாசன்



மானேஜரைத் தனியாகப் பார்த்துத் தன் விடுமுறை மனுவைக் கொடுக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்த ஆறுமுகத்துக்குக் காலையிலிருந்து அவகாசமே கிடைக்கவில்லை.

மறுநாள் முதல் தேதி. அன்று முதல் ஒரு வாரம் வரை அவன் விடுமுறை கேட்டிருந்தான். இந்தக் காரியாலயத்துக்கு வேலைக்கு வந்து மூன்று வருஷங்களாகியும் இது வரை அவன் விடுமுறை எடுத்ததில்லை. ஏழு நாள் விடுமுறையில் செல்லாயியுடன், கண்ணமங்கலத்துக்குப் போய், கழிக்க வேண்டும் என்பது அவன் திட்டம்.

மானேஜர் அறையில் இருந்த மணி அலறியது. வெளியே உட்கார்ந்திருந்த ஆறுமுகம், அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான்.

ஆறுமுகத்தைக் கண்டதும் மானேஜர் "டேய்! 'ஸ்டோர் கீப்ப'ரைப் போய்க் கூப்பிட்டுக்கொண்டு வா!" என்றார் கோபமாக.

அடுத்த நிமிஷம் 'ஸ்டோர் கீப்பர்' உள்ளே நுழைய, ஆறுமுகம் திரும்ப வெளியே வந்து தன் ஆசனத்தில் உட்கார்ந்தான்.

உள்ளே மானேஜருக்கும் 'ஸ்டோர் கீப்ப'ருக்கும் நடந்த சம்பாஷணை விவரமாக ஆறுமுகத்தின் காதுகளில் விழவில்லை. ஆனாலும் மானேஜர் ஏதோ கோபமாகக் கேட்பதும், 'ஸ்டோர் கீப்பர்' பயந்த குரலில் பதில் சொல்வதும் ஆறுமுகத்துக்குப் புலனாயிற்று.

அடுத்த நிமிஷம் மறுபடியும் மானேஜர் அறையில் இருந்த மணி அலறியது. ஆறுமுகம் பயந்து கொண்டே உள்ளே நுழைந்தான்.

"திங்கட்கிழமை 'லோட்டஸ் மருந்துக் கடை'க்கு மருந்துகள் கட்டி அனுப்பியது யார்!" என்று ஆறுமுகத்தைக் கேட்டார் மானேஜர்.

"நான்தான் சார்!" என்றான் அவன்.

ஏன் அவர் இந்தக் கேள்வியைக் கேட்கிறார் என்று அவனுக்குப் புரியவில்லை.

"ஸ்டோரிலே இருந்து எத்தனை சாமான்கள் வாங்கிக்கொண்டு வந்தே!"

"இருபது சாமான்கள், சார்!"

உடனே மானேஜர் ஸ்டோர் கீப்பரைப் பார்த்து "நீர் போகலாம்!" என்று சொன்னார்.

ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே வெளியே சென்றார் ஸ்டோர் கீப்பர். அவர் சென்றதும் மானேஜர், "டேய், ஆறுமுகம்! உண்மையைச் சொல்லிவிடு. அன்று நீ 'லோட்டஸ் மருந்துக் கடை'க்கு மருந்துகளைக் கட்டி அனுப்பும்போது, பெட்டிக்குள்ளே வைக்காமல் திருடிக் கொண்டு போன இரண்டு இன்ஜெக்ஷன் புட்டிகளை எங்கே கொண்டு போய் விற்றாய்!" என்றார்.

ஆறுமுகத்தின் கால்கள் நடுங்கின. "சார்! சார்! நான் ஒண்ணுமே எடுக்கலை சார்!" என்று ஒரே கலவரம் கலந்த குரலில், தட்டுத் தடுமாறிக் கொண்டே கூறினான் அவன்.

"டேய்! பொய் சொன்னால் போலீஸிலே பிடித்துக் கொடுத்து விடுவேன். நீ கிடங்கிலிருந்து இருபது சாமான் வாங்கிக்கொண்டு வந்ததை ஒத்துக் கொள்கிறாய். பட்டியலிலும் இருபது சாமான்கள் எழுதி இருக்கு. ஆனால் இன்னிக்கு 'லோட்டஸ் மருந்து'க் கடைச் சொந்தக்காரர் எழுதி இருக்கிறார். பெட்டியை உடைத்தபோது அதிலே பதினெட்டுச் சாமான்தான் இருந்தனவாம். பட்டியலிலே கண்டபடி இரண்டு இன்ஜெக்ஷன் டியூப் குறைகிறதாம். இரண்டும் நாற்பது ரூபாய் விலை. அந்த இரண்டையும் என்ன செய்தாய் சொல்லி விடு!" என்றார் மானேஜர்.

"சார்! எனக்கு ஒரு விஷயமும் தெரியாது, சார். 'ஸ்டோர் கீப்பர்' ஐயா கொடுத்த இருபது சாமானையும் நான் அப்படியே பெட்டிக்குள்ளே வைத்துக் கட்டிவிட்டேன் சார்!"

"உங்களைப் போல 'பெருச்சாளி'களை இங்கே வைத்துக்கொண்டிருந்தால் நாங்கள் உருப்பட்ட மாதிரிதான். நீதான் அதைத் திருடி இருக்கே! உன்னை இப்பொழுதே வேலையிலிருந்து விலக்கியிருக்கிறேன். உனக்கு இந்த மாசம் சேர வேண்டிய சம்பளத்துக்கும் நீ திருடிய சாமானின் விலைக்கும் சரியாகப் போச்சு!" என்றார் மானேஜர்.

அடுத்த கணம் இத்தனை நேரம் வெளியே நின்று உள்ளே நடந்த எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த கண்ணுசாமி உள்ளே நுழைந்து, "ஆறுமுகம்! ஐயா கோபமாக இருக்கிறபோது ஏன் இங்கே நிற்கிறே! நாளைக்கு வந்து காணேன்!" என்று சொல்லி மெதுவாக அவனை வெளியே அழைத்துக் கொண்டு போனான்.

ஆறுமுகம் தலையைக் குனிந்து கொண்டே தெருவை நோக்கி நடந்தான்.

கண்ணுசாமி கணக்கரிடம், "பலநாள் திருடன் ஒரு நாள் அகப்படாமல் போகிறானா, சார்! கடவுளுக்கே இது பொறுக்கலேங்க! பெண்டாட்டிக்கு இரண்டு மாதத்துக்கு ஒருதரம் 'கண்டாங்கி' சேலை வாங்க இவன்கிட்டே ஏதுங்க பணம்! மூந்தாநாள் இவன் பெண்சாதிக்கு நாற்பது ரூபாயிலே கம்மல் வாங்கிக் கொடுத்தானாம். இங்கே மருந்தைத் திருடி விற்று, பெண்டாட்டியைத் திருப்திப் படுத்தறான்!" என்றான்.

அவன் சொன்ன வார்த்தைகள் ஆறுமுகத்தின் காதுகளில் விழுந்தன. அவனுக்குச் 'சுருக்'கென்றது. அவன் செல்லாயிக்குக் கம்மல் வாங்கிப் போட்டது வாஸ்தவம். ஆனால் அவன் மருந்தைத் திருடியா விற்றான்!

ஆறுமுகத்தின் மனம் குழம்பித் தவித்தது. அவன் காலையில் புறப்படும்போது என்னவெல்லாம் நினைத்துக் கொண்டு புறப்பட்டான். ஆனால் பத்து நிமிஷ நேரத்துக்குள் என்னென்ன சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. அவன் திருடனா!

கம்பெனிக் கட்டிடத்தை விட்டுக் கீழே இறங்கி நடக்கலானான். அவன் கால்கள் தள்ளாடின. 'செல்லாயியிடம் போய் எப்படி விஷயத்தைச் சொல்லுவது! அவளும் நம்மைத் திருடன் என்று நினைத்துக் கொள்வாளா! நமக்கு வேறு எங்கே வேலை கிடைக்கப் போகிறது!'

சட்டென்று அவன் மனதில் ஒரு விஷயம் பளிச்சிட்டது.

அன்று அவன் அந்த மருந்துகளைப் பெட்டியில் அடக்கம் செய்யும்போது கண்ணுசாமி இப்படியும் அப்படியும் போய்க் கொண்டிருந்தான். மருந்துகளையெல்லாம் அடுக்கிவிட்டு, உள்ளே ஆணிகளை எடுத்து வர நாம் சென்றபோது கண்ணுசாமிதான் அந்த இரண்டு புட்டிகளையும் எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். பழி நம்மேல் வந்து விட்டது. அதைத் தொடர்ந்து பழைய சம்பவங்கள் அவன் மனதில் சுழன்றன.

• • •

ஆறுமுகமும் கண்ணுசாமியும் 'நேஷனல் லாபரேடரி'யில் வேலை செய்து வந்தனர்.

நெடுநாட்களாகவே இருவரும் சிநேகிதர்கள். ஆனால் இரண்டு வருஷங்களுக்கு முன் அவர்களுக்குள் விரோதம் ஏற்பட்டு விட்டது.

செல்லாயி, அவர்களுடைய கம்பெனியில் வேலை செய்து வந்த பலருக்குப் பகல் சாப்பாடு எடுத்துக் கொண்டு வந்து கொடுப்பது வழக்கம். அவள் 'குறுகுறு'ப்பான முகம், இனிய பேச்சு, பருவத் துடிப்புடன் பூரித்து விளங்கிய அவளுடைய தேகம் இவை ஆறுமுகம் கண்ணுசாமி இருவர் உள்ளங்களிலும் இன்ப லாகிரியை எழுப்பின.

சென்ற வருஷம் செல்லாயிக்கும் ஆறுமுகத்துக்கும் கல்யாணமாகியது. இதைப் பார்த்த கண்ணுசாமிக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை.

ஆறுமுகமும் செல்லாயியும் அன்னியோன்யத் தாம்பத்திய வாழ்க்கை நடத்தினர். அதைக் காணக் காணக் கண்ணுசாமியின் உள்ளம் அக்னி குழம்பாய் மாறியது.

அன்று முதல் கண்ணுசாமி காரியாலயத்தில் ஆறுமுகத்தைப் பற்றி ஏதாவது 'கோள்' சொல்லிக் கொண்டே இருந்தான்.

இப்போது செல்லாயி நான்கு மாதக் கர்ப்பிணி. அவள் ஒரு ஜதை வெள்ளைக் கம்மல் வேண்டும் என்று ஆசைப் பட்டாள். ஆறுமுகம் தான் கட்டி வந்த சீட்டை எடுத்து, கம்மல் வாங்கிப் போட்டான். கிராமத்திலுள்ள தன் அண்ணன் வீட்டுக்குப் போய் ஒருவாரம் இருக்க வேண்டும் என்று விரும்பினாள் அவள். அதற்காகத்தான் விடுமுறை கேட்கப் போனான் அவன். ஆனால் அவன் உத்தியோகமே போய் விட்டது.

• • •

"செல்லாயி! அந்தப் பாவி கண்ணுசாமி நம் தலையிலே கல்லைப் போட்டு விட்டான்" என்று சோர்ந்த குரலில் சொல்லிக்கொண்டே தன் குடிசையினுள் நுழைந்தான் ஆறுமுகம்.

திடுமென பகல் ஒரு மணிக்குத் தன் கணவன் வீட்டுக்கு வந்து விடவே, விஷயம் புரியாமல் விழித்தாள் அவள். நடந்ததைச் சுருக்கமாகச் சொன்னான் ஆறுமுகம். நாற்பது ரூபாய் வேலை போய்விட்டதென்று கேட்டவுடன் அவள் இருதயமே நின்றுவிடும்போல் இருந்தது.

"கண்ணுசாமிதான் எடுத்திருப்பான்னு நீங்க மானேஜர் ஐயா கிட்டே சொல்லிறதுதானே!"

"அதை எப்படி நிரூபிக்க முடியும்!"

"இன்னிக்குப் பேசாமல் இருங்கோ. நாளைக்கு மறுபடியும் மானேஜர் ஐயா கிட்டே போய்க் கெஞ்சிப் பாருங்கோ. அவரு கோபமும் அடங்கி விடும்......" என்றாள் செல்லாயி. அதுவும் நல்ல யோசனைதான் என்று நினைத்தான் ஆறுமுகம்.

ஆனால் மறு நாள் அவன் கம்பெனிக்குப் போன போது, கண்ணுசாமியின் மைத்துனன் தன் ஸ்தானத்தில் வேலை செய்வதையும் கண்ணுசாமி தன்னை ஏளனமாகப் பார்ப்பதையும் கண்டான்!

விஷயம் இப்பொழுது அவனுக்குச் சந்தேகமறப் புரிந்துவிட்டது. இந்த விஷயத்தை அவன் செல்லாயியிடம் சொல்லும்போது அவனுக்கு ஆத்திரம் தாங்கவில்லை.

செல்லாயி ஒரு கணம் யோசித்தாள். ஆறுமுகத்தின் முன் கோபம் அவளுக்கு நன்றாகத் தெரியும். கண்ணுசாமி மேல் அவனுக்குள்ள ஆத்திரத்தில் அசம்பாவிதமாக அவன் ஏதாவது செய்து விட்டால் என்ன செய்வது என்று பயந்த அவள் சிறிது நாள், ஏற்கெனவே அவர்கள் போட்டிருந்த திட்டப்படி, கண்ணமங்கலத்திலுள்ள தன் அண்ணன் வீட்டுக்குப் போயிருக்கலாம் என்றாள். கண்மறைவாக இருந்தால் ஆறுமுகத்தின் ஆத்திரம் சற்றுத் தீரும் என்பது அவள் துணிவு.

"வேலை போய் விட்டது. இங்கேயே இருந்து கொண்டு திரும்ப வேறு வேலை பார்க்கிறதா, நாட்டுப்புறத்திலே போய் உட்காருவதா!" என்றான்.

"ரொம்ப நாளாகவே என் அண்ணன் நம்மைக் கூப்பிட்டுக் கொண்டிருக்காங்க. கொஞ்ச நாள் அங்கேதான் போய் இருந்தால் போச்சு. வேறு வேலை அப்புறம்தான் வந்து பார்த்துக் கொண்டால் போகிறது" என்றாள் செல்லாயி. எப்படியாவது, ஆறுமுகம் கண்ணுசாமியைச் சந்திக்கும்படி ஏற்படக் கூடாது என்ற பயம் அவளுக்கு.

செல்லாயியின் கொஞ்சு மொழிகளுக்கு அவன் பிடிவாதத்தை மாற்றச் சக்தியில்லாமல் போக

மூன்று காரியங்களையும் சாதிப்பது கால்கேட் முறையே!

## உங்கள் வாய்த்துர்நாற்றத்தை அகற்றுகையில்

## உங்கள் பற்களை சுத்தி செய்து

## அவற்றை சொத்தையாகாமல் தடுக்கிறது




DCG/23

---

# அந்த இருமலை நிறுத்துக-

**தொண்டை ரணத்தை சமனமூட்டி குணப்படுத்துக. மார்பு மற்றும் சுவாசப்பை அடைப்பை நீக்குக. எல்லாம் க்ஷணத்தில் முடிக்க.**



PPT. 27-TAM

# PEPS

பெப்ஸ் சாப்பிடுங்கள்.




உலக பிரசித்தி பெற்ற
தொண்டை, மார்புவலி நிவாரண மாத்திரைகள்.
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

பெப்ஸ் தொண்டை, மார்புவலி நிவாரண மாத்திரைகளில் சமனமூட்டி, குணப்படுத்தும் ரசங்கள் அடங்கியுள்ளன. பெப்ஸை சுவைக்கும்போது இந்த ரசங்கள் ஆவியாக மாறி ஸ்வாசத்துடன் தொண்டை, சுவாசக்குழாய் மூலமாக சுவாசப் பைக்குச் செல்லும் நோயின் ஆரம்ப ஸ்தானத்திற்கே சென்று வேலை செய்கின்றன இதனால்தான் பெப்ஸ் கைகண்ட ஔஷதமாயும் உலக பிரசித்தி பெற்றும் விளங்குகின்றது. பெப்ஸ் இருமலை நிறுத்தி, தொண்டை ரணத்தை சமனமாக்கி, கபத்தை உடைத்து அடைப்பை நீக்குவதுடன் இன்ப்ளுயன்ஸா மற்றும் பிராங்கைடிஸ் சிகிச்சையில் இன்றியமையாததாயுமுள்ளது.

மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள்: தாதா & கம்பெனி, பார்க் டவுன்

வில்லை. மறு நாள் அவர்கள் இருவரும் கண்ண மங்கலத்துக்குப் புறப்பட்டு விட்டனர்.

•  •  •

அன்று ஏதோ காரியமாக ஆறுமுகத்தின் மைத்துனன் முருகேசன் கண்ணமங்கலத்திலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ள வேலூருக்குப் புறப்பட்டான். போகும்போது, "ஆறுமுகம்! எத்தனை நாளைக்கு வீட்டிலேயே உட்கார்ந்து இருப்பே! வாயேன் வேலூர் வரை போய்வரலாம்" என்று அழைத்தான். ஆறுமுகமும் தன் மைத்துனனுடன் வேலூருக்குக் கிளம்பினான்.

தான் வந்த காரியம் முடிந்ததும் முருகேசன் ஆறுமுகத்தையும் அழைத்துக் கொண்டு பலகாரம் சாப்பிட ஒரு ஓட்டலுக்குச் சென்றான். இருவரும் சாப்பிட்டுக்கொண்டே இருந்தபோது அங்கே வெள்ளய்யன் வந்தான். வெள்ளய்யன் கொஞ்ச நாள் 'நேஷனல் லாபரேடரி'யில் ஆறுமுகம், கண்ணுசாமி இவர்களுடன் வேலை செய்தவன். ஆறுமுகத்தை அவன் ஓட்டலில் பார்த்ததும், "அடடே! ஆறுமுகமா! ரொம்ப நாள் ஆச்சு உன்னைப் பார்த்து. பட்டணத்திலே அதே கம்பெனியிலேதானே இருக்கிறே!" என்று கேட்டுக் கொண்டே வந்து உட்கார்ந்தான்.

ஆறுமுகம் நடந்த விஷயம் பூராவையும் அவனிடம் சுருக்கமாகச் சொன்னான்.

"அடப் பாவமே! கடைசியிலே கண்ணுசாமி அப்படியா பண்ணி விட்டான்!.......ஆனால் அவன் சுத்த அயோக்கியன். அப்படிச் செய்யக் கூடியவன்தான்......சரி, நீ இப்போ எங்கே தங்கி இருக்கிறே!" என்றான் வெள்ளய்யன்.

முருகேசனை வெள்ளய்யனுக்கு அறிமுகப்படுத்தி, "இவர்தான் எங்க மச்சான். இங்கேதான் கண்ணமங்கலத்திலே பிள்ளையார் கோயில் தெருவிலே இவரோடு தங்கியிருக்கேன்" என்றான் ஆறுமுகம்.

"நான் இங்கேயே வேலூரிலேயேதான் ஒரு கடையிலே இருக்கேன். ஏதாவது வேலை, இங்கே கடைத் தெருவிலே காலி இருந்தா உன்கிட்டே வந்து சொல்றேன்!" என்று சொல்லி ஆறுமுகத்திடம் விடை பெற்றுச் சென்றான் வெள்ளய்யன்.

பிறகு ஆறுமுகமும் முருகேசனும் தங்கள் ஊராகிய கண்ணமங்கலத்துக்குக் கிளம்பினர்.

•  •  •

மறு நாள் பொழுது விடிந்ததும் ஆறுமுகம் செல்லாயியிடம், "ஏ, குட்டி! அந்தக் கம்மலை இப்படிக் கழற்றிக் கொடு. அதை வாங்கின வேளையே சரியில்லை. இப்போ கையிலேயும் செலவுக்குக் காசில்லை. வேலூருக்குப் போய் விற்று விட்டு வந்துவிடுகிறேன்" என்றான்.

செல்லாயியும் பேசாமல் கம்மலைக் கழற்றி அவனிடம் கொடுத்தான். அவன் வேலூருக்குக் கிளம்புவதற்காகத் தெருவுக்கு வந்தான். அப்போது தெருவில் ஒரு சைக்கிள் வந்து நின்றது. சுமார் இருபது வயது இளைஞன் அதிலிருந்து இறங்கினான்.

ஆறுமுகம் அவனை ஏற இறங்கப் பார்த்தான்.

வந்தவன், "ஆறுமுகம்! என்னோடு வேலூருக்கு வருகிறாயா! நான் உனக்கு ஒரு கடையிலே வேலை பண்ணித் தருகிறேன்!" என்றான்.

வந்தவன் யாரென்று தெரியாமல் ஆறுமுகம் பேந்தப் பேந்த விழித்தான். ஆறுமுகத்தின் தடுமாற்றத்தை உணர்ந்து கொண்ட அவன், "நேற்று நீ ஓட்டலிலே உன் சிநேகிதனிடம் உன் கஷ்டத்தைச் சொல்லிக் கொண்டு இருக்கும் போது நான் கேட்டுக்கொண்டு இருந்தேன். வேலூரிலே ஒரு மருந்துக் கடையிலேயே வேலை காலியாக இருக்கு. உன்னை அழைத்துக் கொண்டு போகலாம் என்று வந்தேன்" என்றான்.

ஒரு மணி நேரத்துக்குள் இருவரும் வேலூரை அடைந்தனர். ஒரு மருந்துக் கடைக்குள் நுழைந்தனர். வந்தவன் ஆறுமுகத்தை ஒரு நாற்காலியில் உட்கார வைத்தான். அங்கே இருந்த திரையைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றான்.

அடுத்த நிமிஷம் உள்ளே இருந்து வந்த வார்த்தைகள் ஆறுமுகத்தின் தலையைச் சுழற்றியது.

"அப்பா! எனக்குக் குதிரைப் பந்தயத்தில் இருக்கும் மூட வெறியின் பலனை இப்போதுதான் புரிந்து கொண்டேன். அன்று ஒருநாள் என் கையில் குதிரைப் பந்தயத்துக்குப் பணம் இல்லை. கடையிலிருந்து பணத்தை யெடுத்தால் உங்களுக்குத் தெரிந்து விடும் என்று நினைத்து, 'நேஷனல் லாபரேடரி'யில் இருந்து வந்த பார்ஸலை உடைக்கும் போது, இரண்டு விலையுயர்ந்த இன்ஜெக்ஷன் புட்டியை எடுத்து விற்று விட்டேன். அவை இரண்டும் பார்ஸலில் குறைகிறது என்று உங்களிடம் சொன்னேன். நீங்கள் அதைப் பற்றி அவர்களுக்குக் கடிதம் எழுதினீர்கள். அவர்கள் உங்கள் பேச்சை நம்பி, அங்கே வேலை செய்து வந்த பார்சல் கட்டும் வேலைக்காரன்தான் திருடிக் கொண்டு விட்டான் என்று அவனை வேலையிலிருந்து நீக்கி விட்டனர். அவன் தனக்கு விரோதியான வேறு ஒரு வேலைக்காரன்தான் அதை எடுத்துக் கொண்டு தன் மீது பழியைப் போட்டு விட்டான் என்று நினைத்திருக்கிறான். நேற்று வேலையிலிருந்து அனுப்பப்பட்ட அந்த வேலைக்காரன் இங்கே வேறு ஒருத்தனிடம் பேசிக் கொண்டிருந்த போது நான் கேட்டுக் கொண்டிருந்தேன். நேற்று ராத்திரியெல்லாம் என் மனசு ரொம்பச் சங்கடப் பட்டுக் கொண்டிருந்தது. என்னால் எத்தனை கஷ்டங்கள் வந்து விட்டன என்று நான் ரொம்பக் கஷ்டப்பட்டேன். அப்பா! என்னை மன்னித்து விடுங்கள். நான் இனிமேல் இது மாதிரி தப்புக் காரியம் செய்ய மாட்டேன். என் மனச்சாட்சி நேற்றிரவு என்னைச் சரியாகத் தண்டித்து விட்டது. அந்த வேலைக்காரனை நான் அழைத்து வந்திருக்கிறேன். அவனுக்கு நம் கடையில் ஏதாவது வேலை கொடுக்கத்தான் வேண்டும்."

ஆறுமுகத்தின் மனத்தில் எண்ண அலைகள் சுற்றிச் சுழன்றன. அடுத்த கணம் ஒரு பெரியவரும், அந்த இளைஞனும் வெளியே வந்தனர்.

பெரியவர் ஆறுமுகத்தைப் பார்த்து, "அப்பா! என் மகனால் உனக்கு வேலை போய் விட்டதைக் கேட்டு நான் மிகவும் வருந்துகிறேன். ஆனால் அதில் கூடவே ஒரு நன்மையும் ஏற்பட்டது. அந்த நிகழ்ச்சியால் தத்தாரியாய்த் திரிந்த என் மகன் திருந்தி விட்டான். உனக்கு என் நன்றி. அந்த மருந்துக்காக உன் சம்பளத்திலிருந்து அவர்கள் பிடித்துக் கொண்ட நாற்பது ரூபாய் இந்தா! நாளை முதல் நீ என் கடைக்கு வேலைக்கு வந்து விடு. இன்றே நீ யிருந்த கம்பெனிக்கும் உன்மேல் தவறில்லை என்று விவரமாக எழுதிப் போட்டு விடுகிறேன்!" என்றார்.

ஆறுமுகம் நன்றி ததும்பும் முகத்துடன் அவர் கொடுத்த அந்த நான்கு பத்து ரூபாய் நோட்டுகளை வாங்கிக் கொண்டு அவரிடம் விடைபெற்றுக்கொண்டு கடையை விட்டு வெளியே வந்தான். உண்மையை அறியாமல் கண்ணுசாமிமேல் சந்தேகப்பட்டோமே என்ற மனத்துடன் அவன் இத்தனை அதிசயங்களையும் செல்லாயியிடம் சொல்ல வேகமாகக் கிராமத்தை நோக்கி நடந்தான்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras 10.




இந்தியாவில் தயாரித்தது. L. 244-50 TM

REGD. NO. M. 4392

*Registered as a newspaper in Ceylon*



# நா. . . . . . . . . . . . . . . . . . ளுக்கு நாள் அதிக தெளிவான, எழிலோங்கும் சருமம்

ரெக்ஸோனுவிலுள்ள **கேடில்** இந்த அற்புத வேலையைச் செய்யட்டும்

ரெக்ஸோனுவின் கேடில் கலந்த நுரையை உங்கள் சருமத்தில் நன்றாகத் தேய்த்து, பிறகு கழுவுங்கள். உங்கள் சருமம் நாளுக்கு நாள் அதிக மழமழப்பும், தெளிவும் பெறுவதைக் காண்பீர்கள்.




# ரெக்ஸோனு

## கேடில்* கலந்த சோப் இது ஒன்றே

* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக்கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.

R.P. 100-50 TM

ரெக்ஸோனு ப்ரொப்ரைட்டரி லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரித்தது.